Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 20 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 சித்திரை 08 செவ்வாய்க்கிழமை (21.04.2015) பக்கங்கள் 20 ஓசை – 203

# நாடாளுமன்றில் களேபரம்



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் முன்னால் ஆஜராகுமாறு விடுக்கப்பட்ட அழைப்பையடுத்து நேற்று நாடாளுமன்றத்தில் பெரும் அமளிதுமளியும், எதிர்ப்புப் போராட்டமும் இடம்பெற்றது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை இலஞ்சம், ஊழல் மற்றும் மோசடி விசாரணை ஆணைக்குழுவிற்கு அழைத்துள்ளமை தொடர்பில் மகிந்த ராஜபக்ஷ ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேற்படி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலர் சபைக்கு நடுவில் அமர்ந்து இன்றே தமக்கு ஒரு தீர்வு வேண்டும் எனக் கூறி கோஷமிட்டனர்.

19 ஆம் பக்கம் பார்க்க

## மகிந்தவை அழைத்தது தவறு



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை, விசாரணைக்கு அழைத்த இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் பணிப்பாளர் தில்ருக்சி டயஸ் விக்ரமசிங்கவை நாடாளுமன்றத்தில் முன்னிலையாகுமாறு நாடாளுமன்ற சபாநாயகர் அழைப்பாணை விடுத்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவுக்கு அழைப்பாணை விடுத்த இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு, எதிர்ப்புத் தெரிவித்து நாடாளுமன்றத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின்

19 ஆம் பக்கம் பார்க்க

## அது தவறு இல்லை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அழைத்து விசாரணை நடத்துவதில் என்ன பிழை என பிரதமர் ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்றில் கேள்வி எழுப்பியுள்ளார்.

இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவின் தீர்மானம் சுயாதீனமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சாட்சியமொன்றை பெற்றுக் கொள்வதற்காக இவ்வாறு மகிந்த அழைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவின் நடவடிக்கைகளில் அரசாங்கம் தலையீடு செய்யாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நடவடிக்கையில் ஏதேனும் பிரச்சினை இருந்தால் முன்னாள் ஜனாதிபதி, சட்டத்தரணியின் ஊடாக உரிய நடவடிக்கை எடுக்க முடியும் என அவர் [illegible]



## ஆஜராக முடியாது



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவின் விசாரணைகளில் பங்கேற்க மாட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 24 ஆம் திகதி ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு மகிந்தவிற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. எனினும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த விசாரணைகளில் பங்கேற்க மாட்டார் என

19 ஆம் பக்கம் பார்க்க

## நற்பெயருக்கு களங்கம்



(கொழும்பு)

தமது நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்த முயற்சிக்கப்படுவதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 23 ஆம் மற்றும் 27 ஆம் திகதிகளில் இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவினர் வாக்குமூலமொன்றை பதிவு செய்து கொள்ள தம்மை அழைத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

நாட்டுக்காக அளப்பரிய சேவையை ஆற்றிய தமது நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்த முயற்சிக்கப்படுகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆளும் கட்சியின் ஒரு சில தரப்பினர் இவ்வாறு முயற்சித்து வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார். அரச சேவையில் இணைந்து

19 ஆம் பக்கம் பார்க்க



## தேர்தல் முறையில் மாற்றம் சிறுபான்மையினரை பாதிக்க அனுமதிக்க முடியாது

சிறுபான்மைக் கட்சிகளையும், சிறு கட்சிகளையும் பாதிக்காதவாறு தேர்தல் சீர்திருத்தத்தை பெரும்பான்மைக் கட்சிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். இந்த நோக்கத்திற்காக உரிய அனைத்துத் தரப்பினரும் ஒன்றுபட்டிருப்பது வரவேற்கத்தக்க விடயமாகும். சிறுபான்மை மக்களின் பிரதிநிதித்துவங்களைப் பாதுகாப்பதற்கு நாம் தொடர்ந்தும் குரல் கொடுத்து, உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வோம்

19 ஆம் பக்கம் பார்க்க

# கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் விடுதி வசதி இன்றி நெருக்கடி

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் அங்கு பயிற்சியை மேற்கொண்டுவரும் ஆசிரிய மாணவர்களுக்கு விடுதி வசதி இல்லாமையின் காரணமாக அவர்கள் பெரிதும் இன்னல்களுக்குள்ளாகியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கலாசாலையில் 657 பேர் ஆசிரியர் பயிற்சியை மேற்கொண்டு வருகின்றனர். இவர்களில் ஆண்கள் 186 பேரும் பெண்கள் 471 பேரும் அடங்குவர். இவர்கள் அனைவரும் கலாசாலைக்கு வெளியே தங்கியிருப்பவர்களாவர். சிலர் தமது வீடுகளிலிருந்து வந்து செல்கின்றனர். தமிழ், முஸ்லிம் மாணவர்களே இங்குள்ளனர்.

பலர் வெளிமாவட்டங்களிலிருந்து வந்து பயிற்சியை மேற்கொள்கின்றனர். விடுதி வசதி இல்லாததன் காரணமாக கலாசாலைக்கு வெளியே தங்குமிடம் எடுத்துப் பலத்த சிரமங்களுக்கு மத்தியில் இவர்கள் கல்வி கற்று வருகின்றனர். இவர்களது உணவுப் பிரச்சினையுடன் இவர்களுக்கான பாதுகாப்பும் கேள்விக்குறியாகவே தென்படுகின்றது. இவ்வாசிரிய பயிற்சி மாணவர்களில் பலர் கல்யாண மானவர்கள். பிள்ளைகளும் இவர்களுக்கு உண்டு.

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு மாணவர்கள் அனுமதிப்பது நிறுத்தப்பட்டதினால் அங்கு அனுப்பப்பட வேண்டிய மாணவர்களும் சேர்த்தே கோப்பாய் கலாசாலையில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

தற்போது கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் காணப்படும் விடுதி மிகவும் சேதமடைந்து காணப்படுகிறது. ஓடுகள் உடைந்தும், மரங்கள் பழுதடைந்தும், மழை காலங்களில் மழை நீர் ஒழுகி விடுதிகளுக்குள் நீர் நிறைந்து நிற்கும் அபாயமும் தென்படுகின்றது. படுக்கைகள் இல்லை. விடுதி மிகவும் பழுதடைந்தே தெரிகிறது.

இவ்வளவு அதிகளவிலான மாணவர்கள் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் இருந்தும் இவர்களுக்கான விடுதி வசதிகள் அங்கு செய்து கொடுக்கப்படாமல் இருப்பது பெரிதும் மனத்தாங்கலை மாணவர்களுக்குக் கொடுப்பதாக உள்ளது எனத் தெரிகிறது.

பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு மாணவர்கள் அனுமதிக்கப்படாமையினால் அது வெறிச்சோடிக் கிடக்கிறது. மீதமாக யாழ்ப்பாணம் கல்வியியற் கல்லூரியிலும், கோப்பாய் ஆசிரிய கலாசாலையும் மட்டுமே யாழ்ப்பாணத்தில் ஆசிரிய பயிற்சியை மேற்கொள்ளும் கல்விக் கூடங்களாகும்.

ஆசிரிய மாணவர்களின் பல்வேறு நலன் கருதி அவர்களுக்கான விடுதி வசதி கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் செய்து கொடுக்கப்பட வேண்டியது அவசியமும், அவசரமானதுமாகும். இதற்கான உடனடி நடவடிக்கைகளை கல்வி சார் சமூகம், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், நலன் விரும்பிகள் போன்றோர் செய்ய வேண்டியது அவர்களின் கடமையாகும் எனக் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (137)

# நீர்வேலி, கோப்பாய் பகுதிகளில் பார்த்தீனியச் செடிகள்

நீர்வேலி, கோப்பாய் போன்ற பகுதிகளில் பார்த்தீனியச் செடிகள் வெற்றுக் காணிகளிலும் வீதிகளின் இரு மருங்களிலும் வளர்ந்து காண்படுகின்றன.

பிரதான போக்குவரத்து வீதியாகக் காணப்படும் இப்பகுதிகளில் வளர்ந்து காணப்படும் பார்த்தீனியச் செடிகள் பூத்துக் காணப்படுகின்றன. இதனால் போக்குவரத்தை மேற்கொள்ளும் பல்வேறு தரப்பினரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இதனை அழிக்காதுவிட்டால் இது ஏனைய இடங்களையும் ஆக்கிரமிக்கும். எனவே, சம்பந்தப்பட்ட தரப்பினர் இப்பார்த்தீனியச் செடிகளை அழிக்கும் நடவடிக்கைகள் தொடர்பில் அக்கறை எடுக்க வேண்டும் எனவும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (85)

# இலவச கண்பரிசோதனையும் மூக்குக் கண்ணாடி வழங்கலும்

நல்லூர் சங்கிலியன் மன்றத்தில் இலவசக் கண் பரிசோதனையும், மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வும் எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ். போதான வைத்தியசாலையின் கண் சிகிச்சை நிபுணர்கள் பார்வைக் குறைபாடுடையோருக்கான கண் பரிசோதனையை மேற்கொள்ளவுள்ளனர். நல்லூர் சங்கிலியன் மன்றத்தின் 70ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இம்மன்றத்தின் 10ஆவது சமூக நலத் திட்டத்தின் கீழ் இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது. சங்கிலியன் மன்றக் கட்டட மண்டபத்தில் இக்கண் பரிசோதனையும் கண்ணாடி வழங்கலும் நடைபெறும் இந்நிகழ்வில் கலந்துகொண்டு பயன்பெற்றுக் கொள்ளுமாறு பொதுமக்களை சங்கலியன் மன்ற நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது. (137)

# குருகுலம் நிலையத்தில் இலவச தியானப் பயிற்சி

(திருநெல்வேலி)

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி, பருத்தித்துறை வீதியிலுள்ள குருகுலம் நிலையத்தில் இலவச தியானப் பயிற்சி நடைபெற்று வருகின்றது. ஒவ்வொரு செவ்வாய்க்கிழமைகளிலும் பிற்பகல் 3.30 மணியிலிருந்து மாலை 500 மணி வரை இப்பயிற்சி இடம்பெறுகிறது. மனிதருக்குள் ஆழ்ந்திருக்கும் குண்டலினி எனப்படும் இறை சக்தியினை விழிப்படையச் செய்வதன் மூலம் சகஜயோக ஒரு தனித்துவமான, எளியதியான முறையினை வழங்குகின்றது. இச்சக்தியானது சக்கரங்கள் எனப்படும் சக்தி மையங்களை சமநிலைப்படுத்தி அதற்கு சக்தியூட்டுகிறது. சிறுவர்கள் முதல் பெரியவர்கள் அனைவருக்கும் இது பயனுடையதாகும். சகஜயோக என்னும் இத்தியானப் பயிற்சியை ஸ்ரீ மாதாஜி நிர்மலாதேவி என்பவர் தோற்றுவித்தார். அமைதி, அன்பு, ஆனந்தம், உண்மை பெற்றிட இத்தியானப் பயிற்சியில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சகஜ யோகா நிலையம் கேட்டுக் கொண்டுள்ளது. (137)

## DDTV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| நேரம் | செவ்வாய்க்கிழமை |
|---|---|
| Am 05.00 | ஆலய தரிசனம் (பக்திப்பாடல்கள்) |
| Am 07.00 | காலைக்கதிர் |
| Am 08.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00 | SMS Time (Live) |
| Am 09.58 | காலை செய்திகள் |
| Am 10.00 | Hello DD |
| Am 10.30 | தெரிந்தால் சொல்லுங்கள் |
| Am 11.00 | சிரிக்க சிரிக்க |
| PM 12.00 | அதிர்வுகள் |
| PM 12.30 | அதிர்வுகள் |
| PM 01.20 | பாடல்கள் |
| PM 01.30 | திரைப்படம் |
| PM 03.58 | மாலை செய்திகள் |
| PM 04.00 | மழலைகள் |
| PM 05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | அதிர்வுகள் |
| PM 08.00 | பிரதான செய்தி |
| PM 08.30 | Hello DD |
| PM 09.00 | திரைப்படம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |

# ஏற்று நீர்ப்பாசன பயிர் செய்கையில் ஈடுபடாதோருக்கு சிறுபோக அனுமதி இல்லை

### கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் தகவல்

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் ஏற்றுநீர்ப் பாசனத்திட்டத்தின் கீழ் பயிர்ச்செய்கையில் ஈடுபடாதவர்களுக்கு எதிர்காலத்தில் அக்கராயன்குளத்தின் கீழான சிறுபோக நெற்செய்கைக்கான அனுமதியினை வழங்குவதில்லை



என கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் நவரத்தினம் சுதாகரன் தெரிவித்தார்.

ஸ்கந்தபுரம் ஏற்றுநீர்ப்பாசனத்திட்டம் முழுமையான செயற்பாடுகள் இடம்பெறாமை தொடர்பாக கருத்துத்தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அக்கராயன்குளத்திலிருந்து ஸ்கந்தபுரத்திற்கான ஏற்று நீர்ப்பாசனத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படுகின்றபோதிலும் ஏற்று நீர்ப்பாசனத்திட்டத்தின் கீழுள்ள காணிகளில் சில குடும்பங்கள் வசிக்காமையினால் ஏற்றுநீர்ப்பாசனத்திட்டத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் இடர்கள் காணப்படுகின்றன.

இதன் காரணமாக ஏற்று நீர்ப்பாசனத்திட்டத்தினை சிறப்பாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமானால் முதலாவதாக அக்கராயன்குளத்தின் கீழ் குறித்த காணி உரிமையாளர்களின் சிறுபோக உரிமத்தினை தடைசெய்வது உட்பட முக்கியமான முடிவுகளை எதிர்காலத்தில் எடுக்கவுள்ளதாகவும் தெரிவித்தார். (160)

# மஹோற்சவம்

(அச்சுவேலி)

யாழ். வண்ணை ஸ்ரீகாமாட்சி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் திருவிழாக்கள் இடம்பெறவுள்ளன.

இத்திருவிழாக்களின் வரிசையில் எதிர்வரும் 29ஆம் திகதி புதன்கிழமை கைலாச வாகனத் திருவிழாவும், 30ஆம் திகதி சப்பறத் திருவிழாவும் மறுநாள் முதலாம் திகதி வெள்ளிக் கிழமை குதிரை வாகனத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

அத்துடன் எதிர்வரும் 2ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெற்று எதிர்வரும் 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 7.30 மணிக்கு பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறவுள்ளதாக ஆலய தர்மகர்த்தமா சபையினர் அறிவித்துள்ளனர். (85)



கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமை புரிந்த க.இராஜசிவம், திருப்பதிகாந்தன், அலுவலக உதவியாளர் விமலதாஸ் ஆகியோருக்கு நிர்வாக கிளையில் நடைபெற்ற பிரிவுபசார விழாவின்போது... (90)

# வளமான சமூகத்தை உருவாக்குவதன் மூலம்

# சவால்களை எதிர்கொண்டு வெற்றிகொள்ளலாம்

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே.வி.குகேந்திரன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

சமூகத்தில் கலை நிகழ்வுகளை நடாத்துவதானது இளம் சமூகத்தினரிடையே ஓர் ஐக்கியத்தை உருவாக்கி அதனூடாக சமூகத்தினது விழுமியங்களையும் கலாசாரங்களையும் தீர்க்கசிந்தனையான பதிவுகளுடன் எமது இளம் சமூகத்தினரை உருவாக்கிக்கொள்ள முடியும். அத்தகைய ஒரு வழமான சமூகத்தை உருவாக்குவதனூடாக எத்தகைய சவால்களையும் எதிர்கொண்டு தமது வாழ்வியலை வெற்றிகரமானதாக நகர்த்திச் செல்லும் மனோதிடத்தை எமது இளம் சமூகத்திற்கு வித்திட காரணமாகவும் பாரம்பரிய கலை நிகழ்வுகள் அமைகின்றன என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளருமான கே.வி.குகேந்திரன் தெரிவித்துள்ளார்.

அரியாலை மேற்கு காந்தி சனசமூக நிலையத்தின் 66 ஆவது அகவையை முன்னிட்டு கலை விழாவும் விளையாட்டு நிகழ்வுகளும் கடந்த 14,15,16,17 ஆகிய தினங்கள் தலைவர் விஜிகாந்தன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஒருங்கிணைப்பாளர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரசியல் பதவிகளை நிரந்தரமான ஒரு சொத்தாக பலர் நினைக்கின்றனர். அது மனிதனின் வாழ்வியல் காலச்சுற்றோட்டத்தின் ஒரு பகுதியாகவே இருக்கின்றது என்பதை பதவிகளைப் பெற்றுக்கொள்ளும் ஒவ்வொருவரும் சிந்திப்பார்களானால் அவர்கள் பிரதிநிதித்துவப் படுத்தும் பகுதிகளின் அனைத்துத் தேவைகளும் இலகுவாக பூரணப்படுத்தப்பட்டுவிடும்.

மக்களது ஆதரவு எத்தகையதாக இருந்தாலும் எமது கட்சியின் செயற்பாடுகள் மக்கள் நலன் சார்ந்ததாகவே என்நாளும இருக்கும். நாங்கள் தேர்தலுக்காக. கூட்டுச்சேர்ந்து கொள்வதும் இல்லை தேர்தலையொட்டி தெருவுக்குவந்து நாடகம் நடாத்தும் நடிகர்களும் அல்லர். மக்களுக்கான சேவைகளை நாளாந்தம் செய்துவரும் ஒரு மக்கள் பலங்கொண்ட அரசியற் போராட்ட அமைப்பாகவே இருக்கின்றோம்.

மாற்றங்களானது நிரந்தரமான ஒன்றல்ல. அது நாளாந்தம் மாறிக கொண்டிருக்கின்றது. தற்போதைய எமது அரசியல் நகர்வுகளும் அப்படியானதாகவே உள்ளது. மிகவிரைவில் இலங்கை அரசியலிலும் சிறப்பானதொரு மாற்றம் வரவுள்ளது. அந்த மாற்றமானது மீண்டும் தமிழ் மக்களுக்கானதாக அமையும் என்பத்துதான் உண்மை. அதுவரை பொறுமைகாப்பது காலத்தினது தேவையுமாகும்.

இப்பகுதியானது எமது கட்சி குடாநாட்டில் கால் பதித்த காலத திலிருந்து எமது சேவைகளை அதிகம் பெற்றுக்கொண்ட ஒரு பகுதியாகும்.

இப்பகுதி மக்களும் எமது கட்சியை மிகவும் நேசிக்கின்றனர். நாமும் இப்பகுதி அபிவிருத்திகளுக்கு தொடர்ந்தும் உறுதுணையாக இருப்போம் என்றார்.

இந்த நிகழ்வில் முன்னாள் நகரசபை உறுப்பினர் மங்களநேசன், சிவில் சமூக தலைவர் தர்மகுலசிங்கம், மனுவல் வித்தியானந்தநேசன் ஆகியோருடன் மேலும் பல முக்கியஸ்தர்களும் நூற்றுக்கணக்கான மக்களும் கலந்துகொண்டனர்.

# புதிய சூசையப்பர் ஆலயம் மன்னார் ஆயரால் திறப்பு



(மன்னார்)

மன்னார் நானாட்டான பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அச்சங்குளம் கிராமத்தில் புதிதாக அமைக்கப்பட்ட தூய சூசையப்பர் ஆலயம் மன்னார் மறைமாவட்ட ஆயர் அதி வணக்கத்திற்குரிய இராயப்பு ஜோசேப்பு ஆண்டகையினால் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை அபிசேகம் செய்யப்பட்டு திறந்துவைக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் காலை 7.15 மணியளவில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசேப்பு ஆண்டகையினால் அபிஷேகம் செய்து திறந்து வைக்கப்பட்ட நிலையில் ஆயருடன் இணைந்து மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை, நானாட்டான் பங்குத்தந்தை அருட் தந்தை அருள் ராஜ் குரூஸ் ஆகியோர் இணைந்து கூட்டுத்திருப்பலியை ஒப்புக் கொடுத்தனர்.

அதனைத்தொடர்ந்து மன்னார் மறைமாவட்ட ஆயரின் 75 ஆவது பிறந்த தினத்தை அச்சங்குளம் தூய சூசையப்பர் ஆலயத்தில் குருக்கள் மற்றும் பங்கு மக்கள் ஆகியோர் இணைந்து கொண்டாடினர். இதன்போது ஆயர் கேக் வெட்டி பிறந்த நாளை சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

# இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளர் ஈ.பிரேமராஜன் இலங்கை வங்கி தலைமையகத்தால் சிரேஷ்ட முகாமையாளராகப் பதவி உயர்த்தப்பட்டு இலங்கை வங்கி யாழ்.பிராந்திய கணக்காய்வுப் பிரிவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு இலங்கை வங்கி முகாமையாளர் சிவராஜா ஆனந்தராஜா பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளராக இடமாற்றம் பெற்றுள்ளார். (01)

# அறநெறிப்பாடசாலைக் கட்டடம் திறப்பு



மன்னார் காட்டாஸ்பத்திரி சிறி முத்துமாரியம்மன் அறநெறிப் பாடசாலை கட்டடத்திறப்பு விழா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை காலை மன்னார் மாவட்ட அறநெறிப் பாடசாலைகளின் இணையத்தின் தலைவர் சிவசிறி மஹா தர்மகுமார குருக்கள் தலைஓமயில் இடம் பெற்றது.

குறித்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளும்மன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், சிறப்பு விருந்தினர்களாக மன்னார் பிரதேச செயலாளர் கே.எஸ்.வசந்தகுமார், இந்து மகா சபையின் தலைவர் எஸ்.சி.இராமகிருஸ்ணன் மற்றும் மன்னார் மாவட்ட இந்து, முதியோர் நற்பணி மன்றத்தின் தலைவர் பவமொழி பவன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். இதன் போது குறித்த அறநெறிப் பாட்சாலை கட்டடம் விருந்தினர்களினால் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டதோடு மாணவர்களுக்கும், முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கிலுள்ள பள்ளிவாசல்களை உடனடியாக பதிவுசெய்ய வேண்டும்



கடந்த இரு தசாப்த கால யுத்தம் நிறைவுற்று வடமாகாண முஸ்லிம்கள் தமது சொந்த நிலங்களில் மீள்குடியேறி வருகின்ற நிலையில் வடக்கில் உள்ள அனைத்துப் பள்ளிவாசல்களையும் உடனடியாக பதிவு செய்து கொள்ளும் படி வடக்கு முஸ்லிம் பிரஜைகள் குழுவின் தலைவரும் வடமாகாண முஸ்லிம் சமய கலாசார அமைச்சரின் இணைப்பாளருமான மௌலவி ஏ.எச்.எம்.முபாரக் ரஷாதி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த முஸ்லிம்கள் தமது வணக்க வெளிப்பாடுகளை மேற்கொள்ளும் சமய ஸ்தலமாக பள்ளிவாசல்களையே பேணிப் பாதுகாத்து வந்தார்கள். எனினும் 1990 இல் வடக்கு முஸ்லிம்கள் உடுத்திய உடையுடன் பலவந்தமாக வெளியேற்றப் பட்டதனால் அனைத்து பள்ளிவாசல்களும் அழிக்கப்பட்டு சிதைந்த நிலையில் காணப்படுவதால் அவற்றை மீள நிர்மாணிக்க வேண்டிய தேவை உள்ளது.

அவ்வாறே முன்னர் கட்டப் பட்ட பள்ளிவாசல்களையும் தற்போது புதிதாக கட்டப்பட்டுவரும பள்ளிவாசல்களையும் உடனடியாக முஸ்லிம் கலாசார அமைசசில் பதிவு செய்து கொளளும் படி வேண்டுகிறோம். மேற்படி பதிவுக்கான விண்ணப்பங்களை அல்லது மேலதிக விபரங்களை மன்னார் மூர்வீதியில் அமைந்துள்ள வடக்கு முஸ்லிம் பிரஜைகளுக்கான குழுவின் தலைமைச்செயலகத்தில் பெற்றுக் கொள்ளமுடியும் என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிளிநொச்சியில் 3 மாதங்களில் 42 வீதி விபத்துக்களில் 11 பேர் பலி

இவ்வாண்டு ஜனவரி மாதம் முதல் மார்ச் மாதம் வரையான மூன்று மாத காலத்தில், கிளிநொச்சி மாவட்டத்தில் 42 வீதி விபத்துக்கள் இடம் பெற்றுள்ளதுடன் பதினொரு பேர் உயிரிழந்துள்ளதாக கிளிநொச்சி மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எட்மன் மகேந்திர தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியிலுள்ள தனது அலுவலகத்தில் ஊடகவியலாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

2012ஆம் ஆண்டு 142 விபத்துக்கள் இடம் பெற்றுள்ளதுடன் அதில் 38 பேர் உயிரிழந்துள்ளதுடன் 2013ஆம் ஆண்டு இடம் பெற்ற 198 விபத்துக்களில் 22 பேர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன், 2014ஆம் ஆண்டு இடம்பெற்ற 198 விபத்துக்களில் 21 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், 2015 ஆம் ஆண்டின் கடந்த மூன்று மாதங்களில் மட்டும் இடம்பெற்ற 42 விபத்துக்களில் 11 பேர் உயிரிழந்துள்ளமை கடந்த காலத்தோடு ஒப்பிடுகையில் அதிகரித்த தொகையாகும். எனவே வீதி விபத்துக்களை தடுக்கும் வகையில் விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது கிளிநொச்சியின் பிரதான வீதிகள் மட்டுமன்றி உள்ளக வீதிகளிலும் போக்குவரத்து பொலிஸார் விசேட நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் எனக்குறிப்பிட்ட சிரேஷட பொலிஸ் அத்தியட்சகர் மகேந்திர, போக்குவரத்து மற்றும் வீதி ஒழுங்கு விதிகளை மீறிய 7,125 சாரதிகளுக்கு எதிராக கடந்த மூன்று மாதங்களில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை போக்குவரத்து மற்றும் வீதி ஒழுங்கு விதிகளை மீறிய குற்றச்சாட்டில் 2012 ஆம் ஆண்டு 17608 வழக்கு பதிவுகளும், 2013 ஆம் ஆண்டு 17765 வழக்குகளும், 2014 ஆம் ஆண்டு 26167 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன எனவும் குறிப்பிட்டார். (29)

நம்பிக்கை இல்லாத இடத்தில் முயற்சியும் இருக்கமுடியாது.
- ஜான்சன்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628. கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811. thinamurasu@live.com
Online : www.emurasu.com

## ஆய்வு முழவுகளும் நாமும்!

மனிதர்கள் பழக்கத்திற்கு அடிமையானவர்கள். குடி, சிகரெட் என்று தீய பழக்கங்கள் மட்டும் அவனை அடிமைப்படுத்துவதில்லை. நல்ல பழக்கங்கள், நல்லதோ தீயதோ ஏதென்று தெரியாத பழக்கங்கள் போன்றவற்றையும் கூட தொடர்ந்து செய்து வந்துவிட்டால் அதை நிறுத்த முடியாமல் செய்துகொண்டிருப்பது மனிதர் வழக்கம்.

நம் சிந்தனையும் அப்படித்தான். பழகிய சிந்தனைகள் நம்பிக்கைகளிலிருந்தும் மீள முடியாமல் பெரும்பாலும் அதற்குள் வட்டமடித்தே வாழ்ந்து முடித்துவிடுகிறோம். நாம் சிந்திக்கும் தடத்தை மாற்ற முடிவதில்லை அல்லது மாற்ற விரும்புவதில்லை.

பழகிய பாதையிலேயே போய்க்கொண்டிருப்போம். புதிய பாதைகளில் திரும்பி நடப்பவர்களைப் பார்த்தாலே நமக்கு ஒவ்வாமைதான் வருகிறது.

பழகியதிலிருந்து நம்மால் மீள முடிவதில்லை. நம் உணவுப் பழக்கம் கூட அப்படித்தான். காலை, மதியம், இரவு என்று மூன்று வேளை சாப்பிடுவதென்று பழக்கப்பட்டிருக்கிறோம்.

பழக்கப்பட்டதாலேயே அந்தந்த நேரத்திற்குப் பசியெடுப்பதும் பழக்கமாகிவிட்டது. இப்போது இதற்கும் ஆய்வு நடத்தி விட்டார்கள். இப்படித்தான் சாப்பிட வேண்டும் என்ற எந்த ஒரு கட்டாயமும் மனிதருக்கில்லை என்கிறது அந்த ஆராய்ச்சி.

"உயிர் வாழ வேண்டுமானால் தினமும் மூன்று வேளை சாப்பிட வேண்டும் என்று நம்பிக் கொண்டிருக்கிறோம். அப்படி எந்த அவசியமும் கிடையாது; மூன்று வேளை சாப்பிட்டு பழகிவிட்டோம், அவ்வளவுதான்" என்று இதுபற்றி ஆய்வு செய்த அந்த விஞ்ஞானி கூறுகிறார்.

பிறகு எத்தனை வேளை சாப்பிட வேண்டும்? எத்தனை முறை என்ற கணக்கெல்லாம் இல்லை. எவ்வளவு குறைவாக சாப்பிடுகிறோமோ அவ்வளவுக்கு நல்லது என்கிறார் மைக்கல் மோஸ்லி என்ற இந்த விஞ்ஞானி. அவர் சொல்கிற காரணங்கள் மறுக்கக்கூடியதாக இல்லை.

உடல் உறுப்புகள் செயற்பட சக்தி தேவை. அதை வழங்குவது நாம் சாப்பிடும் உணவு. அதில் மாப்பொருள், புரதம், கொழுப்பு ஆகியவை இருக்கின்றன. உணவு சமிபாடடையும்போது இந்த சத்துக்கள் உடலின் இயக்கத்துக்கு எரிசக்தியாக மாறுகிறது. அதிகமான சத்துக்கள் கிடைக்கும்போது உடலில் பல பிரச்சினைகள் உண்டாகிறது என்கிறார் மோஸ்லி.

இந்த சத்துக்கள் கலோரி அளவால் அளவிடப்படுகிறது. ஒரு கிராம் புரதம் அல்லது மாப்பொருளில் 4 கலோரி என்றால் கொழுப்பில் 9 கலோரி.

நிறைய சாப்பிடும்போது கலோரிகள் அதிகமாகும். உடலின் தேவைக்கு மேலதிகமான கலோரிகள் கொழுப்பாக மாறி உடலில் தங்கி தீங்கு விளைவிக்கும். கலோரிகள் குறைந்த உணவு வகைகளை சாப்பிடும் அமெரிக்கர்களும் ஜப்பானியர்களும் மற்றவர்களைவிட அதிக காலம் உயிர் வாழ்வதன் இரகசியம் இதுதான் என்கிறார் அவர்.

உடல் உழைப்பு, உடற்பயிற்சி இல்லாதவர்களுக்கு தேவைக்கு மீறிய உணவால் வரக்கூடிய ஆபத்து அதிகம். பசி எடுப்பதாக நினைத்துக் கொண்டு மூன்று வேளையும் சாப்பிடுபவர்கள் அந்தப் பழக்கத்தில் இருந்து வெளியே வரவேண்டும் என்கிறார் மோஸ்லி.

முடியாதவர்கள் அவ்வப்போது உண்ணாவிரதம் இருந்தால் நல்லது என்பது அவருடைய யோசனை.

உடல் பருமனைக் குறைப்பதற்கு, மூன்று வேளைக்குப் பதிலாக ஆறு வேளை அதே உணவைச் சாப்பிடலாம் என ஒருபக்கம் மருத்துவர்கள் பரிந்துரை செய்து வருகையில், கலோரிகளில் கவனம் செலுத்தினால் மூன்றுவேளைகூட தேவையில்லை என்கிறது இந்த யோசனை.

ஆய்வுகளாலேயே நம்மை அலைக்கழிப்பார்கள் போலிருக்கிறது!

- ஆசிரியர்

# யாழ்.குப்பிளான் தெற்கில் மர்ம நபர்களின் நடமாட்டம்

## அச்சத்தில் மக்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குப்பிளான் தெற்கு வீரமனைப் பகுதியில் மர்மநபர்களின் நடமாட்டம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணிக்கு அவதானிக்கப்பட்டுள்ளது. இதனால் அப்பகுதிப் பொதுமக்கள் மத்தியில் ஒரு விதமான பதற்றம் நிலவியது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

கடந்த சில தினங்களுக்கு முன்னர் குப்பிளான் வடக்குப் பகுதியில் இரவு வேளையில் வயோதிபத் தம்பதியினரை ஆயுத முனையில் மிரட்டி பல இலட்சம் ரூபா பெறுமதியான நகைகளும், பணங்களும் கொள்ளையிட்டுச் செல்லப்பட்டது.

இதனால் குப்பிளான் பகுதியில் பதற்றமான சூழ்நிலை நிலவி வந்தது. இந்த நிலையில் பொது மக்கள் இரவு வேளையில் விழிப்புடனிருந்து வருகின்றனர். இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு 8 மணிக்கு வீரமனைப் பகுதியில் நாய்கள் தொடர்ந்து குரைத்த வண்ணமிருந்தது.

இதன் போது வெளியே சென்று பார்த்த போது குறித்த பகுதியைச் சேர்ந்த சிறுவனொருவனால் புகையிலைத் தோட்டமொன்றுக்குள் பதுங்கியிருந்த மர்மநபர்கள் இருவர் தப்பியோடியமை அவதானிக்கப்பட்டது.

இதனால் குறித்த பகுதியைச் சேர்ந்த மக்கள் சிலர் ஒன்றிணைந்து திருடர்களைத் தேடித் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். இதன் போது திருடர்கள் பதுங்கியிருந்ததாகக் கருதப்படும் புகையிலைத் தோட்டத்திலிருந்து சோற்றுப் பார்சலொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

முன்னதாக இந்த இடத்தில் சந்தேகத்துக்கிடமான முறையில் மோட்டார் சைக்கிளொன்று தரித்து நின்றதையும் பொது மக்கள் சிலர் அவதானித்துள்ளனர்.

குறித்த மர்ம நபர்கள் திருட்டு நோக்கத்துடனேயே வந்திருக்கலாமெனவும், அது பலனளிக்காத நிலையில் தப்பிச் சென்றிருக்கலாமெனவும் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

குப்பிளான் தெற்குப் பகுதியில் கடந்த சில தினங்களாக நள்ளிரவு வேளைகளில் மர்ம நபர்களின் நடமாட்டத்தை உணர முடிவதாகத் தெரிவிக்கும் பொது மக்கள் இதனால் தாங்கள் அச்சத்துடன் வாழ வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

# பீகொக் மாளிகையில் குடியேறுவாரா மகிந்த?

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ராஜகிரியவில் அமைந்துள்ள பீகொக் மாளிகையில் குடியேற மாட்டார் என கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஜோதிடர்களின் ஆலோசனைக்கு அமைய வீட்டின் எதிரில் அமைக்கப்பட்டிருந்த நீச்சல் தடாகம் கடல் மணலால் நிரப்பப்பட்டது.

வீட்டின் கூரைகளிலும் மாற்றங்கள் செய்யப்பட்டன. வீட்டிற்கு ஆசி வேண்டி பல்வேறு பூசை வழிபாடுகளும் நடத்தப்பட்டுள்ளன.

இன்று இந்த வீட்டில் குடியேறுவதற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ திட்டமிட்டிருந்தார். வாய்ப்பேச்சு அளவில் வீட்டில் குடியமர்ந்தாமல் ஒப்பந்தமொன்றை கைச்சாத்திட வீட்டின் உரிமையாளர் ஏ.எஸ்.பி லியனகே முன்வைத்த யோசனைக்கு இதுவரையில் மகிந்த உரிய பதிலளிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, ஏ.எஸ்.பி லியனகேயிடம் புலனாய்வுப் பிரிவினர் அண்மையில் விசாரணை நடத்தியுள்ளனர். இந்த வீடு கிடைக்காவிட்டால் முன்னாள் ஜனாதிபதி நாரஹேன்பிட்டி அபயராமயவை பயன்படுத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது. பீகொக் மாளிகையில் குடியேறுவது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதியோ, ஏ.எஸ்.பி லியனகேயோ எவ்வித கருத்துக்களையும் உத்தியோகபூர்வமாக வெளியிடவில்லை.

# முதியோர் கொடுப்பனவுத் திட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்

## அமைச்சர் பீ.ஹெறிசன் தெரிவிப்பு

முதியோர்களுக்கு கொடுப்பனவு வழங்கும் திட்டம் தொடர்ந்தும் சமூக சேவைகள் சமூக நலன்புரி, கால்நடைவளர்ப்புத்துறை அமைச்சினால் முன்னெடுக்கப்படும் என அமைச்சர் பீ.ஹெறிசன் தெரிவித்துள்ளார்.

முதியோருக்கான கொடுப்பனவு வழங்கப்பட்டு வருவதுடன் கிடைக்காதோருக்கும் கொடுப்பனவுகளை வழங்க அதிகாரிகள் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றனர்.

கொடுப்பனவுகளை பெறாதோர் பற்றிய விபரங்கள் பிரதேச செயலர் பிரிவுகள் மட்டத்திலிருந்து சமூக சேவைகள் அதிகாரிகள், சிரேஷ்ட பிரஜைகள் மேம்பாட்டு அதிகாரிகளால் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

3000 ரூபாவுக்கு குறைந்த வருமானம் பெறுவோர் மற்றும் 70 வயதுக்கு மேற்பட்டோர் 3000 ரூபாவினை மாதாந்தக் கொடுப்பனவாகப் பெறுவர், மேலும் 3000 ரூபா கொடுப்பனவு தொடர்பான மேலதிக விபரங்களை கிராம சேவையாளர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

இவ்வாண்டில் நான்கு இலட்சத்து அறுபதாயிரம் முதியோர்களுக்கு கொடுப்பனவினை வழங்குவதற்கு தேவையான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# தொழில்நுட்ப மாற்றுப்பயிற்சி நெறி

(கொழும்பு)

இயந்திர உதவியுடன் ஊதுபத்தி உற்பத்தி செய்யும் தொழில்நுட்ப மாற்றுப்பயிற்சி நெறி நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இப் பயிற்சி நெறியில் இயந்திர முறை அறிமுகப்படுத்தப்படுவதுடன் உற்பத்திக்கான மூலப் பொருட்களை பெற்றுக்கொள்வதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்படவுள்ளது.

இப் பயிற்சி நெறியில் கலந்து கொள்ள விரும்பும் தொழில் முயற்சியாளர்கள் யாழ். மாவட்ட இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ள முடியுமென தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பான மேலதிக தொடர்புகளுக்கு 021 222 2421 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ்.கைத்தொழில் அபிவிருத்திச் சபை பிரதிப் பணிப்பாளர் சி.சிவகெங்காதரன் தெரிவித்துள்ளார்.

# 270 இலங்கைப் பெண்கள் குவைத்தில் நிர்க்கதி

தொழில் நிமிர்த்தம் குவைத்துக்குச் சென்று அங்கு பல்வேறு துன்புறுத்தல்களுக்கு இலக்கான, சுமார் 270 இலங்கைப் பெண்கள் முகாமொன்றில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

பணி புரிந்த இடத்தில் துன்புறுத்தல்களுக்கு இலக்கானோர் மற்றும் சம்பளம் உள்ளிட்ட வசதிகள் கிடைக்காததால் நிர்க்கதியானோரும் இவர்களில் உள்ளடங்குகின்றனர். பல்வேறு துன்புறுத்தல்களுக்கு உள்ளான நிலையில், குவைத்திலுள்ள இலங்கை தூதரகத்தில் தஞ்சமடைந்த தாக முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள இலங்கையர்கள் கூறினர்.

இதன்போது தூதரக அதிகாரிகள் தம்மை தற்காலிக முகாமொன்றில் தங்கவைத்ததாக அவர்கள் குறிப்பிட்டனர்.

எனினும் இந்த முகாமில் எவ்வித வசதிகளும் இல்லாததால் அசௌகரியத்தை எதிர்நோக்கியுள்ளதாக குவைத்தில் நிர்க்கதியாகியுள்ள இலங்கை பெண்கள் குறிப்பிட்டனர்.

இதேவேளை, இந்த பெண்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் தொடர்பில், வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் நந்தபால விக்கிரமசூரியவிடம் நாம் வினவியபோது, இது தொடர்பில் விரைவில் ஆராய்ந்து பார்ப்பதாக தெரிவித்தார்.

# வடமாகாணசபையினதும் முதலமைச்சரதும் திட்டமிட்ட அரசியல் கபட நாடகம்!

■ சமரன்




> அடுத்த பொதுத் தேர்தலில் தமிழ் மக்களிடம் என்ன விடயத்தைச் சொல்லி வாக்குக் கேட்பது என்ற தர்மசங்கட நிலைமை கூட்டமைப்புக்கு உருவாகியுள்ளது. அதற்கு ஒரு தீர்வாகக் கண்டு பிடிக்கப்பட்டதும், கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டதுமே வடமாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட சிவாஜிலிங்கம் முன்மொழிந்த ‘இனப்படுகொலை’ தீர்மானம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குள் இருக்கும் வட மாகாணசபை இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களை இனப்படுகொலை செய்துள்ளதாகவும், அது சம்பந்தமாக சர்வதேச சமூகம் தகுந்த விசாரணை நடாத்தி அதற்குப் பொறுப்பானவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டும் எனக் கோரி தீர்மானம் நிறைவேற்றியது தெரிந்ததே.

இந்தத் தீர்மானம் திடீரென வந்த ஒன்று அல்ல. இந்தத் தீர்மானத்துக்கான முன்னறிவித்தலை மாகாணசபை உறுப்பினரும், இனப்பற்று என்ற விசம் அளவுக்கு அதிகமாக தலைக்கேறி சன்னதம் ஆடுபவருமான எம். கே.சிவாஜிலிங்கம் கடந்த ஆண்டே கொடுத்திருந்தார்.

அப்பொழுது தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு கொஞ்சமும் பிடிக்காத மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தார். அவர்தான் தமிழர்களை இனப்படுகொலை செய்த சூத்திரதாரி என கூட்டமைப்பு குற்றம் சாட்டியும் வந்தது.

அதன்பின்னர் இவ்வருடம் ஜனவரி 8 இல் ஜனாதிபதித் தேர்தல் நடந்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஆதரித்த மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக வந்ததுடன், கூட்டமைப்பினருக்கு மிகவும் பிடித்த ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமும் அமைந்துவிட்டது.

புதிய அரசாங்கத்தில் கூட்டமைப்பு மந்திரிப் பதவி எதனையும் பெறாதுவிட்டாலும், அரசாங்கம் அமைத்துள்ள “தேசிய நிறைவேற்று சபை” என்ற உயர் அமைப்பில் அங்கம் வகிப்பதன் மூலம் அரசாங்கத்தின் கொள்கை முடிவுகளை எடுப்பதில் கூட்டமைப்பும் பங்குபற்றி வருகிறது.

புதிய அரசாங்கம் சில முக்கியமான வேலைகளைச் செய்வதற்கு என அறிவித்திருந்த 100 நாள் வேலைத்திட்டக் காலம் ஏறத்தாழ முடிவுக்கு வந்துவிட்டது. இந்த நிலைமையில் தாம் ஆதரித்து, அதன் மூலம் பதவிக்குக் கொண்டுவந்த புதிய அரசாங்கத்துக்கு குறைந்தபட்சம் 100 நாள்கள் அவகாசம் கூடக் கொடுக்காது, அதற்கு நெருக்கடி கொடுக்கும் வகையில் கிடப்பில் இருந்த சிவாஜிலிங்கத்தின் தீர்மானத்துக்கு வட மாகாண-சபையில் வடிவம் கொடுத்து திடீ-ரென நிறைவேற்றியது பலருக்கு ஆச்சரியத்தைக் கொடுத்திருக்கும். அதுவும் முதலமைச்சர் விக்னேஸ்வரனே அதை முன்மொழிந்தும் இருக்கிறார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும், முதலமைச்சர் விக்னேஸ்வரனினதும் இந்த திடீர் நடவடிக்கை எதற்காக எனக் கூட்டமைப்பு ஆதரவாளர்களே சற்றுக் குழம்பிப் போய்த்தான் காணப்பட்டார்கள். சரி “எந்த அரசாங்கம் பதவிக்கு வந்தால் என்ன, எமது நோக்கம் தமிழ் மக்களின் உரிமையை நிலைநாட்டி அவர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதுதான்” என கூட்டமைப்பினர் “றீல்” விடுவார்களாக இருந்தால், அது சம்பந்தமாகவும் சில கேள்விகள் அவர்களிடம் கேட்க வேண்டியுள்ளது.

அதுவும் முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதியான ஒருவரே வடமாகாண சபையின் தலைமை அமைச்சராக இருக்கையில் அவர் வழங்கும் நீதி பக்கம் சாராது நிலைநாட்டப்பட வேண்டியது இன்றியமையாதது. அப்படிப் பார்த்தால், இலங்கை அரச படைகள் தமிழ் மக்கள் மீது இனப்படுகொலை செய்தது என்றால், இந்தியாவின் அமைதிப்படை இலங்கை மண்ணில் செய்த படுகொலைகளையும் குறிப்பிட்டிருக்க வேண்டும் அல்லவா?

அதுமாத்திரமல்லாமல், நீதியின் தராசைச் சரியாகப் பிடிப்பதானால், அதுவும் முன்னாள் நீதிபதியான முதலமைச்சர் அதைப் பிடிக்கும்போது பக்கம் சாரா-மல் சமநிலையாகப் பிடிக்க வேண்டும். அப்படிப் பார்த்தால் புலிகள் நடாத்திய படுகொலைகளையும் கண்டித்தே ஆக வேண்டும். தமிழ் அரசியல் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், கல்விமான்கள், சமூக சேவையாளர்கள், தொழிற்சங்கவாதிகள், மதத் தலைவர்கள், அரச நிர்வாகிகள், சக போராளிகள் கொல்லப்பட்டது உண்மை அல்லவா?

அதைப்பற்றி ஏன் வட மாகாண-சபையின் தீர்மானத்தில் வாயே திறக்கவில்லை. அரச படைகளின் இறுதி யுத்தப் படுகொலைகள் பற்றி அடிக்கடி பேசும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர், அதே இறுதி யுத்த நேரத்தில் தாம் மனிதக் கேடயமாகப் பிடித்து வைத்திருந்த பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள் குண்டுத் தாக்குதலில் இருந்து தப்பியோட முற்பட்ட போது புலிகள் அவர்களை துப்பாக்கியால் சுட்டுப் படுகொலை செய்ததை நேரில் பார்த்த எத்தனையோ சாட்சிகள் இருக்கிறார்கள்.

பலவந்தமாக அவர்களைத் தமக்குப் பாதுகாப்புக்காகப் பிடித்து வைத்திருந்து அரச படைகளின் தாக்குதலிலும் உயிரிழக்க வைத்துள்ளார்கள். எனவே இறுதியுத்த நேர மக்களின் வகைதொகையற்ற உயிரிழப்புகளுக்கு புலிகளும் காரணமாக இருந்தது பற்றி வட மாகாணசபைத் தீர்மானம் ஏன் மௌனம் சாதிக்கிறது?

உண்மை என்னவெனில் இந்தத் தீர்மானத்தை அவசரம் அவசரமாக நிறைவேற்றியதின் நோக்கமே வேறு. தற்போது ஆட்சியில் அமர்ந்துள்ள ஐ.தே.க அரசாங்கம் சட்டப்படியான அரசாங்கமோ, பெரும்பான்மை பலம் உள்ள அரசாங்கமோ அல்ல. எனவே தவிர்க்க முடியாதபடி ஒரு சில மாதங்களில் பாராளுமன்றத்தைக் கலைத்துத் தேர்தல் நடாத்த வேண்டிய நிர்ப்பந்தம் புதிய ஜனாதிபதிக்கு உள்ளது.

எனவே ஒரு தேர்தல் நடைபெற்றால் இன்றுள்ள சூழ்நிலையில் ஐ.தே.கவுக்கு மட்டுமின்றி, தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கும் அது ஒரு விசப்பரீட்சையாக இருக்கப் போகின்றது. எனவே தாம் ஆதரித்து பதவிக்குக் கொண்டு வந்த அரசாங்கத்துக்கு நெருக்கடி கொடுப்பதாக இருந்தபோதும், தம்மைப் பாதுகாக்க வேண்டிய ஒரு இக்கட்டான நிலையிலும் கூட்டமைப்பு இருக்கிறது.

அதற்குக் காரணம் புதிய ஜனாதிபதியாகத் தெரிவான மைத்திரியை எந்தவிதமான நிபந்தனைகளும் இல்லாமலே கூட்டமைப்பு ஆதரித்தது. எடுத்ததிற்கெல்லாம் மகிந்த ராஜபக்ஷவின் முன்னைய அரசாங்கத்துடன் சண்டை போட்டுக் கொண்டிருந்த கூட்டமைப்பு, தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பது சம்பந்தமாக மைத்திரியிடம் எவ்விதமான வாக்குறுதியும் பெறாமல் அவரை ஆதரித்ததற்கான காரணம் என்ன என்ற பெரியதொரு கேள்வி தமிழ் பொதுமக்களிடம் இருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், புதிய அரசாங்கம் மாகாணசபைகளுக்கு அதிகாரம் வழங்குவதாகவோ, வடக்கில் இருந்து இராணுவத்தை அகற்றுவதாகவோ, தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதாகவோ, காணாமற்போனவர்களைக் கண்டுபிடித்துத் தருவதாகவோ அல்லது கூட்டமைப்பு இதுமாதிரி முன்வைத்து வந்த கோரிக்கைகள் சம்பந்தமாகவோ இதுவரை சாதகமான சமிக்ஞை எதையும் காட்டவுமில்லை.

இப்படியான ஒரு கையறு நிலையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஒருபுறம் இருக்கையில், தலைவர் இரா.சம்பந்தனும், அவரது ஜால்ராவான எம். பி.சுமந்திரனும் அரசாங்கம் நடாத்திய இவ்வருட சுதந்திர தின விழாவில் பங்குபற்றியதின் மூலம் இதுவரை காலமும் தாங்கள் கடைப்பிடித்து வந்த சுதந்திர தினப் பகிஸ்கரிப்பு என்ற நாடகத்தைக் கேலிக்கூத்தாக்கியுள்ளனர். அதன் காரணமாக அவ்விருவரினதும் கொடும்பாவிகள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் தமிழ்த்தேசிய உணர்வாளர்களால் எரிக்கப்பட்டும் உள்ளன.

இவையெல்லாம் சேர்ந்து அடுத்த பொதுத் தேர்தலில் தமிழ் மக்களிடம் என்ன விடயத்தைச் சொல்லி வாக்குக் கேட்பது என்ற தர்மசங்கட நிலையை கூட்டமைப்புக்கு உருவாக்கியுள்ளது. அதற்கு ஒரு தீர்வாகக் கண்டு பிடிக்கப்பட்டதும், கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டதுமே வட மாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட சிவாஜிலிங்கம் முன்மொழிந்த “இனப்படுகொலை” தீர்மானம்.

அது போலியான, மக்களைத் திட்டமிட்டு ஏமாற்ற என நிறைவேற்றப்பட்ட தீர்மானம் என்பதை அதை நிறைவேற்றியவர்களே அம்பலப்படுத்தியும் விட்டனர். முதலமைச்சர் விக்னேஸ்வரன் தீர்மானத்தை நிறைவேற்றிவிட்டு, பின்னர் அதன் சாரத்தையும் காரத்தையும் குறைப்பதற்காகவும், அரசாங்கத்தைத் தாஜா செய்வதற்காகவும், அந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டதின் நோக்கம் வேறொன்றும் இல்லை, தமிழ் மக்களின் நிலைமையை உலகறிய வைப்பதற்குத்தான் என்கிறார்.

பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன், அந்தத் தீர்மானம் கொண்டு வந்தது இறுதி யுத்தத்தை நடாத்திய முன்னைய மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியை விசாரிப்பதற்காகத்தான் என்கிறார்.

எது எப்படியோ, முன்னாள் நீதவானும் அவரது சகாக்களும் சேர்ந்து அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மீண்டும் ஒரு முறை தமிழ் மக்களின் தலையில் மிளகாய் அரைத்து, அவர்களை அடிமுட்டாள்களாக்கி, அவர்களது வாக்குகளைக் கொள்ளையடிப்பதற்கு இந்த இனப்படுகொலைத் தீர்மானத்தின மூலம் பிள்ளையார் சுழிபோட்டு விட்டார்கள். வட மாகாணசபையின் பருப்பு தமிழ் மக்களிடம் அவியுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

(நன்றி: வானவில் 52)

# மாற்றத்தை ஏற்படுத்த மகிந்தவை கேட்கும் மக்கள்

## என்கிறார் ரோஹித



மாற்றம் செய்ய மகிந்த தேவை என மக்கள் கோரி வருவதாக முன்னாள் அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

தற்போது 100 நாள் திட்டம் நிறைவடைந்துள்ளது. என்ன செய்திருக்கின்றார்கள்? ஒன்றும் செய்யவில்லை.

எவ்வாறு பிரசாரம் செய்தார்கள்? 100 நாட்களுக்குள் நாட்டு மக்களுக்கு என்ன சொன்னார்கள்.

மாற்றம் ஒன்றைச் செய்வதாகச்சொன்னார்கள். மாற்றத்தை எதிர்பார்த்தே மக்கள் வாக்களித்தார்கள். மாற்றம் ஏற்பட்டுள்ளதா?

இந்தது தலைவர்கள் கிராமங்களுக்குச் சென்றால் எவ்வாறான மாற்றம் ஏற்பட்டுள்ளது என்பது புரியும்.

கிராமங்களில் ஓர் நல்ல மாற்றம் ஏற்பட்டுள்ளது. அதுதான் மகிந்தவை அதிகாரத்திற்கு கொண்டுவரும் மாற்றம். இதற்கு அரசாங்கம் அஞ்சுகின்றது.

மகிந்த யுகமொன்றை உருவாக்க வேண்டுமென்றே மக்கள் கோருகின்றனர் என ரோஹித அபேகுணவர்தன அண்மையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

# தனிநபரான சோமவன்சவுடன் செல்வதற்கு தயாரில்லை

## ரில்வின் தெரிவிப்பு



மக்கள் விடுதலை முன்னணியிலிருந்து அண்மையில் விலகிய சோமவன்ச அமரசிங்கவுடன் நாங்கள் செல்லமாட்டோம் என கட்சியின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் தலைவரும் சர்வதேச விவகாரங்களுக்கான செயலாளருமான சோமவன்ச அமரசிங்க, தனியாளாகவே கட்சியிலிருந்து விலகிச் சென்றார்.

அவருடன் தானோ அல்லது வேறு எவருமோ செல்லப்போவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் சோமவன்ச அமரசிங்கவை மீண்டும் கட்சியில் இணைத்துக்கொள்வதற்கான பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாக தெரிவித்த சில்வா,

சோமவன்சவுடன் சிலர் கட்சியிலிருந்து விலகிச் சென்றதாக செய்தி வெளியிட்டுள்ள ஊடகங்களுக்கு எதிராக எதிர்வரும் நாட்களில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை தான் மீண்டும் மக்கள் விடுதலை முன்னணியில் சேர முடியாது என்றும் வாய்ப்புகள் கிடைத்தால் மற்றொரு கட்சியை அமைக்கவுள்ளதாகவும் சோமவன்ச அமரசிங்க அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சோமவன்சவின் வெளியேற்றம் ஜே.வி.பிக்கு பாரிய இழப்பு

## கவலைப்படும் செனிவிரட்ண



மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் தலைவர் சோம்வன்ச அமரசிங்க பதவி விலகியமை பாரிய இழப்பாகவே கருதப்பட வேண்டுமென சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜோன் செனிவிரட்ன தெரிவித்துள்ளார்.

சோமவன்ச கட்சியை விட்டு விலகியமை கட்சிக்கு பெரும் இழப்பாகும்.

சோமவன்ச அமரசிங்க ஓர் அரசியல் பாத்திரமாகும் அவரால் அனைத்து தரப்பினரையும் இணைக்கும் வல்லமை காணப்பட்டது.

மக்கள் விடுதலை முன்னணியின் எதிர்காலப் பயணத்திற்கு சோமவன்ச மிகப்பெரிய பலமாக அமைந்திருந்தார்.

சோமவன்ச அமரசிங்க தனிப்பட்ட காரணங்களுக்காக கட்சியை விட்டு விலகியிருப்பார் என கருதுவதாக ஜோன் செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

# மகிந்த, கோத்தாவை அழைக்கும் இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ ஆகியோரை, விசாரணைக்கு வருமாறு இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினால் அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற பல்வேறு முறைகேடுகள், மோசடிகள் குறித்து இவர்கள் இருவருக்கும் எதிராக சுமத்தப்பட்டுள்ள முறைப்பாடுகள் தொடர்பாக விசாரிக்கவே, இந்த அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

கோத்தாபய ராஜபக்ஷ நாளையும் நாளை மறுதினமும் விசாரணைக்கு வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 24ஆம் திகதி ஆணைக்குழு முன் விசாரணைக்கு முன்னிலையாகும்படி கோரப்பட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலின் போது, மைத்திரிபால சிறிசேனவுக்கும், ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் இரகசிய உடன்பாடு செய்து கொள்ளப்பட்டுள்ளதாக, திஸ்ஸ அத்தநாயக்க வெளியிட்ட ஆவணம் தொடர்பாக மகிந்த ராஜபக்ஷவிடம் விசாரணை மேற்கொள்ளப்படவுள்ளதாக, கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

இலங்கையின் ஜனாதிபதி ஒருவர், இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினால் விசாரிக்கப்படுவது இதுவே முதல்முறையாகும்.



# ஊழல் மோசடிகள் எதிலும் ஈடுபடவில்லை என்கிறார் பசில்



ஊழல் மோசடிகள் எதுவும் மேற்கொள்ளவில்லை என் முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ சிங்களப் பத்திரிகையொன்றுக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு தெரிவித்துள்ளார்.

அரசியல் ரீதியாக எடுக்கப்பட்ட சில தீர்மானங்கள் பிழையாக இருக்கக் கூடுமே தவிர, ஊழல் மோசடிகளில் நான் ஈடுபடவில்லை.

தனிப்பட்ட காரணமொன்றுக்காக நான் அமெரிக்காவிற்கு சென்றிருந்தேன்.

நாளை (இன்று) பிற்பகல் 1.00 மணியளவில் நான் இலங்கைக்கு நாடு திரும்புவேன்.

இரகசியமான முறையில் நான் நாடு திரும்பவில்லை. நாளை(இன்று) நாடு திரும்பியவுடன் நாடாளுமன்ற அமர்வுகளிலும் பங்கேற்க உள்ளேன் என பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பசில் ராஜபக்ஷவை மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க வரவேற்க மாட்டார் என கட்சி உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பசில் ராஜபக்ஷ நாடு திரும்பியவுடன் அவரை விமான நிலையத்திலேயே கைது செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## எம்.பிக்களின் எண்ணிக்கையை 260 ஆக உயர்த்தும்

# கலப்பு தேர்தல் முறையை கொண்டுவர சு.க. முயற்சி

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை 260 ஆக உயர்த்தும் வகையில் புதிய தேர்தல் முறையை அறிமுகப்படுத்துவதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பாக சுதந்திரக் கட்சி தயாரித்துள்ள முதற்கட்ட தேர்தல் முறை மாற்ற யோசனை நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

ஆனால் இது தொடர்பில் தொடர்ந்து ஆராயும் நோக்கில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் நால்வர் கொண்ட குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி. சில்வா தலைமை தாங்குவதுடன் மகிந்த சமரசிங்க, டிலான் பெரேரா மற்றும் ஜீ.எல். பீரிஸ் ஆகியோர் உறுப்பினர்களாக இடம்பெறுகின்றனர்.

மேலும் நிமால் சிறிபால டி. சில்வா தலைமையிலான இந்தக் குழுவானது கடந்தவாரம் தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரியவையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தது.

இந்நிலையில் தொடர்ந்து தேர்தல் முறை மாற்றம் தொடர்பில் ஆராய்ந்து அதன்படி விரிவான அறிக்கையை சமர்ப்பிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை 260 ஆக அதிகரிக்கவும் விகிதாசார மற்றும் தொகுதிமுறை அடங்கிய கலப்புத் தேர்தல் முறைக்கு செல்லவும் சுதந்திரக் கட்சி விருப்பம் கொண்டுள்ளது.

இதேவேளை தற்போது நாட்டில் 160 தேர்தல் தொகுதிகள் காணப்படுகின்றன. அந்த எண்ணிக்கையில் மாற்றம் கொண்டுவராமல் தேர்தல் முறையை மாற்றுவதென்றால் விரைவாக செய்ய முடியும் என்றும் தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கையில் மாற்றத்தை ஏற்படுத்துவதாயின் அதற்கு காலம் தேவை என்றும் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

தற்போது அரசியலமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டமாக தேர்தல் முறை மாற்றத்தைக் கொண்டுவர அரசாங்கம் தீர்மானித்துள்ளமையின் காரணமாக புதிய தேர்தல் முறை யோசனையை உருவாக்கும் செயற்பாடுகள் கட்சிகள் மட்டத்தில் தீவிரமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# 19இற்கு ஆதரவு தராவிடின் சுதந்திரக்கட்சி வருந்தும்

## லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

19ஆவது திருத்தச் சட்டத்திற்கு ஆதரவளிக்காவிட்டால் சுதந்திரக் கட்சிக்கு வருந்த நேரிடும் என பெருந்தோட்ட அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

19ஆவது திருத்தச் சட்டம் என்ற பூசைத் தட்டில் கை வைக்காவிட்டால் சுதந்திரக் கட்சி பின்னர் வருந்தவும் கவலைப்படவும் நேரிடும். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இரத்துச் செய்ய வேண்டுமென சிறிலங்கா சுதந்திரக் கட்சி கடந்த 40 ஆண்டுகளாக போராடி வந்தது.

தற்போது 19ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த ஆதரவு அளிக்கப்படாவிட்டால் சுதந்திரக் கட்சியின் கோசங்கள் வெறும் புஸ்வாணமாக மாறிவிடும்.

குறுகிய அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள முயற்சிக்காது தேர்தல் காலத்தில் அளித்த வாக்குறுதிகளுக்கு அமைய செயற்பட சிறிலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்திற்கு ஆதரவளிக்க வேண்டும். 19ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த முடியாவிட்டால் நாடாளுமன்றைக் கலைத்து அது குறித்து மக்களுக்கு அறிவிக்க நேரிடும் என லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

# வலி.மேற்கு ஊரத்திக்காணியை 20 குடும்பங்களுக்கு வழங்க வேண்டும்

## பிரதேச சபையிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வலி.மேற்கு பிரதேச சபையின் ஊரத்திக் காணியை 20 குடும்பங்களுக்கு மட்டுமே வழங்க வேண்டும்.

புதிதாக சேர்க்கப்பட்ட ஏனைய 10 குடும்பங்களுக்கும் வலி.மேற்கு பிரதேச சபை நிர்வாகம் வழங்கக்கூடாது.

இவ்வாறு வலி.மேற்கு பிரதேச சபையின் காணியில் குடியிருக்கும் 6 பேர் கொண்ட குடும்பங்கள் கையெழுத்து இட்டு சபைத்தவிசாளர் திருமதி. நா.ஐங்கரனிடம் வழங்கியுள்ளனர்.

மேற்படி விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

வலி.மேற்கு பிரதேச சபை நிர்வாகம் பழைய எல்லைகளின் படி அராலியில் உள்ள 20 குடும்பங்களுக்கு மட்டுமே காணியை வழங்க வேண்டும்.

புதிதாக சேர்க்கப்பட்ட 10 குடும்பங்களுக்கும் காணி வழங்கக்கூடாது. மீண்டும் காணி அளவை செய்வதற்காக நாம் 20 குடும்பங்களிடம் இருந்து 4 ஆயிரம் ரூபா பெற்றுத் தருகின்றோம்.

எனவே புதிதாக நில அளவை செய்யப்பட்ட விடயத்தைக் கைவிட்டு மறுசீரமைப்புத் திட்டத்தின் கீழ் காணி பங்கிட்டு வழங்க சபை முன்வரவேண்டும்.

வலி.மேற்கு ஊரத்தியில் உள்ள 20 குடும்பங்களில் 10 குடும்பங்களுக்கு ஏனைய பிரதேசத்தில் சொந்த வீடுகள், காணிகள், நிலங்கள் இடங்களில் உள்ளன.

அதேபோல மிகுதி 10 குடும்பங்களுக்கும் அரசின் நிதி உதவியுடனான வீடுகள் உள்ளன. எது எவ்வாறு இருப்பினும் 20 குடும்பங்கள் கடந்த 30 ஆண்டுகளாக அராலி ஊரத்தியில் பதிவுகளை மேற்கொண்டுள்ளன.

எனவே 20 குடும்பங்களுக்கும் மறு எல்லை சீரமைப்பு திட்டத்தின் புதிதாக நில அளவை செய்து பழைய எல்லை நிர்வாகப் படி காணி வழங்குமாறு பிரதேச சபைக்கு அராலி ஊரத்தி குடும்பங்கள் ஆலோசனை வழங்கியுள்ளதாக சபை உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.(92)

# நூல் அறிமுக விழா



சரசையூர் தமிழறிஞர் ம.கங்காதரம் எழுதிய தமிழ் எழுத்துக்கள் "நேற்று இன்று நாளை" என்ற நூலின் அறிமுக விழா நேற்று முன்தினம் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் பிரதி அதிபர் ச.லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் கு.பாலஷண்முகன் தமிழ்த்தாய் வாழ்த்துப் பா இசைத்தார். தென்மராட்சி கல்வி வலய ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராசா வரவேற்புரையையும் கவிஞர் கு.வீரா வெளியீட்டுரையையும் யாழ்.பல்கலைக்கழக மொழியியல் ஆங்கிலத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சுபதினி ரமேஸ் ஆய்வுரையையும் ஆற்றினர். யாழ்.பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் இ.சர்வேஸ்வரா நிறைவுரையையும் நன்றியுரையையும் ஆற்றினார்.

இந்நூல் சுவிட்சர்லாந்து சுகர்யா வெளியீட்டக உரிமையாளர்களான சிவபாலன் தேவகுமாரி இணையரின் நிதிப் பங்களிப்புடன் வெளியிடப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. (90,48)

# மாடுகளின் நடமாட்டம் போக்குவரத்து பாதிப்பு



(மன்னார்)

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஏ-32 பிரதான வீதியில் மாடுகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளமையினால் போக்குவரத்துச் சேவைகள் பாதிப்படைந்துள்ளதோடு, விபத்துக்கள் ஏற்படும் நிலையும் தோன்றியுள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறித்த வீதியில் நாளாந்தம் காலை மற்றும் மாலை நேரங்களில் பல நூற்றுக்கணக்கான மாடுகள் வீதியை இடைமறித்துக்கொண்டு செல்லுகின்றன. இதனால் போக்குவரத்து நீண்ட நேரம் தடைப்படுவதோடு மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கும் முகங்கொடுத்து வருகின்றனர்.

எனவே குறித்த மாடுகளின் உரிமையாளர்கள் வீதிகளில் திரிகின்ற மாடுகளின் நடமாட்டத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அல்லது குறித்த மாடுகளின் உரிமையாளர்களுக்கு எதிராக மாந்தை மேற்கு பிரதேச செயலகம், மாந்தை மேற்கு பிரதேச சபை உரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினர் முல்லைத்தீவு மாவட்டத்தில் தாய், தந்தையரை இழந்த இரண்டு மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை கடந்த சனிக்கிழமை வழங்கியதைக் காணலாம். (160)

# அனைத்துப் பாடசாலைகளிலும் கணித வாரம் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

"கணித வாரம்" நாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

நேற்று திங்கட்கிழமை முதல எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை இவ்வாரம் கடைப்பிடிக்கப்பட வேண்டும் எனவும் இவ் வார காலப்பகுதியில் பாடசாலைகளில் கணித பாடம் சம்பந்தமான வினாவிடைப் போட்டிகள், குறும் பரீட்சைகள், கணிதவியலாளர் பற்றிய பேச்சுக்கள், விவாதப் போட்டிகள், கணித விளையாட்டுக்கள், வேறு வகையான போட்டி நிகழ்ச்சிகள் அதற்கான பரிசு வழங்கல் போன்ற செயற்பாடுகள் நடாத்தப்பட வேண்டும் எனவும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

## முரசின் இன்றைய பலன்

(21.04.2015 செவ்வாய்க்கிழமை)

மன்மத வருஷம் சித்திரை மாதம் 08 ஆம் திகதி.
திருதியை திதி. சித்தாமிர்த யோகம்.
கார்த்திகை நட்சத்திரம் பி.ப. 02.51 வரை. பின் ரோகிணி.
இராகுகாலம் 03.01-04.31 வரை சுபநேரம் 10.31-12.01 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
நிலுவையில் கனிசமான தொகை கைக்கெட்டுதல்.

**ரிஷபம்**
சகோதர உறவில் ஏற்பட்டிருந்த மனத்தாங்கல் விலகிவிடல்.

**மிதுனம்**
சுபகாரியமொன்று நினையாப் பிரகாரமாக ஏற்படல்.

**கடகம்**
அழைப்பிதழுக்கு மதிப்புக் கொடாமையினால் கவலையுறுதல்.

**சிம்மம்**
திகதி தப்பிய பொருட்களில் அவதானமாக இருத்தல்.

**கன்னி**
கைவிட்டிருந்த பயணத்தை மீண்டும் ஆரம்பிக்க முயலுதல்.

**துலாம்**
இடமாற்றம் கருணை மனுவினால் இரத்துச் செய்யப்படல்.

**விருச்சிகம்**
சந்தேகக் கோடு விழுந்ததால் குடும்பத்தில் கவின் நிலை பாதிக்கப்படல்.

**தனுசு**
மாறாத நோயைக் குணப்படுத்த தெய்வத்தலம் சென்றுவர விரும்புதல்.

**மகரம்**
விவாகத்தில் நிலவியிருந்த தடை அகன்று விடல்.

**கும்பம்**
பொறுப்பின்றிக் கையளித்த பணம் வந்தடைதல்.

**மீனம்**
மாமன்மாருடன் சில நாட்களாக நிலவியிருந்த விரிசல் நிலை அற்றுப்போதல்.

# போலார்ட்டின் கொமடி அதிர்ந்துபோன அரங்கம்



பெங்களூர் சின்னச்சாமி மைதானததில் மும்பை இந்தியன்ஸ் அணி வீரர் போலார்ட் செய்த கொமடியால் இரசிகர்களின் சிரிப்பு சத்தத்தால் அரங்கமே அதிர்ந்தது.

நேற்றுமுன்தினம் நடந்த ஐ.பி.எல். தொடரின் 16 ஆவது லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ்- றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணிகள் மோதின.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை அணி 209 ஓட்டங்கள் குவித்தது. பின்னர் 210 என்ற கடின இலக்கை நோக்கி பெங்களூர் அணி களமிறங்கியது.

ஆட்டத்தின் 3 ஆவது ஓவரின் போது துடுப்பாட்டக்காரர் கிறிஸ் கெய்லுக்கு அருகில் களத்தடுப்பு செய்து கொண்டிருந்த போலார்ட்டை அழைத்த நடுவர், ஸ்கொட்ஜிங்கில் (வாக்கு வாதத்தில்) ஈடுபடக்கூடாதென்று எச்சரிக்கை விடுத்தார்.

கடந்த வருடம் மிட்செல் ஸ்டார்க் உடன் ஏற்பட்ட மோதலில் அவர் மீது துடுப்புமட்டையை போலார்ட் வீசியது நினைவிருக்கலாம். அதனால் நடுவர் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

நான் ஒன்றுமே செய்யவில்லை என்ற போலார்டிடம் இது வெறும் எச்சரிக்கை என்று சொல்லி விட்டு நடுவர் போய் விட்டார்.

இதனால் கடுப்பான போலார்ட் ஓடிப்போய் ஒரு செலோரேப்பை வாயில் ஒட்டிக் கொண்டு சமத்துப் பிள்ளையாக மைதானத்துக்குள் வந்தார்.

அவரின் இந்த நடவடிக்கையை, ரிக்கி பொண்டிங் உட்பட மும்பை அணி வீரர்கள் அனைவரும் பார்த்துச் சிரித்தனர்.

மேலும் மைதானத்தில் உள்ள பிரமாண்டமான திரையிலும் போலார்ட்டின செலோரெப் ஒட்டிய முகத்தைக் காடடினர். இதனால் இரசிகர்களின் சிரிப்புச் சத்தம் அரங்கத்தை அதிர வைத்தது.

கடைசியில் அதே திரையில் 'சைலன்ஸ ப்ளீஸ்' என்று காட்டிய பிறகுதான் இரசிகர்களின் சிரிப்புச்சத்தம் அடங்கியது.

# சரேயிலும் சாதனை



இம்முறை முதல் முறையாக சரே பிராந்திய அணியில் விளையாடும் வாய்பபினைப் பெற்றுள்ள சங்கக்கார நேற்று முன்தினம் ஆரம்பமான போட்டியில் சதத்தினை விளாசியுள்ளார்.

மூன்றாவதாக களமிறங்கிய சங்கக்கார முதல் நாள் ஆட்டம் நிறைவடைந்த போது ஆட்டமிழக்காமல் 112 ஓட்டங்களை விளாசியிருந்தார்.

இதில் 14 நான்கு ஓட்டங்களும் 1 ஆறு ஓட்டமும் அடங்கும். அத்துடன் சக வீரரான ஸ்டீபன் டேவிஸுடன் இணைந்து 213 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஒருநாள் தொடரை வென்றது பங்களாதேஷ்



பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது போட்டியிலும் அபார வெற்றி பெற்று பங்களாதேஷ் ஒருநாள் தொடரை கைப்பற்றியுள்ளது.

பாகிஸ்தான்- பங்களாதேஷ் கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான 2 ஆவது ஒரு நாள் போட்டி டாக்காவில் நேற்று முன்தினம் நடந்தது.

இதில் நாணயச் சுழற்சியில் வென்று துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 77 ஓட்டங்களுக்குள் 5 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது.

எனினும் இடைநிலை வீரர்களான ஹரிஸ் சொகைல் (44 ஓட்டங்கள்), சாத் நசிம் (77 ஓட்டஙகள்), வஹாப் ரியாஸ் (51 ஓட்டங்கள், 5 பவுண்டரி, 2 சிக்சர்) ஆகியோர் தாக்குப்பிடித்து விளையாடி அணியை ஓரளவு தூக்கி நிறுத்தினர்.

50 ஓவர்களில் பாகிஸ்தான் அணி 6 விக்கெட் இழப்புக்கு 239 ஓட்டங்கள் எடுத்தது.

பதிலளித்து ஆடிய பங்களாதேஷ் அணியில் தமிம் இக்பால் தூண்போல் நிலைத்து நின்று விளையாடி பாகிஸ்தானை சிதறடித்தார்.

அவருக்கு முஷ்பிகுர் ரகீம் (65 ஓட்டங்கள்) தோள்கொடுக்க, வெற்றிப்பயணம் சுல்பமானது. முதலாவது ஆட்டத்தில் சதம் அடித்த தமிம் இக்பால் இந்த ஆட்டத்திலும் சதத்தை பதிவு செய்தார்.

முடிவில் பங்களாதேஷ் அணி 38.1 ஓவர்களில் 3 விக்கெட் இழப்புக்கு 240 ஓட்டங்கள் சேர்த்து 7 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

தமிம் இக்பால் 116 ஓட்டங்களுடன் (116 பந்து, 17 பவுண்டரி, ஒரு சிக்சர்) கடைசி வரை களத்தில் இருந்தார்.

ஏற்கனவே முதலாவது ஆட்டத்திலும் பங்களாதேஷ் 79 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தது. இதன் மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரை பங்களாதேஷ் அணி 2-0 என்ற கணக்கில் வசப்படுத்தியது. ஆட்ட நாயகனாக தமிம் இக்பால் தெரிவானார்.

பாகிஸ்தானுக்கு எதிராக ஒரு தொடரை பங்களாதேஷ் அணி வெல்வது வரலாற்றில் இதுவே முதல் முறையாகும்.

# ஒருநாள் போட்டியில் 350 ஓட்டங்கள்

## இங்கிலாந்து வீரர் சாதனை



ஒருநாள் போட்டிகளில் இரட்டைச் சதம் அடிப்பதென்பது சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்த காலம் மாறி இன்று 200 அடிப்பது இலகுவான காரியமாகிவிட்டது.

இந்நிலையில் இங்கிலாந்து கழக மட்டப் போட்டிகளில் லியாம் லிவிங்ஸ்டன் 350 ஓட்டங்களை வெறும் 137 பந்துகளில் அடித்து வரலாற்றில் இடம்பெற்றுள்ளார்.

நேற்றுமுன்தினம் நன்ட்விச் மற்றும் கல்டி அணிகளுக்கு இடையில் இடம் பெற்ற கழக மட்டத்திலான போட்டியின்போதே இந்தச் சாதனை படைக்கப்பட்டுள்ளது. இவரது 350 ஓட்டங்களில் 34 நான்கு ஓட்டங்களும் 27 ஆறு ஓட்டங்களும் உள்ளடங்கும்.

இப் போட்டியில் நன்ட்விச் அணி 45 ஓவர்களில் 579 ஓட்டங்களைப் பதிவு செய்து தனது ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கல்டி அணி வெறுமனே 79 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இதன் மூலம் 500 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது.

IPL

**ஐ.பி.எல். இன்றைய ஆட்டம்**

ராஜஸ்தான் எதிர் பஞ்சாப்

**இடம் :-** அஹமதாபாத்

**நேரம் :-** இரவு 8.00 மணி

# சிறந்த துடுப்பாட்டம், பந்து வீச்சே முதலாவது வெற்றிக்கு காரணம்



பெங்களூர் றோயல்ஸ் சலஞ்சர்ஸ் அணியுடன்ான போட்டியில் துடுப்பாட்டம், பந்துவீச்சு சிறப்பாக அமைந்ததன் காரணமாகவே முதலாவது வெற்றியை பதிவு செய்ய முடிந்ததாக மும்பை இந்தியன்ஸ் அணித் தலைவர் ரோகித் சர்மா தெரிவித்துள்ளார். இந்த வெற்றி குறித்து அவர் கூறியதாவது,

4 ஆட்டத்தில் தொடர்ந்து தோல்வியை தழுவியதால் எங்களுக்கு மிகுந்த நெருக்கடி ஏற்பட்டது. துடுப்பாட்டம், பந்துவீச்சு சிறப்பாக அமைந்ததால் முதல் வெற்றியை பெற்றோம்.

தொடர் தோல்விக்கு முற்றுப்புள்ளி வைக்கும் இந்த முதல் வெற்றி மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது.

எங்களது துடுப்பாட்டம் அபாரமாக இருந்ததால் மிகப்பெரிய ஸ்கோரை எட்ட முடிந்தது. இதேபோல இறுதி வரை பந்து வீச்சாளர்கள் சிறப்பாக செயற்பட்டனர். ஒவ்வொருவரும் சிறப்பாக வீசினார்கள். மொத்தத்தில் எல்லாமே நன்றாக அமைந்தது. இவ்வாறு அவர் கூறினார்.

தோல்வி குறித்து விராட் ஹோலி கூறும் போது, நாங்கள் பந்துவீச்சில் கூடுதலாக ரன்களை கொடுத்துவிட்டோம். டிவில்லியர்சும், வைசும் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள். ஒரு சில தவறுகளால் தோல்வியை சந்திக்க நேரிட்டது என்றார்.

# கூடுதலான ஓட்டத்தை எடுப்பதற்கு தவறி விட்டோம்

## தோல்வி குறித்து பிராவோ

(அகமதாபாத்)

15 முதல் 20 ஓட்டங்கள் வரை கூடுதலாக எடுக்கத் தவறியதே ராஜஸ்தான் அணியுடனான தோல்விக்கு காரணமென சென்னை அணியின் சகலதுறை வீரர் பிராவோ தெரிவித்துள்ளார்.

இந்த தோல்வி குறித்து அவர் மேலும் கூறியதாவது, தொடக்கத்திலேயே எங்களது விக்கெட்டுகள் சரிந்து விட்டதால் மிகப்பெரிய ஸ்கோரை எட்ட முடியவிலலை. 156 ரன் என்பது எடுக்கக்கூடிய இலக்கு தான். 175 ரன்கள் வரை எடுத்திருக்க வேண்டும்.

அதேநேரத்தில் ராஜஸ்தான் அணியின் துடுப்பாட்டம் எங்களை விட சிறப்பாக இருந்தது. ரகானேயும், வட்சனும் அபாரமாக விளையாடினார்கள்.

பந்துவீச்சு எப்போதும் ஒரே மாதிரி சிறப்பாக அமைந்துவிடாது. கடந்த போட்டிகளில் சிறப்பாக வீசி இருக்கிறோம். தொடர்ந்து வெற்றிகளை பெற்றுவிட முடியாது. இந்த தோல்வி எங்களை பாதிக்காது. இனிவரும் போட்டிகளில் முழுத் திறமையை வெளிப்படுத்துவோம். இவ்வாறு அவர் கூறினார்.

சென்னை சூப்பர் கிங்ஸ் கப்டன் டோனி கூறும்போது, நான் அதிகமான பந்துகளை வீணடித்து விட்டதால் மிகப்பெரிய ஸ்கோரை எட்ட இயலவில்லை. இதுவே தோல்விக்கு காரணம். ஆடுகளம் துடுப்பாட்டத்திற்கு ஏற்ற வகையில் இருந்தும் என்னால் சிறப்பாக ஆட இயலவில்லை. இந்த நாள் எங்களுக்கு சிறப்பாக அமையவில்லை என்றார்.

# சிவகுருநாதன் கிண்ணை கிரிக்கெட்

# யாழ்.இந்து-ஆனந்தா மோதல்



யாழ் இந்துக் கல்லூரி அணி



கொழும்பு ஆனந்தாக் கல்லூரி அணி

யாழ். இந்துக் கல்லூரி மற்றும் கொழும்பு ஆனந்தா கல்லூரிக ளுக்கிடையேயான 4 ஆவது "சிவகுருநாதன் கிண்ணத்துக் கான" மாபெரும் கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 24,25ஆம் திகதிகளில் (வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில்) யாழ் இந்துக் கல்லூரி மைதா னத்தில் கோலாகலமாக நடைபெற உள்ளது.

யாழ். இந்து 125 வருட நிறைவில் அடிஎடுத்து வைத்தி ருக்கும் இவ்வேளை அதனை முன்னிட்டு இத்துடுப்பாட்டப் போட்டி விமரிசையாக கொண் டாடப்பட இருக்கின்றமை குறிப் பிடத்தக்கது. கடந்த வருடம் கொழும்பு ஆனந்தா கல்லூரி வெற்றி பெற்ற நிலையில் இம்முறை நடைபெறும் போட்டியானது மிகவும் எதிர் பார்ப்புக்குரியதாக மாறியுள் ளது.

2-1 என்ற நிலையில் ஆனந்தாக் கல்லூரி முன்னிலை வகிக்கும் இப்போட்டியின் முடிவு இம்முறை மாற்றப்படுமா என்கிற ஆர்வத்துடன் நடைபெற இருப்பது குறிப்பிடத்தக்கது. யாழ் வீரர்கள் கொழும்பு வீரர்க ளுக்கு எவ்விதத்திலும் சளைத்த வர்கள் இல்லை என தமது ஆட் டத்திறனை வெளிப்படுத்துவர் என எதிர்பார்க்கப்படுகிறது. (48)

## புத்தாண்டு உதைபந்து வதிரி டயமன்ஸ் சம்பியன்



(யாழ்ப்பாணம்)

வசந்தம் தொலைக்காட்சியினால் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு நடாத்தாப்பட்ட வடமராட்சியின் 16 முன்னணி கழ கங்கள் மோதிய அணிக்கு ஏழுபேர் கொண்ட உதைபந் தாட்டத் தொடரில் சம்பியன்பட் டத்தை வதிரி டயமன்ஸ் அணிபெற்றுக் கொண்டது.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இறுதி யாட்டத்தில் உடுப்பிட்டி நவஜீ வன்ஸ் விளையாட்டுகழ கத்தை 4:0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது டயமன்ஸ் அணிக காக பிறேம்குமார் - 2,ரஜீவன் - 1 துஷிகரன் - 1 கோல் களினைப் பெற்றுக்கொடுத் திருந்தனர். வெற்றிப்பரிசாக வெற்றிகிண் ணமும் 25,000 ரூபா பணப்பரிசும் தொடரின் சிறப்பாட்டக்காரர் விருதும் டயமன்ஸ் அணி வீரன் ரஜீவனுக்கு வழங்கப்பட்டது.

முன்னர் இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் வல்வை அணியை 9:0 என்ற கோல் கணக்கிலும் அரை யிறுதியாட் டத்தில் கொலின்ஸ் அணியை 5:0 என்ற கோல்கணக்கிலும் டயமனஸ் அணி வீழ்த்தியமை குறிப்பிடத்தக்கது. (18)

## காலபந்தாட்ட போட்டி முடிவுகள்

வடமராட்சி காலபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் கம் பர்மலை யங்கம்பன்ஸ் விளை யாட்டுக் கழகம் நடாத்திய கால் பந்தாட்டப் போட்டியின் 2 ஆம் சுற்றுப் போட்டி யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத் தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

இதில் இளவாலை யங் ஹென்றிஸ் அணியும் சிவ குமாரன் அணியும் மோதிய போட்டியில் இளவாலை யங்ஹென்றிஸ் அணி 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மற்றுமொரு போட்டியில் மயிலங்காடு ஞானமுருகன் அணியும், இமையாணன் மத்தி விளையாட்டுக் கழக அணியும் மோதின. இதில் ஞான முருகன் விளையாட்டுக் கழக அணி 1:.0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுள்ளது. (93,90)

## கால்பந்தாட்டப் போட்டி

கைதடி நவபுரம் நவசக்தி சனசமூக நிலையத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்.கால்பந்தாட்ட அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்ட இறுதிப் போட்டி இன்று இரவு கைதடி நவபுரம் நவசக்தி சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெற வுள்ளது.

இவ் அரையிறுதிப் போட்டி யில் பங்குபெறும் அணிகளை உரிய நேரத்துக்கு வருகை தந்து நேர விரயத்தைத் தவிர்க் குமாறு போட்டி ஏற்பாட்டாளர் கள் தெரிவித்துள்ளனர். (93)

## கரப்பந்தாட்ட போட்டி

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு கலை மகள் சனசமூக நிலையம் அமரர் மகாதேவா சதீஸ் ஞாப கார்த்தமாக நடாத்தும் கரப்பந் தாட்டப் போட்டி தொண்டை மானாறு கலைமகள் சனசமூக நிலைய மைதானத்தில் இன்று இரவு நடைபெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித் துள்ளனர்.

எனவே இப்போட்டியில் பங்குகொள்ளும் கழகங்கள் உரிய நேரத்திற்கு முன் சமுக மளிக்குமாறு கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது. (93)

## கராத்தே போட்டிகளில் வென்ற மகாதேவா சிறுவர்கள் கௌரவிப்பு



வட மாகாணப் பாடசாலை களுக்கு இடையிலான கராத்தே போட்டியில் பதக்கங்கள் வென்ற கிளிநொச்சி மகாதேவா சைவ சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த பிள்ளைகளைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடத்தப் பட்டது.

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் முருகவேளினால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ் வைபவத்தில் வட மாகாண விளையாட்டுத்துறை அமைச்சர் குருகுலராஜா பிரதம விருந் தினராகக் கலந்து கொண்டு மகாதேவா சைவச் சிறுவர் இல்ல வெற்றியாளர்களுக்கு தங்கப் பதக்கங்களை சூடி சான்றிதழ்க ளையும் வழங்கினார்.

பிரதம பயிற்றுநர் சி. விஜ யராஜின் பயிற்றுவிப்பின் கீழ் இப் பிள்ளைகள் வட மாகாணப் போட்டிகளில் கலந்து கொண்டு இரண்டு தங்கப் பதக்கங்களையும 6 வெள்ளிப் பதக்கங்களையும் சுவீகரித்திருந்தனர்.19 வயதுக் குட்பட்ட குழு கராத்தே மற்றும் குமித்தே போட்டிகளில் என்.ஷர் மிளா இரண்டு தங்கப் பதக் கங்ளை வென்றதுடன் தனிநபர் கராத்தே போட்டியில் வெள்ளிப் பதக்கத்தை வென்றார்.

மேலும் ஐவர் தத்தமது வயதுப் பிரிவுகளில் மாகாண மட்டங்களில் வெள்ளிப் பதக் கங்களை வென்றனர்.

15 வயதுக்குட்பட்ட பிரிவில் ஏ.கமலினி, மோ.சுதர்சனா, வை. சாளினி ஆகியோரும் 17 வயதுக்குட்பட்ட பிரிவில் எம்.சௌமியா, ரீ. கேசாளினி ஆகி யோரும் இரண்டாம் இடங்களைப் பெற்று வெள்ளிப் பதக்கங்களையும் வென்றனர்.



தமிழ் - சிங்கள புதுவருடத்தை முன்னிட்டு முல்லைத்தீவு 592 ஆவது இராணுவ கட்டளைப் பணியகத்தின் ஏற்பாட்டில் கடந்த சனிக்கிழமை நந்திக்கடலில் படகு ஓட்டப்போட்டியொன்று இடம்பெற்றது. முல்லைத்தீவு 59 ஆவது இராணுவ கட்டளைப் பணியக பிரிகேடியர் முதலிகே தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் இராணுவ அதிகாரிகள், பொதுமக்கள் என பெருந்திரளானோர் கலந்து கொண்டனர். இதன்போது 180 கிலோ மீற்றர் படகு ஓட்டப்போட்டியும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (165)

# ரணில் - மைத்திரி - சந்திரிகா அரசு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுமா?

**- வானவில் 52 கட்டுரையிலிருந்து.**

"திண்ணை எப்போ காலியாகும்?" எனக் காத்திருந்தது போலக் காத்திருந்து, எதிர்க்கட்சித் தலைவர் பதவியைத் தமக்குத் தரும்படி கேட்டு நிற்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, உண்மையான எதிர்க்கட்சியாகச் செயற்படுகின்ற நிலையில்



இருக்கின்றதா?

1994இல் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் பதவி ஏற்றதிலிருந்து எதிர்ப்பு அரசியலையே செய்து வந்த கூட்டமைப்பு, ஜனவரி 8ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் பிரச்சினை சம்பந்தமாக எந்தவொரு வாக்குறுதியையும் பெற்றுக் கொள்ளாமல் எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை ஆதரித்து அவரைப் பதவிக்குக் கொண்டு வருவதில் முக்கிய பங்கு வகித்தது.

அதற்கு முன்னர் 2010இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போதும் கூட முன்னாள் இராணுவத் தளபதியும், புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் (கூட்டமைப்பினரின் மொழியில் தமிழின அழிப்பு யுத்தம்) முக்கிய பங்கு வகித்தவரும், தமிழ் மக்களுக்கு எதிராகப் பகிரங்கமாக கருத்து தெரிவித்து வந்தவருமான, சரத் பொன்சேகாவையே கூட்டமைப்பு ஆதரித்தது.

தமிழ் தலைமைகள் காலத்துக்குக் காலம் தமிழ் மக்களுக்கு எதிரான தென்னிலங்கை அரசியல் (ஐ.தே.க) கட்சியையே ஆதரிப்பதை ஒரு மரபாகக் கொண்டு வந்திருக்கின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரிக்கின்ற தற்போதைய அரசாங்கம் கூட, தமிழ் மக்களின் பிரச்சினை சம்பந்தமாக எந்தவொரு தீர்வையும் காண்பதற்கான முயற்சிகளில் அதுவும் இல்லை.

புதிய அரசாங்கம் பொறுப்பேற்றதும் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என அறிவித்தது. சிலருக்கு இந்த அரசாங்கத்தை தமிழ் கூட்டமைப்பும் சேர்ந்துதான் பதவிக்குக் கொண்டு வந்தது என்றபடியால், அது ஏதாவது செய்யக்கூடும் என்ற சிறு நப்பாசை ஏற்பட்டு இருந்தது. ஆனால் அரசாங்கத்தின் நூறு நாள் வேலைத் திட்டத்தில் அந்தப் பிரச்சினை இடம் பெறாததுடன், அரசாங்கம் பல கட்சிகளையும் கொண்டு அமைத்துள்ள "தேசிய நிறைவேற்றுச் சபை"யிலும் அதுபற்றி ஒருமுறை தன்னும் கலந்துரையாடப்படவும் இல்லை.

அரசாங்கத்தின் இந்தப் போக்கில் ஆச்சரியப்படுவதற்கு ஏதும் இல்லை. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரே மைத்திரிபால சிறிசேன, தமிழ் மக்களின் பிரச்சினை சம்பந்தமாக இப்பொழுது எதுவும் கதைக்கக்கூடாது என திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டார். அதற்கு சிங்கள மக்களின் வாக்குகள் கிடைக்காது போய்விடும் என்ற அச்சம் மட்டும் காரணமல்ல. இனப்பிரச்சினை சம்பந்தமான அவரது நிலைப்பாடும் ஒரு காரணம்.

ரணிலைப் பொறுத்தவரை, அவரது வரலாற்றைப் பற்றி புதிதாக ஏதும் சொல்லத் தேவையில்லை. அண்மையில் அவர் யாழ்ப்பாணம் சென்றிருந்த போது, "வடக்குப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும்" என மொட்டையாகச் சொன்னார். இதில் ஆழமான அர்த்தம் பொதிந்து கிடக்கிறது. அதாவது வடக்கு மட்டுமின்றி, கிழக்கும் தமிழ் மக்களின் பாரம்பரிய வாழ்விடம் என்பதை ஏற்றுக்கொள்ளாத தொனி இதில் இருக்கின்றது.

அதுமட்டுமல்லாமல், இந்தப் பிரச்சினையை தேசிய இனப்பிரச்சினை என்றோ அல்லது குறைந்தபட்சம் தமிழ் மக்களின் பிரச்சினை என்றோ கூட அவர் சொல்ல விரும்பவோ, தயாராகவோ கூட இல்லை. இன்று மட்டுமல்ல, அவர் என்றுமே தமிழ் மக்களின் பிரச்சினையை "வடக்கு பிரச்சினை" என்றுதான் சொல்லி வந்திருக்கிறார் என்பது அவரை அறிந்தவர்களுக்கு நன்கு தெரியும்.

அதுமட்டுமல்ல, சந்திரிகா ஜனாதிபதியாக இருந்த காலத்தில் 2000ஆம் ஆண்டில் அவரது அரசாங்கம் முன்வைத்த "தீர்வுப்பொதி"யை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த போது, தமது ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதன் பிரதிகளை நாடாளுமன்றத்துக்கு உள்ளேயே தீ வைத்துக் கொளுத்திய போது ரணில் வேடிக்கை பார்த்து இரசித்ததை நாட்டு மக்கள் தொலைக் காட்சிகளில் பார்த்து அதிர்ச்சி

---

# இந்த செல்ஃபி எப்படி?

**- சைபர்சிம்மன் - 2**

### 3. தூய வாசிப்புக்கு ஒரு செயலி

ஸ்மார்ட் போனுக்கான செயலிகளில், புதுமையானவற்றுக்கும் சுவாரஸ்யமானவற்றுக்கும் குறைவே இல்லை. இப்போது இந்த இரண்டும் கலந்த ஒரு செயலி, மின்னூல் பிரியர்களுக்காக அறிமுகம் ஆகியிருக்கிறது.

செயலியின் பெயர், கிளீன் ரீடர். அதன் நோக்கம், எந்தப் புத்தகத்தையும் நல்ல புத்தகமாக்கித் தருவது. அதாவது, புத்தகங்களில் இடம்பெற்றுள்ள ஏற்கத்தகாத (ஆபாசம் என பொருள் கொள்க) வார்த்தைகளை நீக்கி, புத்தகத்தை நெருடல் இல்லாமல் படிக்க வழி செய்கிறது.

சில புத்தகங்களின் உள்ளடக்கம் சிறந்ததாக இருந்தாலும், அவற்றில் பயன்படுத்தப்பட்டிருக்கும் சில சொற்கள் ஆபாசமானதாக இருப்பதாகப் பலரும் கருதலாம். குறிப்பாக, பெற்றோர்கள்




இதுபோன்ற புத்தகங்களை தங்கள் பிள்ளைகள் படிக்க அனுமதிக்க தயங்கலாம்.

இந்தச் சிக்கலுக்குத் தீர்வாகத்தான், கிளீன் ரீடர் செயலி உருவாக்கப்பட் டுள்ளது. ஐபோன், அண்ட்ரோய்ட் இரண்டிலும் செயற்படும் இந்தச் செயலியை டவுன்லோட் செய்து, அதன் மூலம் மின்னூல்களை வாங்கிப் படிக்கலாம். எங்கெல்லாம் ஆபாசம் அல்லது தகாத வார்த்தைகள் வருகிறதோ, அங்கெல்லாம் அதை மறைத்துவிட்டு மாற்று வார்த்தைகளால் பதிலீடு செய்கிறது.

அமெரிக்காவைச் சேர்ந்த ஜேர்ட் அண்ட் கிறிஸ்டீன் மவுகன் தம்பதி இந்தச் செயலியை உருவாக்கி உள்ளனர்.

ஒருநாள், தனது மகள் தேர்வு செய்த மின்னூலில் மோசமான வார்த்தைகள் இருப்பது குறித்து அதிருப்தி தெரிவித்தபோது, இதுபோன்ற வார்த்தைகளை நீக்கி, வாசிக்க உதவும் செயலி இருக்கிறதா என தேடிப் பார்த்ததாகவும், எந்தச் செயலியும் இல்லாததால் தாங்களே இதை உருவாக்கத் தீர்மானித்ததாகவும் கிறிஸ்டீன் சொல்கிறார்.

பெற்றோர் நோக்கில் இருந்து பார்த்தால் நல்ல செயலியாகத் தோன்றலாம். ஆனால் இதனால் காப்புரிமை சிக்கல் வராதா? மின்னூலின் மூல வடிவில் எந்த மாற்றமும் செய்யாமல், அது திரையில் வாசிக்கப்படும் முறையில் மட்டுமே இந்தச் செயலி மாற்றம் செய்வதால் காப்புரிமை சிக்கல் இல்லை என்கிறார்.

காப்புரிமை சிக்கல் இல்லாமல் இருக்கலாம். ஆனால் இந்தச் செயலி, தணிக்கை பற்றிய விவாதத்தை ஏற்படுத்தியிருக்கிறது. எழுத்தாளர்கள் பலர் இப்படி வார்த்தைகளை மாற்றுவதை கடுமை யாக விமரிசித்துள்ளனர். எழுதப்பட்ட வார்த்தைகளை - அவற்றில் உங்களுக்குப் பிடிக்காத வார்த்தைகள் இருந்தாலும் - மாற்றுவது என்பது தணிக்கைக்குச் சமம் என்று ஜோனே ஹாரிஸ் எனும் எழுத்தாளர், தனது வலைப்பதிவில் கடுமையாக விமரிசித்துள்ளார்.

ஆங்கில மின்னூல்களுக்கான இந்தத் தூய வாசிப்புச் செயலி பற்றிய தகவல் அறிய - www.cleanreaderapp.com/

### 4. இது ஸ்மார்ட் குடை

ஸ்மார்ட் போன், ஸ்மார்ட் வோட்ச் வரிசையில், குடைகளும் ஸ்மார்ட்டாக மாறத் துவங்கியிருக்கின்றன. உலகின் முதல் ஸ்மார்ட் குடை எனும் அடைமொழியுடன் குரோஷியாவில் இருந்து கிஷா எனும் குடை அறிமுகமாகி இருக்கிறது.

ப்ளூடூத் சிப் மற்றும் இருப்பிடம் உணரும் திறன் கொண்ட சாதனத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ள இந்தக் குடையில் என்ன விஷேசம் என்றால், மழை



பெய்யும்போது இந்தக் குடையை மறக்காமல் எடுத்துச் செல்லலாம் என்பதோடு, வெளியே எடுத்துச்செல்லும் குடையை எங்கும் மறந்து வைத்துவிடாமல், ஞாபகமாக வீட்டுக்கும் எடுத்து வரலாம்.

எப்படித் தெரியுமா? இந்தக் குடை, அதற்கென உரிய செயலியுடன் வருகிறது. ஸ்மார்ட் போனில் செயலியை டவுன்லோட் செய்து, அதை குடையுடன் இணைத்துவிட வேண்டும். அதன்பிறகு, அடுத்த சில நாள்களில் மழை பெய்ய வாய்ப்பு இருக்கிறதா என்பதை செயலியை பார்த்தே தெரிந்துகொள்ளலாம்.

ஆக, மழை பெய்யும் நாள்களில் குடையை வீட்டிலே வைத்துவிட்டு தவிக்க வேண்டாம். அதேபோல், குடையை எடுத்துச்செல்லும்போது மறதியாக எங்கும் வைத்துவிட்டு வரும் அபாயமும் இல்லை. பொது இடங்களில் குடையை மறந்து வைத்துவிட்டுச் செல்லும்போது, இதன் செயலி வழியே இணைப்பு இல்லாமல் போவதை உணர்ந்து, இதுபற்றி ஸ்மார்ட் போனுக்கு எச்சரிக்கை தகவல் அனுப்பி வைக்கப்படும். அதைப் பார்த்து, குடையை மறக்காமல் எடுத்து வந்துவிடலாம்.

கொட்டும் மழையில் மட்டுமல்லாமல், வேகமாக வீசும் காற்றையும் தாங்கும் வலுவான குடையாக இது வடிவமைக்கப்பட்டுள்ளது. இதேபோல் அம்சம் கொண்ட டேவக் அலேர்ட் (Davek Alert) குடை, கிக்ஸ்ராட்டரில் அறிமுகமாகி இருக்கிறது.

இந்தக் குடையும், ப்ளூடூத் மற்றும் இருப்பிடம் உணரும் வசதியுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. குடையை விட்டு குறிப்பிட்ட தொலைவு சென்றாலே, இந்தக் குடை தன்னைப் பற்றி ஸ்மார்ட் போனுக்கு நினைவூட்டும். இதில், வானிலை அறியும் வசதி இருக்கிறது.

நம்நாட்டிலும் இத்தகைய ஸ்மார்ட் குடைகளை விரைவில் எதிர்பார்க்கலாம்.

கிஷா குடைக்கான இணையத்தளம் - www.getkisha.com/

(தொடரும்)

அடைந்தனர்.

அதுமட்டுமன்று. அவர் தலைமை தாங்கும் ஐ.தே.க கட்சிதான் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வாக காலத்துக்காலம் உருவாக்கப்பட்ட பண்டா - செல்வா ஒப்பந்தம், இந்திய - இலங்கை உடன்படிக்கை, சந்திரிகாவின் தீர்வுத் திட்டம் என்பனவற்றை நடைமுறைப்படுத்த விடாமல் தடுத்தவர்கள். அவரது மாமன் ஜே.ஆர். ஜெயவர்தன தான் பண்டா - செல்வா உடன்படிக்கையைக் கிழித்தெறிய வைப்பதற்காக அபகீர்த்திமிக்க "கண்டி யாத்திரை"யை முன்னின்று நடாத்தியவர். அவரது ஆட்சியில்தான் 1977, 1981, 1983 ஆண்டுகளில் தமிழ் மக்கள் மீது அரச ஆதரவுடன் வன்செயல் கட்டவிழ்த்துவிடப்பட்டு, வாழ்விடங்களை விட்டு துரத்தியடிக்கப்பட்டார்கள்.

அந்த மாமனாரின் அரசில் ரணில் முக்கியமான ஒரு அமைச்சராகப் பதவி வகித்தவர் என்பதும் மறந்து விடக்கூடியதல்ல. ரணிலின் ஐ.தே.க தான் 1977இல் பதவிக்கு வந்ததும் அரசியல் ரீதியாகத் தீர்வுகாண வேண்டிய இனப்பிரச்சினையை யுத்தமாக மாற்றியது என்பதையும் மறந்துவிட முடியாது.

எனவே ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் என யாராவது (கூட்டமைப்பு அப்படிச் சொல்லித்தான் தமிழ் மக்களை ஏமாற்ற முயல்கிறது) சொன்னால், அவர்கள் மோசடிக்காரர்கள் அல்லது அவர்களுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது என்றுதான் சொல்லவேண்டும்.

இதில் சந்திரிகா இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் உண்மை விசுவாசத்துடன் செயற்பட்டவர் என்ற ஒரு கருத்து இருந்தது. ஆனால் மகிந்த ராஜபக்ஷ மீதான அரசியல் காழ்ப்புணர்ச்சி, குரோதம் என்பன காரணமாக அவர் ஐ.தே.க.வுடன் சேர்ந்ததின் மூலம் அதைக் கெடுத்துக் கொண்டுள்ளார்.

இந்த நிலைமையில் என்ன முகாந்திரத்தை வைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்றைய ஐ.தே.க. அரசாங்கத்தை ஆதரிக்கின்றது என ஒருவர் யோசிக்கக்கூடும். ஆனால், அதற்கான காரணங்கள் கூட்டமைப்புக்கு உண்டு. தமிழ் மக்களின் பிரச்சினையை விட கூட்டமைப்புக்கு அந்தக் காரணங்கள் முக்கியமானவை.

அதில் பிரதானமானது, இனப்பற்றை விட ஐ.தே.க.வுடனான வர்க்கரீதியான, அரசியல் ரீதியான பற்றுதல் கூட்டமைப்புக்கு முக்கியமானது. அடுத்தது, இலங்கை அரசியலில் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான, ஜனநாயக மற்றும் முற்போக்கு சக்திகளை தொடர்ச்சியாக எதிர்த்து வந்ததின் பழக்க தோசம். இன்னொன்று, இனப்பிரச்சினையை யாராவது தீர்த்துவிட்டால், பிச்சைக்காரனின் புண்ணைப் போல அதைக்காட்டி அரசியல் பிழைப்பு நடாத்த முடியாமல் போய்விடுமே என்ற அச்சம்.

எனவே ஐ.தே.க. ஆட்சிக்கு வந்தால் கூடிக்குலாவுவதும், ஏனைய கட்சிகள் வந்தால் எதிர்ப்பு அரசியல் நடாத்துவதும் என்ற தமிழ் தலைமைகளின் இரட்டை வேட அரசியலால், தமிழ் மக்களின் பிரச்சினை மீண்டும் கிணற்றில் போட்ட கல்லாக மாறிவிடப்போகும் அபாயம் எழுந்துள்ளது. இந்த அவல நிலையை முற்போக்கு சக்திகள் சரியாகவும், தீர்க்கதரிசனத்துடனும் புரிந்து கொண்டு, சரியான தலைமைத்துவத்தைத் தமிழ் மக்களுக்கு வழங்குவதற்கு பிரயத்தனம் எடுக்க வேண்டும்.

## சந்திரபாபு சொல்கிறார்..



என் வாழ்க்கையிலேயே மறக்க முடியாத நாள் ஒன்று உண்டு. அது.. 1949ஆவது ஆண்டு, பெப்ரவரி மாதம், 18ஆம் திகதி!

நான்கு நாட்களாக குலைப் பட்டினி. காலை, 8:30 மணிக்கு, ஜெமினி அதிபர் எஸ்.எஸ்.வாசனை அவரது வீட்டில் சந்தித்தேன். அவரது படங்களில் சிறு வேடம் கொடுக்குமாறு கெஞ்சினேன்.

"மனு எழுதி ஸ்ரூடியோவில் பதிவு செய்து வை; கவனிக்கிறேன்!" என்று சொன்னார்.

"என் திறமைகளை நேரில் நிரூபிக்க இதோ இருக்கிறேனே... மனு எதற்கு..." என்று வாதாடினேன்.

"எல்லாம் முறைப்படி தான் நடக்க வேண்டும்..." என்று பிடிவாதமாக சொல்லி விட்டார்.

ஏமாற்றத்துடன், நண்பகல் 12:00 மணி வரை கடும் வெயிலில், கால் போன போக்கில் திரிந்தேன். பின், ஒரு முடிவுக்கு வந்து, ஜெமினி ஸ்ரூடியோவுக்கு சென்று, ஜெமினி கணேசனை சந்தித்தேன். அவரும், அங்கு ஒளிப்பதிவாளராக இருந்த தம்புவும், என் திறமையில் நம்பிக்கை உள்ளவர்கள். இருப்பினும், ஜெமினி ஸ்ரூடியோவில் என்னை சேர்த்துவிட இயலாத வகையில், நடிகர் தேர்வு இலாகாவில், சாதாரண குமாஸ்தாவாகத் தான் இருந்தார் ஜெமினி கணேசன்.

அவரிடம், மூன்று ரூபாய் கேட்டேன் கொடுத்தார். அதில், இரண்டு ரூபாய்க்கு, பாஷாணம் (விஷம்) வாங்கினேன். ஒரு பிரபல ஹோட்டலுக்குச் சென்று டிபன் சாப்பிட்டேன்.

மீண்டும் ஜெமினி ஸ்ரூடியோவுக்குத் திரும்பினேன். அங்குள்ள சிற்றுண்டிச் சாலையில் அமர்ந்து, வாசனுக்கு கடிதம் எழுதி, அதை மடித்து பையில் வைத்தேன் பின், ஒரு டம்ளர் தண்ணீர் வாங்கி, அதில், விஷத்தைக் கலந்து குடித்தேன்.

ஒரே குமட்டல் கொஞ்ச நேரத்தில் நினைவை இழந்தேன்.

இரவு, 1:30 மணிக்கு கண் விழித்த போது, என் இருபுறமும் இரண்டு பொலிஸ்காரர்கள் உட்கார்ந்திருந்தனர். ராயப்பேட்டை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு, பிழைக்க வைக்கப்பட்டிருந்தேன்.

"நீ இப்படிச் செய்யலாமா?" என்று, அன்புடன் கடிந்து கொண்ட பொலிஸ் இன்ஸ்பெக்டர் மீது, எனக்குக் கோபம் வந்தது. "உங்கள யார் என்னைப் பிழைக்க வைக்கச் சொன்னது..." என்றேன்.

தற்கொலை முயற்சிக்காக, என் மீது வழக்கு தொடரப்பட்டது. விசாரணையின் போது, நீதிபதியிடம் எதிர்வாதம் செய்தேன்.

"உன் மனதில் ஏதோ குறை என்று சொல்கிறாயே... என்ன குறை என்று சொல்..." என்றார் நீதிபதி. உடனே நான், என் காற்சட்டைப் பையிலிருந்து தீப்பெட்டியை எடுத்து, அதில் ஒரு குச்சியைக் கிழித்து, என் கையைச் சுட்டு, "நெருப்பு சுடும் என்று தான் சொல்ல முடியுமே தவிர, சூடு எப்படி இருக்கும் என உணர்த்த முடியாது. அது, அவரவர்களால் தான் உணர முடியும்..." என்றேன்.

இறுதியில், "முதல் முறை என்பதால், உன்னை மன்னித்து விடுதலை செய்கிறேன். மறுபடி நீ இங்கு வந்தால், கண்டிப்பாக தண்டிப்பேன்..." என்று தீர்ப்புக் கூறினார் நீதிபதி.

"அடுத்த தடவை நிச்சயமாக உங்களிடம் வர மாட்டேன் இரண்டாவது முயற்சி நடந்தால், அது, வெற்றிகரமாக முடியும்..." என்று கூறி, கூண்டிலிருந்து இறங்கினேன்.

**(1959இல், வெளியான வார இதழ் ஒன்றில்)**

## சின்னச் சின்ன...



### வித்தை செய்யும் கரடிகள்

கரடிகளில் எத்தனையோ வகைகள் உள்ளன. அவற்றில் ஒருவகை இந்தியாவின் இமயமலை, காஷ்மீர், அஸ்ஸாம் பகுதிகளில் வாழ்கின்றன. அவையே கருங்கரடிகள். இந்த வகைக் கரடிகளைப் பிடித்து, பழக்கினால் மனிதர்கள் செய்யும் வித்தைகளையெல்லாம் அவையும் செய்யும். நடனமாடும், தலைகீழாக நிற்கும். அதனால்தான் தெருவில் வித்தை காட்டி பிழைப்போர்களும் சேர்க்கஸ்களிலும் இந்த வகைக் கரடிகளே பயன்படுகின்றன. இவற்றைக் கோமாளிக் கரடிகள் என்றும் கூறுவர்.

### கிச்சுகிச்சு மூட்டும் குரங்குகள்!

மனிதர்கள் கிச்சுகிச்சு மூட்டி சிரிப்பது போல மனிதக் குரங்குகளும் ஒன்றுக்கொன்று கிச்சு கிச்சு மூட்டி சிரித்து மகிழ்கிறது. குறிப்பாக காதல் வயப்படும் போது பெண் குரங்கை சீண்டி கிச்சு கிச்சு மூட்டி ஆண் குரங்கு சிரிக்க வைக்கிறது.

அமெரிக்காவின் பால்டிமோர் நகரைச் சேர்ந்த நரம்பியல் நிபுணர் றொபேர்ட் புரோவின் என்பவர் பல ஆண்டுகளாக ஆய்வு நடாத்தி சிரிப்பு பற்றி வெளியிட்ட தகவல்களில் ஒன்றாகும்.

### பாம்பு பயம் பன்றிக்கில்லை

பாம்பின் விஷம், இரத்தத்தில் கலந்தால் தான் உயிருக்கு ஆபத்து. பன்றியை பாம்பு கடித்தால், விஷம் உடனே அதன் இரத்தத்தில் கலப்பதில்லை. ஏனெனில், பன்றிக்கு உடலில் கொழுப்பு அதிகமாக இருக்கும். கொழுப்பில், இந்த விஷம் தங்கி சக்தியில்லாமல் போய்விடும். இக்காரணத்தால்தான் பன்றிகள் பாம்புக் கடியினால் இறப்பதில்லை.

### இயற்கையின் விந்தை

முட்டையை விட்டு முதலைக்குட்டி வெளிவரும்போது அதன் நீளம் முட்டையின் நீளத்தைவிட மூன்றரை மடங்கு பெரிது. அந்த அளவிற்கு உடம்பைச் சுருக்கிக்கொண்டு முட்டையின் உள்ளே இருந்து வளர்ச்சி அடைகிறது முதலைக்குட்டி. இது இயற்கையின் விந்தை என்று விலங்கியல் நிபுணர்கள் சொல்கிறார்கள்.

### எறும்புத் தொல்லைக்கு...

உண்ணும் பொருள் வைத்திருக்கும் பாத்திரங்களில் அல்லது பெட்டி அடிப்புறத்தில் சிறிது ஆமணக்கெண்ணெய்யைத் தடவி வைத்துவிட்டால், அப்பொருள்களை எறும்புகள் அணுகாது. தேன், நெய், பிஸ்கெற், சீனி முதலியவைகளை எறும்புகளிடமிருந்து காப்பாற்ற இது பெரிதும் பயன்படும் 15 நாட்களுக்கு ஒரு முறை தடவினாற் போதும்; ஆமணக்கெண்ணெய்யின் வாடை எறும்புக்குக் பிடிக்காது.

### மூன்று கற்பூரங்கள்

இனிப்பு வகைகளில் சேர்க்கப்படும் பச்சைக் கற்பூரம் அரோமெடிக்கா என்னும் தாவரத்திலிருந்து எடுக்கப்படுகிறது. கற்பூர மரத்திலிருந்து கிடைக்கும் கற்பூரம் கட்டி கற்பூரமாகும். வில்லை கற்பூரம் செயற்கைக் கற்பூரமாகும். இதனை பைன் மரங்களிலிருந்து எடுப்பர்.

### பூக்களின் தலைவி

மனோரஞ்சிதப் பூவுக்கு பிலிப்பைன்ஸ் நாட்டில் வழங்கப்படும் பெயர் "யாங்-யாலாங்". அந்நாட்டு மொழியில் "யாங் - யாலாங்" என்றால் "பூக்களின் தலைவி" என்று பொருள்.

### இலுப்பைப்பூ!

இலுப்பைப்பூ மலர்வதற்குப் பத்து வருடங்கள் ஆகும். ஒரு மரத்தில் சுமார் 100 கிலோ பூ கிடைக்கும்.

இது ரசமுள்ளதாகவும் இனிப்பாகவும் இருக்கும். இதில் 60 சதவீதம் சர்க்கரை உள்ளது.

"ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை" என்று கூறுவது இதனால்தான்!!

### இப்படியும் ஒரு தாவரம்!

தென்மேற்கு ஆபிரிக்காவில் வளரும் ஒரு வகைத் தாவரத்தின் பெயர் "வெல் விட்ஸ்-சியா" (Welwitschia) இதன் உயரம் ஓர் அடி. சுற்றளவு பதினைந்து அடிகள். வாழ்நாளில் இரண்டே இலைகள்தான் துளிர்க்கும்.

### கசக்கும் தேன்!

பிரேசில் நாட்டு காடுகளிலிருந்து கிடைக்கும் தேன் கசப்புச் சுவை கொண்டது. இது இயற்கையின் விந்தை என்று மருந்தியல் விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். இந்த தேனில் தாதுப் பொருள்கள், விற்றமின்கள் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் ஆற்றல் ஆகியவை உள்ளன என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. உடல் பருமனைக் குறைக்கும். குண்டு உடம்பை குறைத்து மத்திம நிலைக்கு கொண்டு வரும் தன்மை உடையது.

### 484 மூலிகை குணங்கள்

இராமலிங்க வள்ளலார் மருத்துவப் புலமை மிக்கவர். தமது அருட்பாவில் 484 மூலிகைகளின் குணங்களை விளக்கியுள்ளார். நாகபஸ்பம் உள்ளிட்ட ஏழு மருத்துவக் குறிப்புகளை அளித்துள்ளார். மனித உடல் அமைப்பு பற்றிய செய்திகளைச் சத்திய பெரு விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# முதியவர் உருவாக்கிய மலைக்குகை



மெக்சிக்கோ நாட்டின் மலைப் பகுதியிலிருந்து பாறைகளைக் குடைந்து குகைகளை உருவாக்கி கண்களைக் கவரும் வகையில் அழகுபடுத்தியுள்ளார் அமெரிக்க நாட்டைச் சேர்ந்த ரா பவ்லெட். தற்போது இவருக்கு 74 வயதாகிறது.

25 ஆண்டுகளுக்கு முன்னர் சிறிய கோடாரி, கரண்டி, முள்கரண்டி, ஸ்பூன இவற்றை எடுத்துக்கொண்டு சென்றவர், தான் செல்வதற்கு ஒரு வழியை அமைத்துக் கொண்டுள்ளார். பிறகு இதர உபகரணங்களைப் பயன்படுத்தி கல், மண் ஆகியவற்றில் தனது கலை நுணுக்கத்தைப் பதிவு செய்துள்ளார்.

குகையின் வெளிப்புறத்தில் எந்த மாற்றமும் செய்யாமல் உள்ளே அரண்மனை போன்ற வடிவமைப்பைத் தனது கற்பனை திறனால் கொண்டு வந்துள்ளார். குகையைப் பார்க்க வருபவர்களுக்குக் காயம் ஏற்படா வண்ணம் பாறைகளின் முனைகள் மழுங்கடிக்கப்பட்டு உள்ளன.



குறுகலான சந்துகள், பாழடைந்த பகுதிகள் நல்ல வெளிச்சம் வரும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. மிகவும் நீளமான இடத்தில் படிக்கட்டுகள் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் குகையினுள் தங்குவதற்கும் உறங்குவதற்கும் ஏற்ற வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. குகைக்குள் உள்ள படுக்கை, தலையணை மணலினால் செய்யப்பட்டுள்ளன.

ரா பவ்லெட் உருவாக்கிய குகையினைப் போல இன்னொரு குகையினை உருவாக்க வேண்டுமென்றால் சுமார் 6.5 கோடி ரூபாய் (9 இலட்சத்து 95 ஆயிரம் டொலர்கள்) செலவாகும் என கணக்கிடப்பட்டுள்ளதாம். இவர் இது வரை 12 குகைகளை வடிவமைத்துள்ளார்.

இந்தப் பன்னிரெண்டு குகைகளும் ஒன்றிலிருந்து மற்றொன்று வேறுபட்டதாக அமைந்துள்ளது இதன் சிறப்பம்சமாகும். குகை வடிவமைப்புக் கட்டடக்கலை நிபுண்ர்களிடையே ஆச்சரியத்தையும் சுற்றுலாப் பயணிகளிடம் பெரிய அளவில் வரவேற்பையும் பெற்றுள்ளது.

குகை வடிவமைப்பின் போது ரா பவ்லெட் வளர்த்த நாய் கருவிகளை எடுத்துக் கொடுத்து உடனிருந்து உதவி செய்துள்ளது.

# கதைகேளு ..... கதைகேளு

## மாற்றம் இல்லை

அந்தக் குளத்திற்குத் திடீர் என நிறையத் தவளைகள் தாவித் தாவி வந்து கொண்டிருந்தன. அங்கே பல நாளாகக் குடியிருந்த ஒரு தவளை, எதிர்பாராமல் இப்படிக் கூட்டமாக வரும் தவளைகளைக் கண்டு வியந்தது.

பக்கத்தில் இருந்த சின்னப் பாறையின் மேல் ஏறி உட்கார்ந்துகொண்டு, தாவித்தாவி மூச்சிரைக்க வந்த ஒரு தவளையைப் பார்த்து, கொஞ்சம் நில்லு, ஏன் இப்படித் தலைதெறிக்க எல்லோரும் ஓடி வருகிறீர்கள்? உயிரைக் காப்பாற்ற ஓடிவரும் அகதிகள் போல வருகின்றீர்களே எங்கிருந்து வருகின்றீர்கள்? என்று கேட்டது.

சரியாச் சொன்னாய்! நான் அகதிதான்... தான் வாழுற இடத்திலே வாழமுடியாத அளவுக்கு சிக்கலும சிரமமும் இருந்தா... மனிதர்கள் புலம்பெயர்ந்து போவாங்க... அதே நிலைமைதான் எனக்கும்!

எனக்குப் புரியலையே!

நாங்கள் பக்கத்திலே உள்ள வயல்வெளியில் நிறைந்திருக்கும் தண்ணீரில் இருந்தவர்கள். ப்யிரை அழிக்க வரும் பூச்சிகளைப் பிடித்துத் தின்று மனிதனுக்கு உதவி செய்து வாழ்ந்து வந்தோம். ஆனால், அந்த வயலுக்குச் சொந்தக்காரன் இரசாயன உரத்தைப் பயிருக்குப் போட்டான்.




பூச்சி மருந்தையும் தெளிச்சான். அவ்வளவுதான்... அந்த நெடி தாங்க முடியாமல், நம்ம இனத்திலே சில பேரு செத்துப் போயிட்டாங்க! நாங்க கொஞ்சம் பேரு உயிர் பிழைக்க ஓடி வந்தோம் என விவரம் சொன்னது ஓடிவந்த தவளை. அட அநியாயமே, விவரம் புரியாத விவசாயி இரசாயன உரத்தைப் பயிருக்குப் போட்டு, நிலத்தையும் கெடுத்து அவனுக்கு உதவியா வயல்ல இருந்த உங்களையும் விரட்டிட்டானே! என்று அனுதாபப் பட்டது குளத்தில் இருந்த தவளை.

ஆமா... இரசாயன உரம் போட்டா, மண்ணிலே இருக்கிற நன்மை தரும் நுண்ணுயிர் எல்லாம் செத்துப் போயிடும். உழவனின் நண்பன்னு சொல்ற மண்புழுகூட 'செத்துப்போயிடும். மண்ணை வளமாக்குகிற நுண்ணுயிர்களை அழிக்கிறதால கொஞ்ச நாளில் மண்ணே மலட்டுத் தன்மை அடைஞ்சிடும்.



அதுமட்டுமா?... பூச்சி மருந்து தெளிக்கிறதால அவனுக்கு உதவியா இருந்த எங்களை விரட்டினதோட பல வகையிலும் விவசாயிக்கு உதவிவரும் பட்டாம்பூச்சி, தும்பி போன்ற உயிரினத்தையும் அழிச்சிடுறானே, இந்த மனிதன்! என்று குமுறியது வயல் தவளை .இரசாயன உரம், பூச்சி மருந்து இதெல்லாம் இல்லாமல் எப்படி ஒரு விவசாயி, விவசாயம் செய்ய முடியும்? புரியாமல் கேட்டது குளத்துத் தவள்ளை. மனிதர்கள் இயற்கையை மறந்துட்டு செயற்கையைத் தேடி ஓடுறாங்க!...இயற்கையான உரமும், இயற்கை விவசாயமும் செய்தா நிலம் கெடாது நீர் மாசுபடாது வளம் குறையாது. இரசாயன உரம் ஒரு காலகட்டம் வரை அதிக பயன் தரும். பிறகு; பூமியில சத்தே இல்லாதபடி செய்துவிடும்.

அது மட்டுமில்ல. நவீன பூச்சி மருந்து நன்மை செய்யிற பூச்சிகளையும் சேர்த்து அழிச்சுடும்! இயற்கையை அழிச்சு, செயற்கையை நேசிக்கிற இவங்க மனநிலை எப்பத்தான் மாறுமோ' தெரியல! என்றது வயல் தவளை.

தவளை கத்திப் பொழுது விடியுமான்னு பழமொழி பேசுகிற மனிதர்களுக்கு, நாம பேசுறது கேக்கவா போகுது? சரி... சரி. வாங்க, இந்தக் குளத்திலே இருந்தாலும் நாம ஒற்றுமையா இருப்போம்! என்று தத்துவம் பேசி வரவேற்றபடி நீரில் தாவிக் குதித்து நீந்தியது குளத்துத் தவளை.

வயல் தவளை அதைப் பின்தொடர்ந்தது.

# நினைவுகூரும் தினங்கள்

**ஜனவரி**
26 – உலக சுங்க தினம்
30 – உலக தொழுநோய் ஒழிப்பு தினம்

**பெப்ரவரி**
14 – உலக காதலர் தினம்

**மார்ச**
08 – உலக பெண்கள் தினம்
15 – உலக நுகர்வோர் தினம்
20 – உலக ஊனமுற்றோர் தினம்
21 – உலக வன தினம்
22 – உலக நீர் தினம்
23 – உலக வானிலை ஆய்வு தினம் / உலக புத்தக மற்றும் பதிப்புரிமை தினம்
24 – உலக காசநோய் தினம்
28 – உலக கால்நடை மருத்துவ தினம்

**ஏப்ரல்**
05 – உலக கடல் தினம்
07 – உலக சுகாதார தினம்
12 – உலக வான் பயண தினம்
18 – உலக பரம்பரை தினம்
22 – உலக பூமி தினம்
30 – உலக குழந்தைத் தொழிலாளர் தினம்

**மே**
01 – உலக தொழிலாளர் தினம்
03 – உலக சக்தி தினம்
08 – உலக செஞ்சிலுவை தினம்
12 – உலக செவிலியர் தினம்
14 – உலக அன்னையர் தினம்
15 – உலக குடும்ப தினம்
16 – உலக தொல்லைக்காட்சி தினம்
24 – உலக கொமன்வெல்த் தினம்
29 – உலக தம்பதியர் தினம்
31 – உலக புகையிலை மறுப்பு தினம்

**யூன்**
04 – உலக இளம் குழந்தைகள் தினம்
05 – உலக சுற்றுப்புற தினம்
18 – உலக தந்தையர் தினம்
23 – உலக இறை வணக்க தினம்
26 – உலக போதை ஒழிப்பு தினம்
27 – உலக நீரிழிவாளர் தினம்
28 – உலக ஏழைகள் தினம்

தொடர்ச்சி அடுத்தவாரம் ..............

**சென்றவாரம் பிரசுரமாகிய பொதுஅறிவு வினாக்களின் விடைகள்**

(1).8 (2).புதன்
(3).பூமி நிலாவை சுற்றுவதில்லை
(4).வியாழன் (5).திருநெல்வேலி மாவட்டம்

# வரைந்து பாருங்கள்



### - உதவி வழங்கும் நிறுவனங்களிடம் -

# உதவிகளைப் பெற்றுக் கொடுக்க கிராம அபிவிருத்திச் சங்கம் பணம் அறவீடு

(முழங்காவில்)

முழங்காவில், கரியாலை நாகபடுவான் கிழக்கு பகுதிக்கு உட்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் மக்களுக்கு உதவி வழங்குவதற்கு முன்வரும் நிறுவனங்களிடம் இருந்து குறித்த காலத்தில் உதவிகளைப் பெற்றுக்கொடுக்கவில்லை என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேற்படி விடயம் தொடர்பாக தெரியவருவதாவது கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர், பொருளாளர், செயலாளர் உள்ளிட்டோர் உதவி வழங்க முன்வரும் நிறுவன உறுப்பினர்களுக்கு சலுகைகளை வழங்க உதவி கோரிய மக்களிடமிருந்து சிறு தொகைப் பணத்தைப் பெறுவதோடு உதவிகள் உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கூறி மக்களை ஏமாற்றுகின்றனர். எனவே இது தொடர்பில் அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## சாமசிறி தேசமான்ய விருது




வவுனியாவில் கடந்த சனிக்கிழமை சமூக சேவைக்காக சாமசிறி தேசமான்ய விருதை பூநகரி பிரதேச செயலகத்தின் சமூக சேவைகள் அபிவிருத்தி அலுவலர் செல்லத்தம்பி சுரேந்திரா பெற்றுக் கொண்டார்.

வட மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமை புரியும் இவர் வடமராட்சி அல்வாய் கிராமத்தைச் சேர்ந்தவர். பிரதேச செயலரின் வழிகாட்டலில் இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் சுய தொழில் ஓய்வூதியத் திட்டத்தில் 2014 ஆம் ஆண்டில் அதிக பயனாளிகளை இணைத்து அகில இலங்கை ரீதியில் பூநகரி பிரதேச செயலகத்தை முதலாம் இடத்திற்கு வெற்றி பெற வைத்தார்.

இதற்காக கிராம அலுவலர்கள்,சமுர்த்தி முகாமையாளர்கள் ,சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள் ஆகியோரை சிறப்பாக இணைத்து செயற்பட்டமைக்காக பிரதேச செயலரின் பாராட்டையும் பெற்றவர்.ஓய்வு நாட்களில் அறநெறி ஆசிரியராகவும் கடமை புரிகின்றார். (90)

## ஆரியம்பிட்டி இந்து மயானத்தை புனரமைக்குமாறு கோரிக்கை

வலி. தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட ஆரியம்பிட்டி இந்து மயான சூழல் வெறும் பற்றைக்காடாக உள்ளது.

கடந்த 5 வருடங்களுக்கு மேலாக மீள்புனரமைப்பு இன்றி காடாக உள்ள மயானத்தை மீள் புனரமைப்பு செய்து தருமாறு நவாலி பொது அமைப்புக்கள் ஒன்று கூடி வலி.தென்மேற்கு தவிசாளரை கோரியுள்ளனர்.

மீள்புனரமைப்பு இன்றியுள்ள நவாலி ஆரியம்பிட்டி இந்து மயானம் தொடர்பாக பொது அமைப்புக்கள் கருத்துத் தெரிவிக்கையில்:

கடந்த காலங்களில் பிரதேச சபை சுகாதார தொழிலாளர் 5பேர் வீதம் 3,4 நாட்கள் வருடத்தில் இரு தடவைகள் மக்கள் பங்கேற்புடன் மீள்புனரமைப்பு செய்வது வழமை. தற்போது இதற்கு பொருத்தமான சுகாதார மேற்பார்வையாளர் இருந்தும் மயான அபிவிருத்தி வேலைகள் ஒரு நாள் கூட இடம்பெறவில்லை.

மேலும் மயான பூமியை நில அளவை செய்து, சுற்றுமதில் அமைத்து வீதியிட்டு வழங்குமாறு கோரிக்கை விடப்பட்டும் பிரதேச சபை மௌனமாக உள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ். மாவட்டத்தில் தற்போது ஏனைய மயானங்கள் மீள்புனரமைப்பு செய்யப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (92)

## மகுடம் கலை இலக்கிய வட்டத்தின் பௌர்ணமி கலை நிகழ்வின் விசேட தொடர்



மகுடம் கலை இலக்கிய வட்டம் பௌர்ணமி தினங்களில் நடாத்திவரும் பௌர்ணமி கலை நிகழ்வின் தொடர் அமர்வின் பதினொராவது விசேட அமர்வு கடந்த சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு மட்டக்களப்பு - மாநகர சபை நகர மண்டபத்தில் நடைபெற்றது.

கிழக்கிலங்கையில் முதன் முறையாக திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய பிரதேச படைப்பாளிகள் கலந்து கொண்ட உரையாடல் பொதுவெளியில் கிழக்கிலங்கையின் அடையாளத்தை முன்னிறுத்திய கலை இலக்கியப் படைப்புகள் அன்றும் இன்றும் " என்ற தலைப்பில் எழுத்தாளர் திருக்கோவில் கவியுவன் தலைமையில் இடம்பெற்றது.

பேராசிரியர் சி.மௌனகுரு, எழுத்தாளர் திருமலை நவம் ஆகியோரின் வழிப்படுத்தலில் திருமலை, அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த ஐம்பதுக்கும் மேற்பட்ட எழுத்தாளர்கள் கலந்து கொண்டனர். தொடர்ந்து எழுத்தாளர் ஜீவகுமாரனின் மூன்று நூல்கள் அறிமுகம் பேராசிரியர் சி.மௌனகுரு தலைமையில் ஆரம்பமாகியது.

வரவேற்புரையை மகுடம் கலை இலக்கிய வட்டத் தலைவர்-கவிஞர் வி. மைக்கல் கொலின் ஆற்ற அ.ச.பாய்வா, திருமலை நவம். பேராசிரியர் செ.யோகராசா ஆகியோர் விமர்சன உரை ஆற்றினர். மூன்றாம் நிகழ்வாக பேராசிரியர் சி. மௌனகுருவின் அரங்க ஆய்வுகூட மாணவர்களின் அரங்க அறிக்கை இடம்பெற்றது. (90)

# பதிவிருக்கப் பெட்டகம்

முதல் புத்தகம் எப்பொழுது எழுதப்பட்டதோ அன்றுதான் மனிதனின் குரங்கு நிலை முற்றுப் பெற்றது. அவன் குரங்கைத் தோற்கடித்தான். குரங்கு அதை இன்றுவரை மறக்கவில்லை: அதனிடம் ஒரு புத்தகத்தைக் கொடுத்துப் பாருங்கள் – உடனடியாக அதை நாசம் செய்யும், கிழித்தெறியும், அசிங்கப் படுத்தும்.

**– எவ்கெனி ஸாமியாழன்**

எனது நாற்பதாண்டுகால எழுத்தனுபவத்தில் நான் பார்க்காத புறக்கணிப்பு இல்லை. பெண்கள் முதல் வாசகர்கள் வரை எல்லா நிராகரிப்பையும் பார்த்தாயிற்று. நோபல், சாகித்திய அகாடமி போன்ற பெரிய விருது அமைப்புகளைப் பற்றி வேண்டிய அளவு எழுதியாயிற்று. இன்னும் எழுதலாம் (எனக்கு அங்கீகாரம் தராததில் இவர்களுக்கு என்ன கிடைக்கிறது என்று புரியவில்லை). இத்தனை அதிருப்திகளையும் மீறி நான் ஏன் தொடர்ந்து எழுதுகிறேன் தெரியுமா? இல்லையென்றால் வீட்டு வேலைகள் செய்ய வேண்டியிருக்கும்.

**– பேயோன் வலைத்தளத்தில்**

ஹெட்மாஸ்டர் சக்கரபாணி ஒரு பேரிலக்கியப் பித்தர். தர்மங்களை மயிரிழை பிசகாமல் பாத்திரங்கள் மூலம் நிறைவேற்றுவதுதான் உன்னத இலக்கியம் என்ற கொள்கைப் பிடிவாதம் அவருடையது.

**– பிரமிள் சிறுகதை ஒன்றில்**

சுஜாதாவின் பொழுதுபோக்கு வேலிகளை உடைப்பது. கதைக்கு எடுத்துக் கொள்கிற விஷயத்திலும், கதையை எழுதுகிற நடையிலும், கதைக்குக் கொடுக்கிற அமைப்பிலும், பழைய வேலிகளை உற்சாகமாக உடைத்துக் கொண்டு தனிக்காட்டு ராஜாவாய்த் துள்ளுகிறார் அவர். என்ன புதுமைகளைப் புகுத்தினாலும் தமிழினால் தாங்க முடியும் என்பதை உணர்ந்திருப்பதால் பேனாவை வைத்துக் கொண்டு சுதந்திரமாய்ச் சிலம்பு விளையாடுகிறார். ஒரோர் சமயம் அவருடைய கையெழுத்துப் பிரதியைப் பார்க்க நேர்கையில், "டெலிபோனை வைத்து விட்டு, 'வஸந்த், பதினைஞ்சு நிமிஷத்திலே தயாராகணும்'!" என்று வாக்கியம் மொட்டையாக நின்று விடுவதைக் கண்டு நான் திடுக்கிட்டதுண்டு. அந்த இலக்கண விநோதத்தை அனுமதிக்கக் கூடாதென்று முடிவு செய்து, உடனே பேனாவை எடுத்து, 'என்றான்' என்று முடிப்பேன். முடித்துவிட்டு வாசித்துப் பார்த்தால், அவர் மொட்டையாக விட்டிருந்தபோது இருந்த அழுத்தம் இந்தப் பூர்த்தியான வாக்கியத்தில் இல்லை போலிருக்கும். முணுமுணுத்தபடியே அந்த 'என்றானை' அடித்துவிடுவேன்"

**– ரா.கி.ரங்கராஜன்**

இந்த ஜோதிடம் எல்லாம் பொய், பித்தலாட்டம் என்றாலும் நம் பெருமாள் முருகனுக்கு நடந்ததைப் பார்த்த பின் எனக்கு விதியின் மீது மிகுந்த நம்பிக்கை வந்து விட்டது. சராசரி எழுத்தாளர் என்று கூட சொல்ல முடியாத ஒருவர் ஒரே நாளில் உலகப் புகழ் அடைகிறார் என்றால் அதற்கு என்ன அர்த்தம்? அந்த நாவல் வந்து மூன்று ஆண்டுகள் ஆகிறதே? சோ எல்லாம் தலையங்கம் எழுதினார். தில்லியிலிருந்து கருத்து கேட்டார்கள். பாரிஸிலிருந்து வந்த ஒரு பெண் அதை ஃப்ரெஞ்சில் மொழிபெயர்த்து விட்டுத்தான் மறுவேலை என்று ஒற்றைக் காலில் நின்றார். அதற்கு நான் உதவி செய்ய வேண்டுமாம். மேற்கொண்டு பேசினால் ரசாபாசம் ஆகி விடும் என்று மிரட்டி அனுப்பினேன்.

சினிமாத் துறையை எடுத்துக் கொண்டால் அது முழுக்க முழுக்க விதியின் கையிலேயே சிக்குண்டு கிடப்பதைக் காணலாம். சிவகுமாரின் இரண்டு புதல்வர்கள் பெரிய அளவில் முன்னுக்கு வந்து விட, பாரதிராஜாவின் புதல்வர் வேலையில்லாமல் இருக்கிறார். திறமை இருந்தும் விஜயகுமாரின் புதல்வர் அதிகம் பிரபலமாகாமல் இருக்கிறார். நேற்று வந்த ஒரு புதுமுகம் சிம்ஹா இன்று தேசிய விருது பெற்று விட்டார். ராமராஜன் ஹீரோ ஆனது விதிவசம் இல்லையா? இயக்குனர் ஜீவா இளம் வயதில் இறந்ததும் அப்படித்தான் என்று தோன்றுகிறது. மேலும், ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும் என்று இளங்கோ அடிகளும், ஊழில் பெருவலி யாவுள என்று வள்ளுவரும் சொன்னதைத் தவறு என்று என்னால் நினைக்க முடியவில்லை.

**– சாருநிவேதிதா**

# கிழக்கு பல்கலைக்கழக விரிவுரைகள் ஆரம்பம்

கிழக்குப் பல்கலைக்கழக 2013ஆம் 2014ஆம் கல்வியாண்டுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள முதலாம் வருட புதிய மாணவர்களுக்கான விரிவுரைகள் எதிர்வரும் 27 ஆம் திகதி ஆரம்பிக்கபடவுள்ளதாக பல்கலைகழக சிரேஷ்ட உதவிப் பதிவாளர் ரி.பாஸ்கரன் தெரிவித்தார்.

கலை, கலாசார பீடம், விவசாய பீடம், வர்த்தக முகாமைத்துவப் பீடம், விஞ்ஞானப் பீடம் போன்ற மேற்படி பீடங்களைச் சேர்ந்த சகல மாணவர்களும் 26 ஆம் திகதி மாலை 05.00 மணிக்கு முன்னர் கிழக்கு பல்கலைக் கழகம், வந்தாறுமூலை, செங்கலடி எனும் விலாசத்திற்கு சமுகமளிக்குமாறு சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அழைப்பு விடுத்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பாக மேலதிக விபரங்களுக்கு பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

கிழக்கு பல்கலைக்கழகம் (பொது) 065-2240490, உதவி பதிவாளர் மாணவர் நலன்புரி சேவைகள் 065-2240731.

# மாகாண சபை அதிகாரங்கள் உள்ளக ஆராய்வே சிறந்தது

## முன்னாள் முதலமைச்சர் தெரிவிப்பு



மாகாணங்களின் அதிகாரங்களை உள்நாட்டுக்குள் ஆராய்வதே மிகச் சிறந்தது எனவும் நாட்டில் உள்ள ஆட்சியாளர்களும் சிறுபான்மை மற்றும் ஜனநாயக சக்திகளும் இணைந்து பேச்சு நடத்தினால் மட்டுமே மாகாண சபையினை அர்த்தமுள்ளதாக மாற்றிக் கொள்ள முடியுமெனவும் முன்னாள் வடகிழக்கு முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் தெரிவித்தார்.

முன்னாள் வடகிழக்கு முதலமைச்சரின் அனுபவ பகிர்வு எனும் தொனிப்பொருளிலான கலந்துரையாடல் யாழ்ப்பாணம் வைமன் வீதியில் அமைந்துள்ள ஆறுதல் நிறுவனத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.

அதன்போது, வடகிழக்கு முதலமைச்சராக இருந்த அனுபவத்தினைப் பகிரும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இலங்கையில் மாகாண சபைகள் உருவாகுவதற்கு இந்தியா காரணமாக இருந்தாலும், மாகாண சபைக்குள் இருக்கும் அதிகாரங்கள் குறித்து கரிசனை கொள்ளாது என நினைக்கின்றேன் என்றார்.

ஆத்துடன், மாகாண சபைகளில உள்ள குறைபாடுகளிற்குள் இந்தியா தலையிட வாய்ப்பு இல்லை என்றும் கூறினார்.

இலங்கையில் உள்ள மாகாண சபைகளின் அதிகாரங்கள் அதாவது. வடகிழக்கு மாகாணங்களின் அதிகாரங்களை பற்றி உள்நாட்டிற்குள் ஆராய்வதே மிகச்சிறந்தது. இதன் மூலமே மாகாண சபைகளுக்கான அதிகாரங்களை பெற முடியுமென்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

மாகாண சபையினை செயற்பட வைக்க முடியாவிட் டால், அந்த மாகாண சபை தேவையில்லை என கூறமுடியுமென்பதுடன், ஜனநாயக சக்திகள் மற்றும் சிங்கள மற்றும் ஏனைய சமூகத்தினரும் இணைந்து பேச்சு நடத்தி மாகாண சபைகளை அர்த்தமுள்ளதாக மாற்றிக் கொள்ள வேண்டும்.

சர்வதேசங்கள் 13வது திருத்தத்தினை உடனடியாக நிறைவேற்று என கூறினாலும், 13 ஆவது திருத்த சட்டத்தில் உள்ள என்ன விடயத்தினை நிறைவேற்று என கூறமாட்டார்கள். அந்த 13ஆவது திருத்தத்தினை நிறைவேற்றுவதற்கு உள்நாட்டிலேயே பேசி நிறைவேற்றிக்கொள்ள வேண்டிய அவசியம் இருப்பதாக அவர் சுட்டிக் காட்டினார்.

மாகாண சபைகள் சிறப்பாக இயங்குவதற்கு புறச்சூழல் அவசியமானது, இந்த புறச்சூழல் வடகிழக்கு மாகாணங்கள் இணைந்திருந்த காலத்தில் மிகச் சாதகமாக இருந்தது. தற்போது சாதகமான புறச்சூழல்கள் காணாவிட்டாலும், வேறு விதமான புறச்சூழல்கள் காணப்படுகின்றன. அவற்றினை ஆராய்ந்து. மாகாண சபைகள் சிறப்புற நடப்பதற்கு நடவடிக்கை மேற கொள்ள வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தினார்.

இவ்வாறான சாதகமான சூழல்களைப்பயன்படுத்தி மாகாண சபை முறைமைகளை மாற்றி அமைக்க வேண்டும். முடியாதது ஒன்றுமில்லை. மனமுண்டானால் இடமுண்டு என்றும் இந்த இடத்தினை வரவழைக்க முயற்சிக்க வேண்டுமென்றும் தனது அனுபவத்தினைப் பகிர்ந்தார். (25)

# முதலாம் தரத்திற்கான மாணவர் அனுமதி முறைமையில் மாற்றம்




(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் உள்ள அரசாங்கப் பாடசாலைகளில் தரம் ஒன்றுக்கான மாணவர் அனுமதி முறையில் மாற்றம் கொண்டு வரப்பட உள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

நாடளாவிய ரீதியில் உள்ள அரசாங்கப் பாடசாலைகளில் தரம் ஒன்றுக்கான மாணவர் அனுமதி தொடர்பில் தற்போது அமுலில் உள்ள நடைமுறைகளில் பாரியளவில் மாற்றங்கள் செய்ய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அந்தவகையில் பாடசாலையை அண்மித்த பகுதிகளில் வதிவோருக்கு விசேட வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும வகையில் புள்ளி வழங்கும் நடவடிக்கைகளில் மாற்றம் செய்யப்பட உள்ளதோடு இதற்கு மேலதிகமாக தற்போது நடைமுறையில் உள்ள புள்ளி வழங்கும் முறைமையில் மாற்றம் செய்யப்பட உள்ளது.

தரம் ஒன்றுக்கான மாணவர் அனுமதி தொடர்பிலான விண்ணப்பங்கள் ஜூன் மாதம் கோரப்படுகின்ற போதிலும், புதிய முறைமையின் கீழ் மே மாதமே விண்ணப்பிக்க வேண்டுமெனத் தெரிவிக்கப்படுகிறது. அதனடிப்படையில் இவற்றுக்கான விண்ணப்பங்கள் பரிசீலனை, நேர்முகத் தேர்வு, மேன்முறையீடு, பெயர்ப்பட்டியல் வெளியீடு போன்ற அனைத்து நடவடிக்கைகளும் அதே ஆண் டில் மேற்கொள்ள் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

முதலாம் தவணையிலேயே சகல மாணவர்களையும் தரம் ஒன்றில் இணைத்துக் கொள்ளும் நோக்கில் இந்த மாற்றங்கள் செய்யப்பட உள்ளதாக கல்வி அமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# முல்லைத்தீவு மாவட்டத்தில் 1014 பெண் தலைமைத்துவங்கள்

முல்லைத்தீவு, கரைதுறைப் பற்று பிரதேசத்தில் ஆயிரத்து பதின்நான்கு குடும்பங்கள் பெண் தலைமைத்துவ குடும்பங்களாக காணப்படுகின்றன என மாவட்டச் செயலக புள்ளிவிபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவின் கீழ் கடந்த கால யுத்தம் மற்றும் இயற்கை அனர்த்தங்கள் ,விபத்துக்கள் காரணமாக கணவன்மாரை இழந்த நிலையில் 806 குடும்பங்கள் பெண் தலைமைத்துவ குடும்பங்களாக காணப்படுகின்றன.

இதைவிட குடும்பப் பிணக்குகள், பொருளாதார நெருக்கடிகள், குடும்ப வன்முறைகள் காரணமாக 208 குடும்பங்கள் கணவன்மாரால் கைவிடப்பட்ட பெண்களைக் கொண்ட குடும்பங்களாகவும் காணப்படுகின்றன என மாவட்ட செயலக புள்ளி விபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஆயிரத்து பதின்நான்கு குடும்பங்கள் பெண் தலைமைத்துவக் குடும்பங்களாக காணப்படுகின்ற நிலையில் அவர்களது பொருளாதாரம் பாதிக்கப்பட்ட நிலையில் காணப்படுவதுடன் அவர்களின் கீழ் தங்கி வாழ்வோரின் பல்வேறு விடயங்களும் பாதிக்கப்பட்டு வருகின்றன.

# இஸ்ரேலில் உள்ள இலங்கையர்கள் மீண்டும் நாடு திரும்ப வேண்டும்

## வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவிப்பு

(கொழும்பு)

தொழில் ஒப்பந்தங்கள் காலாவதியாகியுள்ள நிலையில், தொடர்ந்தும் இஸ்ரேலில் தங்கியுள்ள இலங்கையர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு ப்ணியகம் தெரிவித்துள்ளது.

சட்டவிரோதமாக இஸ்ரேலில் தங்கியுள்ளவர்களுக்கு எதிராக சர்வதேச பிடியாணை பிறப்பிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக பணியகத்தின் தலைவர் நந்தபால விக்ரமசூரிய குறிப்பிடுகின்றார்.

தொழில் சந்தையில் இலங்கையின் இளைஞர்களுக்கு அதிக வாய்ப்புகள் காணப்படுகின்ற நாடுகளில் முன்னணியில் இருக்கின்ற ஒரு நாடாக இஸ்ரேல் விளங்குவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

சட்டவிரோதமாக பலர் இஸ்ரேலில் தங்கியிருப்பதன் காரணமாக ஏற்பட்டுள்ள சூழ்நிலையின் கீழ், இலங்கையிலிருந்து தொழிலுக்காக அந்த நாட்டிற்கு செல்வதற்கு எதிர்பார்த்துள்ள சுமார் 500 இளைஞர்களுக்கு அந்த வாய்ப்புகள் அற்றுப் போகும் நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் இவர்கள் சட்டவிரோதமாக அந்த நாட்டில் தங்கியிருப்பதனால் இலங்கையின் நற்பெயருக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே தொழில் ஒப்பந்தங்கள் காலாவதியாகியுள்ள இலங்கையர்களின் குடும்பத்தவர்களும், உறவினர்களும் அவர்களை மீண்டும் நாட்டிற்கு திருப்பியழைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் அவர் கேட்டுள்ளார்.

# மகிந்த மீது விசாரணை நடத்தக்கூடாது நாடாளுமன்றில் போராட்டம்



(கொழும்பு)

நாடாளுமன்ற வளாகத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஒரு தொகுதி உறுப்பினர்கள் நேற்றைய தினம் போராட்டத்தில் ஈடுபட்டனர்

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு எதிராக விசாரணை நடத்தப்படக் கூடாது எனக் கோரியே இந்தப் போராட்டம நடத்தப்பட்டது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ விற்கு நெருக்கமான நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக் ஸவிடம் லஞ்ச ஊழல் தவிர்ப்பு ஆணைக்குழு இந்த வாரத்தில் விசாரணை நடாத்தப்படவுள்ளது.

வாக்கு மூலமொன்றை பதிவு செய்து கொள்வதற்காக ஆணைக்குழுவிற்கு ஆஜராகுமாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்தவிற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த அறிவிப்பிற்கு கடுமையான எதிர்ப்பை வெளியிடும் வகையில் குறித்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

# பொதுமயானத்தை இடம்மாற்ற பெரியகுளம் மக்கள் கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, பெரியகுளம் கிராமத்தில் போதிய வசதிகள் இன்றியும் மக்கள் குடியிருப்புக்களுக்கு மத்தியிலும் உள்ள மயானத்தினை இடமாற்றுமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி, கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள பெரியகுளம் கிராமத்தில் மக்கள் மீள்குடியிருப்புக்கு மத்தியில் உள்ள பொது மயானத்தை வேறு இடத்திற்கு மாற்றுமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த பொது மயானமானது பொது மக்கள் குடியிருப்புகளுக்கு மத்தியில் அதாவது மூன்று வீடுகளுக்கு இருபது மீற்றர் இடையில் குறித்த மயானம் அமைந்துள்ளது.

இதனால் சடலங்களை எரியூட்டும்போது பல்வேறு சிரமங்களை தாங்கள் எதிர்கொள்வதாகவும் தங்களுக்கு நிரந்தர வீடுகள் வழங்கப்பட்டு தாங்கள் இப்பகுதியில் நிரந்தரமாக வாழ்ந்துவருவதனால் இப்பகுதியில் உள்ள பொதுமயானத்தை பாதுகாப்பான இடம் ஒன்றுக்கு மாற்றுமாறு முன்னர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**(13). இங்கு தரப்பட்ட சொல்லுக்கு பொருத்தமற்ற விடையைத் தெரிவு செய்க**

45. வாவி
(1). மின்னேரியா (2). வானம் (3). தோபா (4). மாத்தளை

46. நட்சத்திரங்கள்
(1). வேட்டைக்காரன் (2). ஓரையன் (3). கரடி (4). முயல்

47. நீலாம்ஸ்ரோங்
(1). அப்பலோ (2). எட்வின் ஒல்ட்ரின் (3). யூரிககாரின் (4). நிலவு

48. நாடாளுமன்றம்
(1). ஜயவர்த்தனபுர (2). சபாநாயகர் (3). பிரதமமந்திரி (4). மக்கள்

**(14). பின்வருவனவற்றை தீர்த்து சரியான விடையின் கீழ் கோடிடுக**

49. குளிர்பானப் போத்தல் ஒன்றில் $\frac{1}{2}$ பங்கு பானம் இருந்தது. அதில் மேலும் அரைவாசியை சுமதி குடித்தாள். எனின் எஞ்சியுள்ள பானத்தின் அளவு
(1). $\frac{1}{4}$ (2). $\frac{1}{2}$ (3). $\frac{3}{4}$

50. ரூ.100000ஐ வைப்பிலிட்டிருந்த ஒருவன் அதில் ரூ.10000ஐ மீளப்பெற்றால் வங்கியில் எஞ்சியுள்ள பணம்
(1). ரூ.9000 (2). ரூ.90000 (3). ரூ.90990

51. ஒருவர் 100 தென்னங்கன்றுகளைக் கொண்டு வந்து ஒரு நிரையில் 10 கன்றுகள் வீதம் நட்டார். எனின் இங்குள்ள நிரைகளின் எண்ணிக்கை
(1). 10 (2). 8 (3). 100

## நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

(01). 1. சரி 2. பிழை 3. சரி 4. சரி 5. சரி
(02). 6. தினசரிப்பத்திரிகை 7. சஞ்சிகை 8. வாழ்த்துமடல் 9. முத்திரை
10. ஒலிப்பதிவு செய்தல் (03). 11. தொலைபேசி, தந்தி, இணையத்தளம், மின்னஞ்சல்
12. குமுதம், ஒளிபரசி, கல்கி, குட்டிச்சுட்டி 13. உதயன், வீரகேசரி, தினமுரசு
14. சித்திரைப்புத்தாண்டு, திருமணவாழ்த்து, பாராட்டின் போது, தீபாவளி
15. அறிவியல், கல்வி, விளம்பரங்கள், வேலைவாய்ப்பு (04). 16. புத்தகங்கள் 17. வெளிநாடுகளுடன்
18. தபாற்கந்தோருக்குச் 19. கடிதம் 20. தகவல்களைப் (05). 21.1 22.4 23.3
24.4 25.4 26.1 27.1 28.4 29.4 30.1 31.1 32.4 33.1 34.2
35.4 36.1 37.2 38.2 39.4 40.1 (06). 41. பிழை 42. சரி 43. சரி
44. பிழை 45. சரி (07). 46. கற்பித்தல் 47. பூங்காவை அமைத்தல் 48. பாடசாலை நிர்வாகம்
49. பாடசாலை அபிவிருத்தி 50. மாணவர்கள் (08). 51. பூங்கா
52. சுத்தமாக 53. மாணவர்களும் 54. பங்குபற்றுதல் 55. பாதுகாக்க
(09). 56. பெற்றோர், மாணவர்கள், ஆசிரியர், அதிபர் 57. வகுப்பறை கட்டுவதற்கு, அலுவலக தேவைக்கு 58. மலசலகூடத்தைச் சுத்தமாக வைத்திருத்தல், பாடசாலைத்தோட்டம் அமைத்தல், பாடசாலையையும் வகுப்பறையையும் சுத்தமாக வைத்திருத்தல், 59. இலகுவில் கற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும், பரிசோதனைகள் உடனுக்குடன் கற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும் 60. உமது பாடசாலையும் பாடசாலை தொடங்கிய ஆண்டையும் குறிப்பிடுக 61. அன்று - சிறிய இடம், பொருளாதார வசதி குறைவு, அங்கத்தவர்கள் குறைவு இன்று - பரந்த இடம், பொருளாதார வசதி கூட, அங்கத்தவர்கள் கூடுதல்
62. அதிபரின் பெயரை குறிக்கவும் 63. விரும்பிய பெயரை குறிக்கவும் 64. வீதியின் பெயரை குறிக்கவும்
(10). 65.1 66.2

**இப் பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்**



# தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை முன்னோடி - 2015

பகுதி - I
1மணி 15நிமிடம்

# கல்வி முரசு

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.

**(01). தரப்பட்டுள்ள குறியீட்டிற்கிணங்க பொருத்தமான குறியீட்டின் கீழ் கோடிடுங்கள்**

01. பட்டம் என்பது 3214 ஆல் குறிக்கப்பட்டிருக்குமாயின் படம் என்பதைக் குறிப்பது
(1). 214 (2). 341 (3). 314

02. கருணை என்பது ACEG, என்பதால் குறிக்கப்பட்டிருக்குமாயின் கனை என்பதைக் குறிப்பது
(1). AEG (2). ACG (3). ACE

03. கடல் என்பதை □○△ என்பதால் குறிப்போமாயின் கல் என்பதை எவ்வாறு குறிக்கலாம்
(1). □○ (2). ○□ (3). □△

**(02). கூட்டினுள் தரப்பட்ட சொற்களைக் கொண்டு இடைவெளிகளை நிரப்புக**

| புகல்வி, | உள்ளம், | சுத்தம், | அசுத்தம், | மாதா, | கரை |
|---|---|---|---|---|---|

04. ஓரம் என்பதன் ஒத்தசொல் ……………………
05. தூய்மை என்பது ……………………
06. புதல்வன் என்பதன் பெண்பால் ……………………

**(03). பின்வரும் வினாக்களுக்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்து கோடிடுக**

07. 1 - 10 வரையான இலக்கங்களை உரோமன் இலக்கத்தில் எழுதும் போது பயன்படுபவை
(1). I, V, X (2). II, X, L (3). X, C, L

08. பூரணநிலவு தெரியும் நாள்
(1). அமாவாசை தினம் (2). பௌர்ணமி தினம் (3). மழை பெய்த தினம்

09. விமானத்தில் பயணம் செய்யும் பயணியிடம் முக்கியமாக இருக்க வேண்டிய ஆவணம்
(1). கடவுச்சீட்டு (2). விமானசீட்டு (3). சாரதிஅனுமதிப்பத்திரம்

10. சந்திரத் தரைக்கு மனிதர்களை எடுத்துச் சென்ற விமானத்தின் பெயர்
(1). அப்பலோ II (2). அப்பலோ I (3). அப்பலோ III

11. இலங்கையில் உள்ள நீர்வீழ்ச்சிகளுள் பம்பரகந்தை நீர்வீழ்ச்சியின் சிறப்பம்சம்
(1). அகலமான நீர்வீழ்ச்சி (2). உயரமான நீர்வீழ்ச்சி (3). அழகியநீர்வீழ்ச்சி

12. இரத்தினபுரி வாயிலாக களுத்துறை கடலில் சேரும் கங்கை
(1). மகாவலி கங்கை (2). களனிகங்கை (3). களுகங்கை

13. பஸ்வண்டியொன்றில் ஏற்பட முடியாததொன்று
(1). பணப்பை திருடு போதல் (2). மின்னலால் தாக்கப்படல் (3). மிதிபலகையில் இருந்து விழுதல்

14. மோட்டார்வாகன டயர் தயாரிக்கப்பட்ட பதார்த்தத்தினாலேயே தயாரிக்கப்பட்ட பொருள் ஒன்று
(1). முச்சக்கரவண்டி (2). மிதிபலகை (3). டியூப்

15. விதிவிபத்தொன்றில் அகப்பட்ட ஒருவரின் வாழ்நாள் முழுவதும் பாதிக்கக்கூடிய காரணி அல்லாதது
(1). முடம் ஆகுதல்
(2). மரணகாயங்கள் ஏற்படல்
(3) விபத்து ஏற்பட்ட இடத்தில் மக்கள் கூடுதல்

16. "வான்மடியில் தாரகை மின்னும் - கிணற்றின் மேல் நிலவு தெரியும்" இங்கு வான்மடி எனக் குறிப்பிடுவது
(1). வானம் (2). வயிறு (3). நிலவு

**(04). பின்வரும் சொற்கள் எதனை விரிவாக்க பயன்படுகின்றன என்பதை தெரிவு செய்க**

17. இனிமை, சுவை
(1). உணவுப்பொருட்கள் (2). பாடல் (3). பண்டிகை

18. அழகிய, பொருத்தமான, அலங்காரம் , ..........
(1). நாடகம் (2). சங்கீதம் (3). உடைகள்

19. குருவிகள், குஞ்சுகள், பாசம், ..........
(1). வீடுகள் (2). வானம் (3). குடும்பம்

**(05). கீழே தரப்பட்ட உருவை அவதானித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக**




20. இலங்கையின் தேசிய விமானச் சேவையை குறிக்கும் பெயரை ஆங்கிலத்தில் எழுதுக?
..........................................

21. விமானத்தினால் வெளியிடப்படும் சூழலை பாதிக்கும் பொருள் என்ன?
..........................................

22. பறவை ஒன்றுக்கும் விமானம் ஒன்றுக்கும் இடையில் உள்ள ஒற்றுமை ஒன்றை எழுதுக?
..........................................

23. நாம் விமானம் மூலம் வெளிநாடு செல்ல வேண்டுமாயின் எதனைப் பெற்றுக்கொள்ள வேண்டும்?
..........................................

24. விமானங்கள் நிறுத்தும் இடம் எவ்வாறு ஆங்கிலத்தில் அழைக்கப்படும் என எழுதுக
..........................................

**(06). பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான பெண்பாற் சொற்களை தெரிவு செய்க**

25. நிபுணன் - (i). நிபுணை (ii). நிபுணி (iii). நிபிணி
26. நாயகன் - (i). நாயகள் (ii). நாயகி (iii). நாயகை
27. குமரன் - (i). குமரி (ii). குமாரி (iii). குமாரிகை

**(07). இடைவெளி நிரப்புக**

28. நுளம்பு → டெங்கு காய்ச்சல், நுளம்பு → மலேரியா காய்ச்சல்
வீட்டு ஈ → கொலரா, வீட்டு ஈ → ..................

29. இலங்கை வாழ் மக்களின் சில பழக்கவழக்கங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றில் பொருத்தமற்றதன் கீழ் கோடிடுங்கள்

A - விளக்கு வைத்தபின் பணம் கொடுப்பதில்லை
B - சனிக்கிழமைகளில் நீராடுதல்
C - வருடப்பிறப்பிற்குப் புது உடைகள் தைத்து உடுத்துதல்
D - வியாழக்கிழமைகளில் முதன் முதல் ஒரு வீட்டிற்குச் செல்வதில்லை
E - போயா தினங்களில் சோறு உண்ணாதிருத்தல்

**(08). சரியான விடையின் கீழ் கோடிடுக**

30. பச்சைக்கிளி கனிந்த பழத்தை கொத்தித்தின்றது. இங்கு உள்ள பயனிலை அடைமொழி
(1). கனிந்த
(2). கொத்தி
(3). பச்சை



31. ஊன் என்பதன் ஒத்த சொல்
(1). இறைச்சி (2). உண்ணல் (3). உணவு

**(09). பொருத்தமான சொல்லைக் கொண்டு இடைவெளியை நிரப்புக**

32. புகையிரதம் நிறுத்துமிடம் - புகையிரத பொறுப்பதிகாரி S.M
பொலிஸ் நிலையம் - பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி H.Q.I
தபால் நிலையம் - ..............................P.M
பத்திரிகை - தகவல்களைத் தெரிந்து கொள்ளல்
புத்தகம் - அறிவைப் பெற்றுக்கொள்ளல்
தொலைபேசி - ..............................

**(10). வாழ்க்கையில் நாம் சந்திக்கும் சில நிகழ்வுகள் தரப்பட்டுள்ளன. அவற்றில் பொருத்தமற்ற நிகழ்வின் கீழ் கீறிடுக**

33. கடும் மழை பெய்யும் ஒரு நாள்
A - நீர் நிறைந்த சேற்றுக்குழிகள்
B - பாதைகள் வழியே குடைபிடித்துச் செல்லும் மனிதர்கள்
C - வெட்ட வெளிகளில் வேலையில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள்
D - மழைக்கோட் அணிந்த பொலிஸ்காரர்கள்
E - நனைந்த ஆடைகள்

34. பஸ் மற்றும் புகைவண்டி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள சந்தர்ப்பம்
A - பாடசாலைகள் வழமை போல் நடைபெறும்
B - பாதைகள் எங்கும் நிரம்பி வழியும் மக்கள் கூட்டம்
C - கவலையுடன் கூடிய முகங்கள்
D - மக்கள் கூட்டம் நிறைந்த பஸ் நிறுத்துமிடங்கள
E - தனியார் வாகனங்களை நிறுத்தும் பொலிஸ்காரர்கள்

**(11). சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக**

35. வலைப்பின்னல் கூட்டைக் கட்டக்கூடியது
(1). எலி (2). சிலந்தி (3). சிட்டுக்குருவி

36. சுதந்திரம் பெற்ற பின்னர் இலங்கையில் அமைக்கப்பட்ட முதலாவது விமானநிலையம்
(1). கட்டுநாயக்க (2). இரத்மலானை (3). இங்குரக்கொடை

37. பயிரிடப்படுவதன் மூலம் பெறப்படாத சமையலுக்கு மிக முக்கியமான உணவுப்பொருள்
(1). சுண்ணாம்பு (2). உப்பு (3). காய்ந்த மிளகாய்

38. மின்தாக்கத்திலிருந்து பாதுகாப்புப்பெற உதவுவது
(1). ஈரத்துணி
(2). காய்ந்த பலகை
(3). பச்சைமரம்

39. இலங்கையின் வட திசையில் உள்ள நகரம்
(1). கண்டி
(2). மட்டக்களப்பு
(3). யாழ்ப்பாணம்

**(12). இங்கு குறிப்பிடப்பட்டுள்ள இலக்கங்களை உரோமன் இலக்கத்தில் எழுதுக**

40. Nine ..........................................
41. Eleven ..........................................
42. seventeen ..........................................
43. Twenty nine ..........................................
44. Twenty one ..........................................

# 2015 ஆம் ஆண்டுக்கான கம்பன் விழா

# கொழும்பு இராம கிருஷ்ண மண்டபத்தில்

கொழும்பு கம்பன் கழகம் கவிச்சக்கரவர்த்தி கம்பன் பெயரிலான பெரும் தமிழ் விழாவினை எடுத்து வருகிறது. அவ்விழாக்களின் வரிசையில் 2015 ஆம் ஆண்டுக்கான கம்பன விழா எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி முதல் நான்காம் திகதி வரை கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கம்பன் விழாவில் வழமை போலவே இவ்வாண்டும் பட்டிமன்றம், கவியரங்கம், வழக்காடு மன்றம். சுழலும் சொற்போர். கருத்தரங்கம், குறள் அரங்கம், ஆய்வரங்கம், இலக்கியப் பேருரை ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. இவை தவிர நாவலர் விருது, விபுலானந்தர் விருது, மகரந்தச்சிறகு விருது, நுழைபுல் ஆய்வு விருது, ஏற்றமிகு இளைஞர் விருது ஆகிய அறக்கட்டளை விருதுகள் இலங்கையர் ஐவருக்கு வழங்கப்படவுள்ளன.

அத்தோடு விழாவின் முதல் நாளில் அமரர் துரைவிஸ்வநாதன் நினைவுப் பேச்சுப் போட்டி, அமரர் பொன் பாலசுந்தரம் நினைவுக் கவிதைப் போட்டி ஆகியவற்றில் கலந்து கொண்டு வெற்றியீட்டியோருக்குப் பதக்கங்களும், கிழக்கு மாகாணத்தில் சமூகப் பணியாற்றி வரும் யோகர் சுவாமி மகளிர் இல்லத்திற்கு அறக்கொடையும் வழங்கப்படவுள்ளன.

விழாவின் முதல் நாளில் இவ்வாண்டும், இராம நாடகக் கீர்த்தனை பாகம் இரண்டு, திருவாசகம் ஆகிய நூல்களும் கடந்த ஆண்டு கம்பன் விழா இறுவட்டும் வெளியிடப்படும்.

இவ்வாண்டு விழாவினை மலேசிய இளைஞர் விவகார விளையாட்டுத் துறை துணை அமைச்சரும். மலேசிய கண்ணதாசன் அறவாரியத்தின் தலைவருமான டத்தோ எம். சரவணன். தொடக்கி வைக்கிறார். தமிழ்நாட்டைச் சேர்ந்த இந்திய பாரதீய ஜனதாக் கட்சியின் தேசிய செயற்குழு உறுப்பினரும் பொற்றாமை கலை இலக்கியக் கழகத்தின் தலைவருமான இல. கணேசன் முதல் நாள் விழாவில் சிறப்புரை ஆற்றவுள்ளார்.

கொழும்புக் கம்பன் கழகத்தின் பெருந்தலைவர் ஓய்வு பெற்ற நீதியரசர் ஜெ. விஸ்வநாதன் தலைமையில் ஆரம்பமாகும் முதல் நாள் விழாவில் கம்பன் கழகத்தின் தலைவர் தெ. ஈஸ்வரன் வரவேற்புரை நிகழ்த்தவுள்ளார். இவ்வாண்டு விழாவில் இலங்கை, இந்தியா, மலேசியா, அவுஸ்ரேலியா ஆகிய நாடுகளிலிருந்து பேச்சாளர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள்.

இவ்வாண்டு விழாவின் நிறைவு நாளில் தமிழ் இனத்தின் உயர்வுக்காய்ப் பாடுபட்ட ஓர் பேரறிஞருக்கு ரூபா ஒரு இலட்சத்துடன் கூடிய கம்பன் புகழ் விருதும் இனப்பற்றோடு செயலாற்றிய ஆறு துறைசார்ந்த அறிஞர்களுக்கான கௌரவமும் வழங்கப்படவுள்ளன. விழா நிகழ்ச்சிகள் காலையும் மாலையும் நடைபெறவுள்ளன. விழாவினை முன்னிட்டு மண்டபத்தில் புத்தகக் கண்காட்சிக்கான ஒழுங்கும் செய்யப்பட்டுள்ளன.

# விசேட கலந்துரையாடல்

மன்னார் மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினர்களுக்கும் வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன் அவர்களுக்குமான விசேட சந்திப்பொன்று நேற்று முன்தினம் நண்பகல் 12 மணியளவில் மன்னார் தனியார் பேருந்து நிலையத்தில் இடம்பெற்றது.

இவ் விசேட ஒன்றுகூடலினை தனியார் பேருந்து சங்க நிர்வாக சபையினர் ஏற்பாடு செய்திருந்தனர்.

இதில் புதிய நேரசூசிகள் மற்றும் பேருந்து வழிகள் போன்றவையும் மற்றும் சங்கத்தினர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. (25)

# சகோதரனை அனுமதிக்கச் சென்றவேளை சகோதரி வைத்தியசாலையில் அடைப்பு

## வவுனியா பொது வைத்தியசாலையில் சம்பவம்

நோயாளியான தனது சகோதரனை மருத்துவமனையில் அனுமதிக்கச்சென்ற பெண்ணை வைத்தியசாலை ஊழியர்கள் அடைத்து வைத்த சம்பவமொன்று வவுனியா பொது மருத்துவமனையில் இடம்பெற்றுள்ளது.

கடந்த 17 ஆம் திகதி வவுனியா பொது மருத்துவமனையில் மனநிலை பாதிக்கப்பட்ட நோயாளியை அனுமதிக்கச் சென்ற வயதான பெண்மணி மனநிலை பாதிக்கப்பட்டவர்களின் நோயாளர் விடுதியில் ஆறு மணிநேரம் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

மனநிலை பாதிக்கப்பட்ட நோயாளி கடந்த 13 நாட்களாக வவுனியா பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் மருத்துவமனை ஊழியர்களால் கடந்த 16 ஆம் திகதி நோயாளியின் சகோதரியின் வீட்டில் அவர் குணமாகி விட்டதாகத் தெரிவித்து ஒப்படைக்கப்பட்டார்.

ஆனால் அவர் குணமடையவில்லையென்றும் நோயின் தாக்கம் அதிகமாக இருந்ததன் காரணமாக தாம் மீண்டும் இரவு 11.30 மணியளவில் வவுனியா பொது மருத்துவமனையில் நோயாளியை அனுமதிக்க சென்றதாகவும் அவரின் சகோதரி தெரிவித்துள்ளார்.

மருத்துவமனையின் பொறுப்பான மருத்துவர் நோயாளியை விடுதியில் அனுமதிக்க சிபாரிசு செய்த போதும் நோயாளர் விடுதியில் உள்ள ஊழியர்கள் நோயாளியை அனுமதிக்க மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

எனினும், நோயாளியை விடுதியில் அனுமதித்தே ஆகவேண்டும் என குடும்பத்தினர் கோரியதால் சினமடைந்த மருத்துவமனை ஊழியர்கள் மனநோயாளியின் சகோதரியை மனநோயாளிகள் விடுதியில் தடுத்துவைத்துள்ளனர்.

அத்துடன் குறித்த பெண்மணியின் புதல்வியும் இரவு 12.00 மணியளவில் வெளியில் அனுப்பப்பட்டதாக அந்தப் பெண்மணி முறைப்பாடு தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து மருத்துவமனையின் பணிப்பாளரிடம் முறையிட்ட போது அவர் பொறுப்புடன் பதில் கூறவில்லையென்றும் தடுக்கப்பட்ட பெண்மணியின் புதல்வன் மருத்துவமனையினுள் புகைப்படம் எடுத்ததாகக் கூறி பொலிஸ்நிலையத்தில் ஒப்படைக்கப்போவதாக அச்சுறுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து இலங்கை மனித உரிமை ஆணைக்குழு மற்றும் வடமாகாண சுகாதார அமைச்சிலும் முறைப்பாடு செய்துள்ளதாக பாதிக்கப்பட்ட மனநோயாளியின் சகோதரர் தெரிவித்துள்ளார்.

---

# நடிப்பாற்றலால் நம்மைக் கவர்ந்தவர் நடிகமணி வைரமுத்து

ஆயகலைகள் அறுபத்துநான்கும் மனித இனத்தின் பெரும் பொக்கிஷங்களாகும். இந்தக் கலைகள் மனித வாழ்வில் பெரும் பங்கு வகிப்பதோடு அவனை நேர்வழியிலும் இட்டுச் செல்கின்றன. அத்துடன் மன ஆறுதலையும் உளத்தேறுதலையும் தந்து நிம்மதியாக வாழ உதவியும் நிற்கின்றன.

நடிப்புக்கு ஒரு கலைஞன் நடிகமணி வைரமுத்து. அவருடைய நடிப்புக்கு ஈடு இணை இடையாது. கலாநிதி வி.வி.வைரமுத்து என்றால் அறியாதவர்களே இருக்கமுடியாது. அவர் ஒரு தேசியக் கலைஞர். பாடிக் கொண்டே நடிப்பதென்பது இலேசான காரியமல்ல. கலையுலகில் இவருக்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு. நாடக நடிகர்கள் பலர் இருந்தார்கள். ஆனால் நடிப்பாற்றல் மூலம் நம்மைக் கவர்ந்தவர் நடிகமணி என்றால் அது மிகையாகாது.

1924 ஆம் ஆண்டு காங்கேசன் துறையிலே பிறந்த இவர் தமது ஆரம்பக் கல்வியை நடேஸ்வராக் கல்லூரியிலே கற்றார். பின்பு வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரியில் உயர்கல்வியைக் கற்று இரத்தினபுரியிலே ஆசிரியராகக் கடமையாற்றினார்.

கலைச்சேவைக்கே தம்மை அர்ப்பணித்த நடிகமணி தமிழ் இலக்கண இலக்கிய நூல்களையும் கற்றுத் தேறிஓர் இசைக் கலைஞனாக, ஹார்மோனியம், மிருதங்கம், வயலின், ஜலதரங்கம், புல்லாங்குழல் முதலானவற்றைப் பயின்று ஒரு வாத்தியக் கலைஞனாக மற்றும் சிறந்த நாடக நடிகனாகப் பிரகாசித்தார்.

"அரிச்சந்திர மயான காண்டம்" இவருக்குப் புகழ் தேடித் தந்த பெருங் காவியம். மயானத்தில் இவரது நடிப்பு தனித்துவமானது. இவர் "பிறந்தது மண்மேல்" என்று பாடத்தொடங்கினால் கணீரென்று ஒலிக்கும் நாடகம் பார்த்துக்கொண்டிருந்த இரசிகப் பெருமக்கள் தம்மை மறந்து அரிச்சந்திரனோடு ஒன்றிப் போவார்கள்.

இவருடைய அழகான சிறப்புத் தோற்றமும் குரல் வளமும் நடிப்பாற்றலும் இவருக்கு நிகர் இவரே. ஒப்பாரும் மிக்காரும் இல்லாத ஒரு கலைமா மேதையாகத் திகழ்ந்த இவர், பெருமை இல்லாத ஓர் அருமை மனிதர்.

தன்னுடைய கல்விக் குருவாக விளங்கிய வளர்ப்புத் தந்தை முருகேசு அதிபர் அவர்களையும் இசைக்குருவான தாய்மாமன் பிள்ளை நாயகத்தையும் என்றுமே மறக்காத ஓர் அருங்கலைஞர்.

இலங்கையில் பலராலும் போற் றிப் பாராட்டிப் புகழப்பட்ட நடிகமணி அவர்கள் இந்திய நடிகர் திலகம் சிவாஜிகணேசனாலும் பாராட்டுப் பெற்றவர்.

அதுமாத்திரமன்றி, தென்னிந்தியக் கலைஞர்களான ரி.கே.பகவதி, ரி.கே.சண்முகம், குலதெய்வம் இராஜகோபால், இயக்குநர் ஸ்ரீதர், ஜெய்சங்கர், நாகேஷ், அசோகன் முதலானோர் இலங்கைக்கு வந்தபோது இவருடைய அரிச்சந்திரன் நடிப்பைப் பார்த்து வெகுவாகப் பாராட்டினர். மேலும் காங்கேசன்துறை பட்டினசபைத் தலைவராக இருந்த ஜெயபாலசிங்கம் என்பவரின் ஏற்பாட்டில் நடிகர் ஜெய்சங்கரினால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

இந்திய கதாப்பிரசங்கமணி திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள் யாழ்ப்பாணம் வந்தபோது,

நடிகமணியைப் பாராட்டிப் பேசி வாழ்த்துக்கூறியதோடு தமது ஒப்பத்துடன் கூடிய நீதிநூல்களைப் பரிசாகவும் வழங்கினார். அத்துடன் சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம் அவர்களும் இவரது மயான காண்டத்தைப் பார்த்து வெகுவாகப் பாராட்டினார்.

நடிகமணியின் நடிப்பாற்றல் மயான காண்டத்தில் மட்டுமன்றி சத்தியவான் சாவித்திரி, அல்லி அர்ச்சுனா, பூதத் தம்பி, வள்ளி திருமணம், பவளக்கொடி, ஏழு பிள்ளை நல்லதங்காள், பக்த நந்தனார், இரணியன், திருநீலகண்டர் முதலிய நாடகங்களிலும் மிகச் சிறப்பாக வெளிப்பட்டிருக்கின்றது.

இவர் நடித்த பெண் வேடங்களும் சோடைபோனதில்லை. அந்த அந்தப் பாத்திரத்துக்கு ஏற்றாப்போல அந்தப் பாத்திரமாகவே மாறிவிடும் இவரது இயல்பு பாராட்டுக்குரியது. சில நாடகங்களில் வில்லன் பாத்திரமும் செய்திருக்கின்றார்.

1944 ஆம் ஆண்டு கலைஞர் உருத்திராபதியுடன் இணைந்து 'யூடிஸ்' எனும் ஆங்கில நாடகத்திலும் நடித்துப் புகழீட்டியுள்ளார். இவரது நடிப்பாற்றலைக் கேள்விப்பட்ட இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த தமிழ் நிகழ்ச்சித் தயாரிப்பாளர் மு.ஆ.வாசகர் இவருடைய நாடகங்களை வானொலிக் கலையகத்திலும் மேடையேற்றி ஒலிபரப்புச் செய்துள்ளார். ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த வி.விக்கினேஸ்வரன் என்பவர் நடிகமணியின் அரிச்சந்திர மயான காண்டத்தை முதல் முதலாக ஒளிரப்புச் செய்தார்.

1959 ஆம் ஆண்டில் காங்கேசன் துறைக்கு வந்திருந்த லண்டன் மாநகர ஒளிபரப்பு நிலையத்தினர் நடிக மணியின் மயான காண்டத்தை பல நாடுகளும் பார்த்து மகிழும் வண்ணம் ஒளிப்பதிவாக்கி ஒலிபரப்புச் செய்தது பெருமைக்குரிய விடயமாகும். இசை நுணுக்கங்களை அறிந்து நாடகம் நடிக்கும்போது சுருதி பிசகாமல் பாடுவார் நடிகமணி நாடகத்தை உயிர்போல நேசித்தவர்.

பாரம்பரிய கலைகளை வளர்த்து அதற்காகவே தம்மை அர்ப்பணித்து வாழ்ந்த நடிகமணி 1989 இல் இறைபதமடைந்தார். இவரது நடிப்புத் திறனுக்காக யாழ். பல்கலைக்கழகம் 2004 இல் தேகாந்த நிலையில் இவருக்குக் கலாநிதிப்பட்டம் வழங்கிக் கௌரவித்தது.



இரவு பகல் பாராமல் கலைக்காகவே வாழ்ந்த நடிகமணியின் ஆற்றல் அளப்பரியது. அவர் மறைந்தாலும் அவரது புகழ் மறையாது. காலத்தால் அழியாத காவிய நாயகனாகத் திகழ்ந்த நடிகமணி வி.வி.வைரமுத்துவை கலையுலகம் நினைவு கூர்ந்து அஞ்சலித்து நிற்கின்றது. தேசியக் கலைஞனான நடிகமணியின் புகழ் என்றும் அழியாது. அவரது இரசிகர்கள் அன்னாரை மறக்கவே மாட்டார்கள். எங்கு மயான காண்டம் நடந்தாலும் அவர் நிச்சயம் நினைவுகூரப்படுவார் என்பது மட்டும் உண்மை.

கலாபூஷணம்
இராசையா ஸ்ரீதரன்

# ஈராக்கில் தொடரும் மோதல்களால் ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேற்றம்

## ஐ.நா. சபை தகவல்

ஈராக் இராணுவத்துக்கும் இஸ்லாமிய அரச கிளர்ச்சியாளர்களுக்கும் இடையில் இடம் பெற்றுவரும் கடும் மோதலையடுத்து, ரமாடி நகரிலிருந்து ஆயிரக்கணக்கான பொதுமக்கள் இடம்பெயர்ந்து சென்றுள்ளனர். கடந்த சில நாட்களில் ரமாடி நகரத்திலிருந்து 4,000த்துக்கும் அதிகமான பொதுமக்கள் இடம் பெயர்ந்து சென்றுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது. ஈராக் இராணுவத்துக்கும் இஸ்லாமிய அரச கிளர்சியாளர்களுக்கும் இடையில் தொடரந்தும் இடம்பெற்றுவரும் மோதல்களை அடுத்து இந்த இடப்பெயர்வுகள் இடம்பெற்றுள்ளதாக ஐ.நா. சுட்டிக்காட்டியுள்ளது.



மேலும், மோதல்கள் ஆரம்பித்தது முதல், அன்பார் மாகாணத்தில் அமைந்துள்ள ரமாடி நகரத்தில் இருந்து 90,000 பொது மக்கள் வெளியேறியுள்ளதாகவும் ஐ.நா. தகவல்கள் கூறுகின்றன. புதிதாகப் பிறந்த குழந்தைகள் உட்பட பலர் இறந்துள்ளதாகவும், மக்கள் தமது உடைமைகளை முதுகில் சுமந்து கொண்டு வெளியேறுவதாகவும் ஐ.நா: உறுதி செய்துள்ளது.

இதேவேளை, 100ற்கும் அதிகமான குழந்தைகள் மரணமடைந்துள்ளதாக பாக்தாத் மாகாணசபைத் தலைவர் ரியாட், சர்வதேச ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார். கடந்த சில நாட்களாக இடம்பெற்றுவந்த மோதலையடுத்து, ஈராக் விசேட படையினர், ரமாடி நகரை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதுடன் அங்கு நிலைகொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதியை கொல்ல முயற்சி குற்றவாளிக்கு 12 வருட சிறை

துருக்கி ஜனாதிபதியை கொலை செய்ய முயன்ற நபருக்கு, 12ஆண்டுகள் சிறைத் தணடனை வழங்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு, அரச நிகழ்ச்சியில் கலந்து கொள்ளச்சென்ற துருக்கி ஜனாதிபதி தய்யிப் அர்டாகன் மீது, இனந்தெரியாத நபரொருவர், துப்பாக்கிப் பிரயோகம் மேற கொண்டார். இதன்போது மீண்டும் துப்பாக்கியால் சுட முயற்சித்த போது, பாதுகாப்பு அதிகாரிகள் அவரை சுற்றி வளைத்துப் பிடித்தனர்.



இதனையடுத்து, பர்ஹத் இல்திஜ் என்ற, குறித்த குற்றவாளி மீது கொலை முயற்சி வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம், பர்ஹத்துக்கு 11 ஆண்டுகளும் 8 மாதங்களும் சிறைத் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தது.

# ஜப்பானில் சுனாமி எச்சரிக்கை

ஜப்பானின் தெற்கு பகுதியில், தைவானுக்கு கிழக்கே நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. நேற்று அதிகாலை ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் 6.8 என ரிக்டர் அளவுகோலில் உணரப்பட்டுள்ளதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.



இதன் காரணமாக சுனாமி எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

# வடகொரிய ஜனாதிபதி மலையில் ஏறிச் சாதனை



வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் அந்நாட்டின் உயரமான மலைச்சிகரத்தின் மீது ஏறி சாகசம் செய்துள்ளார். வட கொரியாவிற்கும் சீனாவுக்கும் இடையேயான எல்லைப்பகுதியில் 9003 அடி உயரத்தில், பக்து என்ற உயரமான மலைச்சிகரம் உள்ளது.

இந்தப் பிரமாண்டமான மலைச்சிகரத்தில் ஏறிய அந்நாட்டின் ஜனாதிபதி கிம் ஜாங் உன், இராணுவ படைக்குழுக்களுக்கு தனது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார். கிம்மின் இச்செயல் அந்நாட்டு மக்களை வியப்பில் ஆழ்த்தியதுடன், இராணுவ வீரர்களையும் நெகிழ்ச்சியடையச் செய்துள்ளது.

இதுகுறித்து கிம் கூறுகையில், எந்த அணு ஆயுதமும் கொடுக்க முடியாத மனோ வலிமையை பக்து மலையேற்றம் எனக்குத் தந்தது என கூறியுள்ளார்.

# ஐ.எஸ்.ஐ.எஸ்.இன் வெறிச்செயல் கிறிஸ்தவர்கள் துடி துடிக்க கொலை

எத்தியோப்பிய நாட்டைச் சேர்ந்த 30 கிறிஸ்தவர்களை ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் துடிக்கத் துடிக்கக்கொல்வது போன்ற இரண்டாவது வீடியோ வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

லிபியாவில் உள்ள ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை வீடியோ ஒன்றை வெளியிட்டனர். சுமார் 29 நிமிடங்கள் பதிவாகியுள்ள இந்த வீடியோவில் பிணையக் கைதிகளின் கண்களைக் கட்டி கடற்கரை ஓரமாக தீவிரவாதிகள் இழுத்து வருகின்றனர். பின்னர், கிறிஸ்தவர்களில் 15 நபர்களை மண்டியிட வைத்து துடிக்கத் துடிக்க தலையை துண்டித்துக் கொல்கின்றனர். எஞ்சி உள்ள 15 கிறிஸ்தவர்களின் பின் தலையில் துப்பாக்கியால் சுட்டுக் கொல்வது போல் அந்த வீடியோவில் காட்சிகள் பதிவாகியுள்ளன.



இக்கொடூரத்தை அரங்கேற்றிய தற்குப் பிறகு தீவிரவாதிகளில் ஒருவன், ஒரு கையில் துப்பாக்கியை ஏந்தியவாறு மற்றொரு கையில் ஒரு அறிக்கையை உரத்த குரலில் வாசிக்கிறான். அப்போது, கிறிஸ்தவர்கள் இஸ்லாமிய மதத்திற்கு மாற வேண்டும் அல்லது குர்ரானில் கூறப்பட்டுள்ளது போல் இஸ்லாமியர்களுக்கு சிறப்பு வரியை செலுத்த வேண்டும் என தெரிவிக்கிறான். பின்னர், கமெராவிற்கு முன்னால் கையை நீட்டி பேசிய தீவிரவாதி, உங்களுக்குக கீழ் சிந்தப்படும் இஸ்லாமியர்களின் ரத்தம் மலிவானது அல்ல. சிலுவையைத் தாங்கியுள்ள நாடுகளே, இதோ நாங்கள் மீண்டும் வந்துவிட்டோம் என மிரட்டல் விடுக்கிறான்.

இதன் பிறகு, கடந்த பெப்ரவரி மாதம் வெளியிடப்பட்ட மற்றொரு கிறிஸ்தவர்களின் கொலை வீடியோவையும் தற்போது எடுக்கப்பட்ட வீடியோவையும் ஒன்றாகக் காட்டுவது போல் காட்சிகள் அமைந்துள்ளன. இந்த இரண்டு வீடியோக்களிலும் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதப் பிரிவான al-Furqan என்ற முத்திரை பதிந்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இரண்டு மாதங்களுக்குப்பிறகு, ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் 30 கிறிஸ்தவர்களை கொன்றது போல் வெளியிட்டுள்ள இரண்டாவது வீடியோவால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

# சவுதி வான் தாக்குதல் யேமனில் 85 பேர் பலி

உள்நாட்டுப் போர் இடம் பெற்று வரும் யேமனில் சவுதி அரேபியா மேற்கொண்ட தாக்குதலில் 85 கிளர்ச்சியாளர் கள் கொல்லப்பட்டுள்ளனர். யேமனில் கடந்த மார்ச் மாதம் 19 ஆம் திகதி முதல் உள நாட்டுப் போர் தீவிரமடைந்தது.



அந்நாட்டு அரசிற்கு எதிராக போரிட்டு வரும் ஹவுத்தி கிளர்ச்சி படையை ஒடுக்க சவுதி அரேபியாவும் அதன் நட்பு நாடுகளும் குண்டுத் தாக்குதலை மேற்கொண்டு வருகின்றன. இதற்கு ஹவுத்தி கிளர்ச்சியாளர்களும் மேற்கொண்டுவரும் எதிர்த் தாக்குதலில் உயிர்ச்சேதம், பொருட் சேதம் பெருமளவில் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று முன்தினம் யேமனில் ஹவுத்தி கிளர்ச்சிப் படையினருக்கெதிராக சவுதி நடாத்திய வான்வழித் தாக்குதலில், டாலே பகுதியில் 31 ஹவுத்தி கிளர்ச்சியாளர்களும் தயிஸ் நகரில் 10 ஹவுத்தி கிளர்ச்சியாளர்களும் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் போர் காரணமாக நாட்டின் பல்வேறு இடங்களில் நடைபெற்ற தாக்குதல் சம்பவங்களினால் 85 பேர் கொல்லப்பட்டுள்ளதாக அந்நாட்டு மருத்துவ மற்றும் இராணுவ அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இந்த அளவு விளம்பரத்திற்கு

1000/= ரூபா மட்டுமே

# வடமாகாண பொதுச்சேவையில் முறைகேடுகள் மிக அதிகம்

## - விசாரணையில் திடுக்கிடும் தகவல்கள் -

(யாழ்ப்பாணம்)

முறைகேடான நியமனங்கள் மற்றும் பதவியுயர்வு, இடமாற்றம் குறித்து 86 முறைப்பாடுகள் வட மாகாண சபைக்கு கிடைத்துள்ளதாக வடமாகாண சபையின் பிரதி அவைத்தலைவர் அன்ரனி ஜெகநாதன் நேற்று தெரிவித்தார்.

வடமாகாண சபையில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

பல ஆண்டுகளாக நடைபெற்ற நியமனம், இடமாற்றம் மற்றும் பதவியுயர்வுகளில் இடம்பெற்ற முறைகேடுகளை விசாரிப்பதற்கான குழு வடமாகாண சபையினால் நியமிக்கப்பட்டுள்ளது.

26 ஆவது மாகாண சபை அமர்வில், 7 பேர் கொண்ட விசாரணைக்குழு அமைக்கப்பட்டுள்ளது. அதற்கான நியமனக் கடிதங்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கடந்த கால நியமனங்களில் இடம்பெற்ற முறைகேடுகளை விசாரிப்பதற்கு அந்தக் குழுவினர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வ.அன்ரனி ஜெகநாதன் வடமாகாண பிரதி அவைத்தலைவர் குழுவின் தலைவராகவும், வடமாகாண சபை உறுப்பினர்களான பா.கஜதீபன், பா.பரம்சோதி, க.சர்வேஸ்வரன், க.சா. லிங்கநாதன், விந்தன் கனகரத்தினம், அ.அஸ்மின் ஆகியோர் அங்கம் வகிக்கின்றார்கள்.

முதலாவது கூட்டம் கடந்த மார்ச் மாதம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில், முறைகேடுகளை எவ்வாறு ஆராய்வதென தீர்மானிக்கப்பட்டு கடந்த 2010 முதல், 2015 மார்ச் மாதம் வரையான காலப்பகுதியில் வடமாகாணத்தில் நடைபெற்ற நியமனங்கள், இடமாற்றங்கள், பதவியுயர்வுகளில் நடைபெற்ற முறைகேடுகள் பற்றி பாதிக்கப்பட்டவர்கள் விபரங்களை அனுப்பிவைக்கும் போது, அதனை விசாரித்து வடமாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரனுக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் விண்ணப்ப திகதி கடந்த 15 ஆம் தகதி குறிக்கப்பட்டு, அதனூடாக அதிகமான விண்ணப்பங்கள் வடமாகாண சபைக்கு கிடைக்கப்பட்டுள்ளன.

கிடைக்கப்பட்டுள்ள முறைகேடு விண்ணப்பங்களை நேற்று (20 ஆம் திகதியிலிருந்து) 3 மாதத்திற்குள் விசாரணை செய்து, அறிக்கையினை வடமாகாண முதலமைச்சருக்கு சமர்ப்பிக்கவுள்ளதாகவும் அவர் கூறினார்.

வடமாகாணத்திலுள்ள பொதுச் சேவை மற்றும் உள்ளூராட்சி சபைகளில் உள்ள முறைகேடுகள் பற்றி ஆராயப்படவுள்ளது.

முறைகேடு முறைப்பாட்டு விண்ணப்பங்களில் வடமாகாணம் தவிர்ந்த மத்திய அரசாங்கத்தின் முறைகேடு விண்ணப்பங்களும் கிடைக்கப்பட்டுள்ளதாகவும், அதை விசாரணை செய்து மத்திய அரசின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்கவுள்ளதாகவும் அவர் கூறினார்.

குறித்த நியமனங்கள் மற்றும் பதவியுயர்வு, இடமாற்றங்கள் தொடர்பிலான முறைகேடு விண்ணப்பங்களை அனுப்பி வைப்பதற்கான திக்தி எதிர்வரும் 30 ஆம் திகதி வரைக்கும் நீடிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை, விஷேடமாக நேற்று மட்டும் முறையற்ற நியமனங்கள் குறித்த முறைப்பாடுகள் 59, பதவி உயர்வு குறித்த 18 முறைப்பாடுகளும், இடமாற்றம் குறித்து 9 முறைப்பாடுகளும் கிடைக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டினார்.

இந்த முறைகேடு குறித்த முறைப்பாட்டு விண்ணப்பங்கள் எதிர்வரும் வாரம் பரிசீலனை செய்வதுடன், கால எல்லை நீடிக்கப்பட்ட காலத்திற்குள் வரும் முறைப்பாடுகளையும் பரிசீலனை செய்யப்படுமென்றும் அவர் கூறினார்.

முறைப்பாடுகள் குறித்து இரகசியம் பேணப்படுமென்றும், பாதிக்கப்பட்டவர்கள் பயமின்றி தமது, முறைப்பாட்டு விண்ணப்பங்களை அனுப்பிவைக்க முடியுமென்றும், இந்தக் குழு நம்பகத் தன்மையுடையதுடன், உண்மையாக பாதிக்கப்பட்டவர்களின், நிலைமைகளைச் சரியான முறையில் சொல்லக்கூடிய அறிக்கையினை வழங்கவுள்ளதாகவும், அந்த அறிக்கையினால், சரியான மற்றும் தெளிவான பதில்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு கிடைக்குமென்றும் அவர் உறுதியளித்தார். (25)

# ஐ.நா.வின் குற்றவியல் மையம் கொழும்பில் கால்பதிக்கிறது

ஐக்கிய நாடுகள் அமைப்பின் போதைப் பொருள் மற்றும் குற்றவியல் தடுப்பு அலுவலகம் ஒன்று இலங்கையில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஐ.நா. போதைப்பொருள் மற்றும் குற்றவியல் தடுப்பு காரியாலய பிரதானி யூரி பெடட்டோவுக்கும் நீதிமன்ற அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பின் போதே இத்தீர்மானம் எட்டப்பட்டது.

இந்து சமுத்திரத்தை கேந்திரமாகக் கொண்டு உலக நாடுகளுக்கு போதைப்பொருள் விநியோகிக்கப்படுவதை தடுப்பதே இதன் பிரதான நோக்கமாகும்.

ஐ.நா.வின் போதைப்பொருள் தடுப்பு மற்றும் குற்றத்தடுப்பு சபையின் 13 ஆவது உயர் மட்ட குழுக்கூட்டம் கடந்த ஏப்ரல் மாதம் 13 ஆம் திகதி தொடக்கம் 17 ஆம் திகதி வரை கட்டாரின் டோஹா நகரில் நடைபெற்ற போதே இத்தீர்மானம் எட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ரயிலுடன் மோதி குடும்பஸ்தர் பலி



(மன்னார்)

மன்னார் தோட்டவெளி ஜோசப வாஸ் நகர்ப் பகுதியில் ரயிலில் தண்டவாளத்திலிருந்து ஆண் ஒருவரின் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது. கை மணிக்கட்டுடன் துண்டிக்கப்பட்டுள்ளதுடன் கால்களும் துண்டிக்கப்பட்ட நிலையில் குறித்த சடலம் ரயில் தண்டவாளத்தில் காணப்பட்டது.

இதுகுறித்து பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டதையடுத்து அங்குவந்த பொலிஸார் சடலத்தை மீட்டு வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

சடலம் இரு பிள்ளைகளின் தந்தையான ஞானராச ஜெரால்ட் காட்டர் (வயது - 35) என்பவருடையது என்று உறவினர்கள் அடையாளம் காட்டியுள்ளனர். நேற்று முன்தினம் இரவு குறித்த நபர் ரயிலில் மோதி உயிரிழந்திருக்ககூடும் என்று தெரிவிக்கப்படுகிறது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## நாடாளுமன்றில்....

எவ்வாறாயினும் முன்னாள் ஜனாதிபதியை இலஞ்ச ஆணைக்குழு தனது கடமைக்காக அழைத்துள்ளதாகவும் அதில் பிரச்சினைகள் இருந்தால், முன்னாள் ஜனாதிபதியின் சட்டத்தரணிகளுக்கு அதற்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய முடியும் எனவும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க கூறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை இலஞ்சம், ஊழல் மற்றும் மோசடி விசாரணை ஆணைக்குழுவிற்கு விசாரணைக்கு அழைத்துள்ளமை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான விமல வீரவன்ச, வாசுதேவ நாணயக்கார, தினேஷ் குணவர்தன, பந்துல குணவர்தன ஆகியோர் உட்பட பலர் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அவர்கள், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை இலஞ்ச ஆணைக்குழுவுக்கு விசாரணைக்கு அழைத்ததை வன்மையாக கண்டிப்பதாகவும் அப்படி நடக்காது என்பதற்கு அரசாங்கம் நிரந்தர உத்தரவாதத்தை வழங்க வேண்டியது அவசியம் எனவும் கூறினர்.

விமல் வீரவன்சவும் வாசுதேவ நாணயக்காரவும் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவை கடுமையாக விமர்சித்தனர். பிரதமர் நயவஞ்சக வேலை செய்வதாக வாசுதேவ நாணயக்கார குற்றம் சுமத்தினார்.

பிரதமரின் தேவைக்கு அமைய முன்னாள் ஜனாதிபதிக்கு இடையூறுகள் ஏற்படுத்தப்படுவதாக பந்துல குணவர்தன குறிப்பிட்டார்.

இதற்குப் பதிலளித்த பிரதமர் ரணில் விக்ரமசிங்க,

இலஞ்ச ஆணைக்குழுவின் பணிகளில் அரசாங்கம் தலையிடாது. அது ஆணைக்குழுவின் சுதந்திரமான தீர்மானம்.

சாட்சியம் ஒன்றை பெறவே முன்னாள் ஜனாதிபதிக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது. இதில் என்ன பிரச்சினை?. பிரச்சினைகள் இருந்தால், ராஜபக்ஷவின் சட்டத்தரணிகள் உரிய நடவடிக்கையை எடுக்க முடியும் என பிரதமர் குறிப்பிட்டார்.

மகிந்த ராஜபக்ஷவை இலஞ்ச ஆணைக்குழுக்கு கொண்டு செல்லக் கூடாது என கோஷமிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபைக்கு நடுவில் அமர்ந்து கொண்டனர்.

விமல் வீரவன்ச, வாசுதேவ நாணயக்கார, சஜின் வாஸ் குணவர்தன, மகிந்தானந்த அளுத்கமகே, தினேஷ் குணவர்தன, நாமல் ராஜபக்ஷ, உதித்த லொக்குபண்டார, பந்துல குணவர்தன உட்பட சுமார் 30 நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபைக்கு நடுவில் அமர்ந்து எதிர்ப்பை வெளியிட்டனர்.

கூட்டத்தை ஒத்திவைத்து, சபாநாயகர் செங்கோலை அப்புறப்படுத்திய பின்னரும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபைக்கு நடுவில் அமர்ந்திருந்தனர். இதனால் நாடாளுமன்றில் களேபர நிலைமையை அவதானிக்க முடிந்தது.

## ஆஜராக...

அவரது ஊடகப் பேச்சாளர் ரொஹான் வெலிவிட்ட தெரிவித்துள்ளார்.

இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழு எதற்காக அழைப்பு விடுத்தது என்பது பற்றி முன்னாள் ஜனாதிபதிக்கு தெரியவில்லை எனவும், உரிய தகவல்கள் கிடைக்கும் வரையில் காத்திருக்கப் போவதாகவும் தெரிவித்துள்ளார். யார் முறைப்பாடு செய்தார்கள் எதற்காக முறைப்பாடு செய்யப்பட்டது போன்ற விபரங்கள் கிடைக்கவில்லை என குறிப்பிட்டுள்ளார்.

வாக்குமூலமொன்றை அமைக்க ஆணைக்குழுவின் முன்னிலையில் ஆஜராகுமாறு மட்டுமே முன்னாள் ஜனாதிபதிக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து சட்டத்தரணிகள் ஆராயவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

## நற்பெயருக்கு...

கொண்டது முதல் இதுவரையில் சட்டவிரோதமான முறையில் பணம் சம்பாதிக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் தமக்கு ஒரே ஒரு வங்கிக் கணக்கே காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

ஹுனுப்பிட்டி இலங்கை வங்கியில் மட்டுமே தமக்கு கணக்கு இருப்பதாகவும் அதனை கடந்த 30 ஆண்டுகளாக பேணி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இராணுவ ஓய்வூதியமும் பாதுகாப்புச் செயலாளர் சம்பளமுமே தமக்குக் கிடைக்கப்பெற்றுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

குறைந்தபட்சம் தமக்கு கடன் அட்டை கூட இருக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார். அரசாங்கத்தின் ஒரு சில தரப்பினர் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளினால் பெரும் அதிருப்தி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

## தேர்தல்....

என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

தேர்தல் முறைமை சீர்திருத்தமானது சிறுபான்மைக் கட்சிகள் மற்றும் சிறிய கட்சிகள் மீது எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்தும் என்பது தொடர்பிலும், அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பிலுமான கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் மாலை, கொழும்பு, பம்பலப்பிட்டி, ஓசன் கொழும்பு ஹோட்டல் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றபோதே செயலாளர் நாயகம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

32 இற்கும் மேற்பட்ட சிறுபான்மை மற்றும் சிறிய கட்சிகளின் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், முற்போக்காளர்கள், சமூக நலன் விரும்பிகள், கல்வியியலாளர்கள் பலர் இக்கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

விருப்பு வாக்குகளை நீக்கி, விகிதாசாரத் தேர்தல் முறைமையினை சிறுபான்மை மற்றும் சிறிய கட்சிகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் செழுமைப்படுத்தி பேணுவது தொடர்பில் இங்கு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

அதேநேரம், இவ் விடயம் தொடர்பில் குழுவொன்றை அமைத்து, தேர்தல் முறைமை மாற்றத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்களைக் குறிப்பது, அது தொடர்பில் உரிய அனைத்துத் தரப்பினரும் ஆராய்ந்த பின்னர், ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், தேர்தல்கள் ஆணையாளர் ஆகியோருக்கும், பொதுமக்களுக்கும் அறிவிப்பது போன்ற விடயங்களை மேற்கொள்வது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இக் கலந்துரையாடலுக்கான அழைப்பினை சிறுபான்மை மற்றும் சிறிய கட்சிகளின் சார்பில் டக்ளஸ் தேவானந்தா, ரவூப் ஹக்கீம், மனோ கணேசன், பிரபா கணேசன், சுரேன் சுரேந்திரன் ஆகியோர் விடுத்திருந்தனர்.

## மகிந்தவை...

நாடாளுமன்ற உறுப்பினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதையடுத்து, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு தண்டனை வழங்குதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அதனை தடுத்து நிறுத்துமாறு கோரியும் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான 55 நாடாளுமன்ற உறுப்பினர்கள், கையெழுத்திட்ட கடிதம், சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டது.

இந்தநிலையிலேயே, இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் பணிப்பாளர் தில்ருக்சி டயஸ் விக்ரமசிங்கவை நாடாளுமன்றத்தில் முன்னிலையாகுமாறு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ நேற்று பிற்பகல் அழைப்பாணை அனுப்பியுள்ளார்.

இதற்கிடையே, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று பிற்பகல் நாடாளுமன்றத்துக்கு சென்று பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் இணைந்து ஆளும்கட்சி உறுப்பினர்களுடன் முக்கிய சந்திப்பில் ஈடுபட்டார்.

இதேவேளை ஜனாதிபதிக்கும், சபாநாயகர் சமல் ராஜபக்ஷவுக்கும் இடையில் முக்கிய சந்திப்பொன்று நேற்று மாலை இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# ஆலய வீதியை மீட்டுத் தருமாறு சந்திரகுமார் எம்.பி.யிடம் கோரிக்கை





(கிளிநொச்சி)

கிளிநொச்சி இரணைமடு ஆலயத்தின் வெளிவீதி மற்றும் இரணைமடுக்குளத்திற்கு செல்லும் தீர்த்தப் பாதை என்பவற்றை இராணுவத்திடம் இருந்து பெற்றுத்தருமாறு கனகாம்பிகை அம்மன் ஆலயத்தின் ஆலய பரிபாலனசபையினர் நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவருமான முருகேசு சந்திரகுமாரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்..

அண்மையில் ஆலயத்திற்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாரிடம் ஆலய பரிபாலன சபையினர் மேற்படி கோரிக்கையினை விடுத்துள்ளனர்.

மீள்குடியேற்றத்திற்கு பின்னர் ஆலயத்தின் வெளிப்புற வீதி மற்றும் இரணைமடுக்குளத்திற்கு செல்லும் தீர்த்தப் பாதை ஆலய வளாகத்தில் உள்ள காணியும் கட்டடமும் போன்வற்றை ஆலயத்திற்கு பெற்றுதருமாறு நாடாளுமன்ற உறுப்பினரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார், ஜனாதிபதி, பிரதமர், மீள்குடியேற்ற அமைச்சர் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு கடிதம் மூலம் தெரியபடுத்தி நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார்

இதன் போது வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை. தவநாதன், ஆலய பரிபாலன சபைத் தலைவர் ந.செல்வராசா, செயலாளர் சந்திரதாஸ், உப தலைவர் சிவகுமார் ஆசிரியர் விஜயசேகரம் ஆகியோரும் உடனிருந்தனர். (29)

## மீண்டும் சேவையில் இணைப்பு

(கொழும்பு)

வீதி அபிவிருத்தி அதிகார சபையில் வேலைவாய்ப்பையிழந்தவர்களை மீண்டும் இணைத்துக் கொள்ளுமாறு ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன நேற்று உத்தரவிட்டுள்ளார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

வேலைவாய்ப்பையிழந்தவர்கள் ஜனாதிபதியை சந்தித்து கலந்துரையாடியதையடுத்து ஜனாதிபதி இவ்வுத்தரவை பிறப்பித்துள்ளார்.

அதற்கமைய அனைத்து சேவையாளர்களையும் மீண்டும் பணியில் இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி உரிய அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையில் 235 பேர் வேலை வாய்ப்பை இழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தொழில்நுட்ப பாடநெறி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் க.பொ.த. (உயர் தர வகுப்பில் (2017) தொழில் நுட்ப பாடநெறியைத் தொடரவிரும்பும் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக பாடசாலை அதிபர் செல்வி கிறோஸ். தேவதயாளினி தேவராஜா அறிவித்துள்ளார்.

2014 க.பொ.த. (சாதாரண தரப் பரீட்சையில் கணிதம், தமிழ், விஞ்ஞானம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருப்பதோடு அவற்றுள் மூன்று பாடங்களிலாவது திறமைச் சித்தி பெற்றிருப்பவர்கள் விண்ணப்பிக்கலாமென்றும் பாடசாலை அலுவலகத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (01)

## ஆஸி. அகதிகளை இடமாற்றும் திட்டம் இரத்து

அவுஸ்ரேலியாவினால் புகலிடம் மறுக்கப்பட்ட இலங்கையர் உட்பட பல்நாட்டு அகதிகளை, நவுறுத்தீவிலிருந்து கம்போடியாவில் குடியமர்த்துவதற்காக மேற்கொண்ட நடவடிக்கை இரத்து செய்யப்பட்டுள்ளது. கம்போடிய தலைநகரான நொம்பென் இல் குடியேற்றப்படுவதற்காக முதல் தொகுதி அகதிகள் விசேட விமானத்தின் மூலமாக திங்கட்கிழமை அழைத்துச் செல்லப்படவிருந்த நிலையிலேயே இந் நடிவடிக்கை இரத்துச் செய்யப்பட்டுள்ளது. முன்னதாக, குறித்த அகதிகளை குடியமர்த்துவதற்கான இருபக்க ஒப்பந்தத்தில் கம்போடியாவும் அவுஸ்ரேலியாவும் கைச்சாத்திட்டிருந்தன.

கம்போடியாவுக்கு அனுப்பப்படவிருந்த அகதிகளில் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், ஈரான் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் காணப்பட்டுள்ளனர்.நவுறு தடுப்பு முகாம்களிலிருந்து வெளியேறுபவர்கள் சுய விருப்புடன் செல்பவர்களாக இருக்க வேண்டுமென இந்த ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளது. அத்துடன். தாமாக விரும்பி கம்போடியாவில் குடியேறுவோருக்கு கையில் பணம், வங்கியில் பணம், வேலைவாய்ப்பு, கல்வி வசதி, மொழிப்பயிற்சி, ஆரோக்கிய காப்புறுதி என பல சலுகைகள் கிடைக்கும் எனக் கூறப்படுகின்றது.இந்த ஏற்பாட்டின் காரணமாக அவுஸ்ரேலியாவுக்கு ஆண்டுக்கு 10 மில்லியன் அவுஸ்ரேலிய டொலர் செலவாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஏற்று நீர்ப்பாசன பொறிமுறை தோல்வியடையக்காரணம் என்ன?

### கிளிநொச்சி விவசாயிகள் கருத்து

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் வட்டக்கச்சி புழுதியாற்றில் பெருமளவு பணச்செலவில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஏற்று நீர்ப்பாசனத் திட்டம் தோல்வியடைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த யூன் மாதம் 320 இலட்சம் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்ட புழுதியாறு ஏற்று நீர்ப்பாசனம் திட்டம் இவ்வருடம் ஜனவரி 23 ஆம் திகதி மேட்டு நில விவசாய நடவடிக்கைகளுக்காக திறந்து வைக்கப்பட்டது.

புழுதியாறு ஏற்று நீர்ப்பாசனத்திட்டம் மூலம் குறித்த பிரதேசத்தை சேர்ந்த 100 விவசாயிகள் தலா ஒரு ஏக்கர் வீதம் 100 ஏக்கரில் மேட்டுநில பயிர்ச்செய்கையில் ஈடுபடுவார்கள் என்ற அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்ட திட்டத்தின் கீழ் இது வரைக்கும் இரண்டு விவசாயிகள் மாத்திரமே பணம் செலுத்தி பதிவுகளை மேற்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கும் விவசாயிகள்.இதனால் 320 இலட்சம் ரூபா செல்வு செய்து மேற்கொள்ளப்பட்ட ஏற்று நீர்ப்பாசனத்திட்டம் முற்றுமுழுதாக தோல்வியடைந்து விட்டது எனவும் குறிப்பிடுகின்றனர்.

தற்போதைய நிலையில் ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் பணம் செலுத்தி விவசாயம் செய்வதனை விட மின்சாரத்தை பயன்படுத்தி மேட்டுநிலப் பயிர்செய்கையில் ஈடுபடுவது இலாபமிக்கது எனவும் இதனால்தான் பெருமளவு விவசாயிகள் ஏற்று நீர்ப்பாசனத்திட்டத்தின் கீழ் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வரவில்லை எனவும் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் மேலும் சில பிரதேசங்களில் ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தை ஆரம்பிக்குமாறு ஒரு சிலரால் கோரிக்கை விடுக்கப்பட்டு வருவதனையும் ஆழமான பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டும் எனவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர். (29)

## மகிந்தவின் பாதுகாப்புக்கு அரசின் உத்தரவாதம் வேண்டும்

### வலுவடைகிறது கோரிக்கை

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பை உறுதி செய்வதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எழுத்து மூல உறுதிமொழி வழங்க வேண்டுமென ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த உறுதி மொழி வழங்கப்படும் வரையில் நாடாளுமன்றில் தொடர்ச்சியாக போராட்டம் நடத்தப்படும் என போராட்டம் நடத்திவரும் நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான டி.பி. ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறு கோரி மகஜர் ஒன்றை பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஜோன் அமரதுங்கவிடம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒப்படைத்துள்ளனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எழுத்து மூலம் உறுதி மொழி வழங்க வேண்டுமென அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவினால் முன்னாள் ஜனாதிபதிக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

எதிர்வரும் 24ஆம் திகதி ஆணைக்குழுவில் ஆஜராகி வாக்கு மூலமொன்றை அளிக்குமாறு கோரப்பட்டிருந்தது.

எனினும், இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டமையை ஏற்றுக் கொள்ளக் கூடாது என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளார்.

## நுரைச்சோலை மின்சாரம் யாருக்கு? புத்தளத்தில் நேற்று போராட்டம்

(கொழும்பு)

கல்பிட்டி- நுரைச்சோலை அனல் மின் நிலையத்திலிருந்து புத்தளம் கடலேரியின் ஊடாக அநுராதபுரத்துக்கு மின்சாரத்தை கொண்டு செல்லும் பொருட்டு புத்தளம் கடலேரியின் நடுவே அதி மின்வலு கொண்ட மின் கம்பங்களை நாட்டுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

புத்தளம் நகர மத்தியில் அமைந்துள்ள பிரதான சுற்று வட்டத்தில் நேற்று பகல் புத்தளம் மீனவர்கள் பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த ஆர்ப்பாட்டத்தை புத்தளம் வளர்பிறை மீனவர் சங்கம், அம்பர் மீனவர் சங்கம் மற்றும் புத்தளம் மக்கள் குரல் அமைப்பு என்பன இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

## கல்வி சாரா ஊழியர் கூட்டம்



இலங்கை கல்விசாரா ஊழியர் ஒன்றிணைந்த சங்கத்தின் யாழ் மாவட்டக் கிளையின் பொதுக்கூட்டம் கடந்த 18ஆம் திகதி யாழ்ப்பாணம் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. இலங்கை கல்விசாரா ஊழியர்களது நலன்களை மையமாகக்கொண்டு செயற்பட்டுவரும் இந்த அமைப்பினது கூட்டம் இலங்கை கல்விசாரா ஊழியர்களது பிரதம செயலாளர் A.K.W.விஜயசேகர மற்றும் உபதலைவர் காந்தராஜன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் தற்போது குடாநாட்டு கல்விசாரா ஊழியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டதாகவும் கடந்த சில மாதங்களுக்கு முன்னர்வரை அமைய தொழிலாளர்களாக பணிபுரிந்துவரும் ஊழியர்களது நிரந்தர நியமனங்கள் வழங்கப்படுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், பதவி உயர்வுகள் மற்றும் இடமாற்றங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டதாக தெரிவித்துள்ளனர்.

மேலும் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டதாகவும் இதில் ஏற்கனவே இருந்த நிர்வாகத்தினரே தொடர்ந்தும் செயற்படுவதற்கு ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். யாழ்மாவட்டத்தில் இந்த தொழிற்சங்கத்தினரால் பல்வேறுபட்ட நன்மைகள் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. இந்தக் கூட்டத்தில் 100 இற்கு மேற்பட்ட கல்விசாரா ஊழியர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை இல: 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 ஏப்ரல் 21ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.